நாம்கள், கணங்கள்... நமது முடிவுகள்



கே. ஜவாஹர்

CC-0. Mumukshu Bhawan Varanasi Collection.
Digitized by eGangotri

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள், கணங்கள்.....
நமது வாழ்க்கைகள்

த. கலாமணி



குணசேன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்கப்பட்ட எம். டீ. குணசேன அன் கம்பனி
217, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 11.
தொலைபேசி 323981-4 பக்ஸ் 323336 Email mdgunasena@mail.ewisl.net

© தம்பிஐயா கலாமணி

ISBN - 955 - 21 - 1015 - 7

வெளியீடு 2000

இந்தப் பிரசுரத்தின் எந்த ஒரு பகுதியையும், இதன் பதிப்பாளருடைய எழுத்து மூலமான முன் அனுமதியின்றி, மறுபிரசுரம் செய்யப்படவோ, எடுத்தாளப்படுவதற்கோ, சேகரம் செய்யப்பட்டு வெளிப்படுத்தப்படவோ, மாற்றம் செய்யப்படவோ, எந்த வடிவத்திலும் அதாவது எலக்ரோனிக் கையெழுத்துப்பட்ட அச்சுவடிவாக்கங்களிலோ, பிரதியச்சு வடிவிலோ, ஒலிப்பதிவாக்கமாகவோ வெளியிடப்படுவதற்கு உரியதல்ல.

வரையறுக்கப்பட்ட எம்.டீ.குணசேன அன் கம்பனியினரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. R - P - 2067 - 1/99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. கலாமணி

நாட்கள், கணங்கள்..... நமது வாழ்க்கைகள்

சிறுகதைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதந்து பேசத்தக்க படைப்புகள்

வடமராட்சியிலுள்ள அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பேராதனைப் பல்கலைக்கழகப் பௌதிகவியற் பட்டதாரியுமான திரு. தம்பிஐயா கலாமணி இயல், இசை, நாடகத் துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். மனித நடத்தைகளையும் வாழ்வினையும் கூர்ந்து அவதானிக்கும் அவரது வல்லமை, புரிந்துணர்வு, மனிதாபிமானம், மனிதமேம்பாட்டை அவாவும் தன்மை, பொருத்தமான உத்திகளைத் தேர்ந்து அனுபவங்களைக் கதைவடிவில் வெளியிடும் ஆற்றல் ஆகியவற்றை எடுத்துக் காட்டுவனவாக இத்தொகுதியிலுள்ள சிறுகதைகள் அமைகின்றன.

பிரமுகர்களைப் பெருமைப்படுத்துவதையும் அவர்களுடைய பாராட்டுக்களைப் பெறுவதையும் பெரிதெனவிரும்பி விளையாட்டுப் போட்டிகளை நடாத்துபவர்களின் செயல்களினால் பிஞ்சுக்குழந்தைகளின் உற்சாகம் வளர்க்கப்படுவதற்குப் பதிலாகச் சிதறடிக்கப்படுவதைக் கண்டவிடத்து உண்டான மன உளைச்சலைப் **பலூன்** என்ற சிறுகதை சித்திரிக்கிறது.

தம் கடின உழைப்பால் வளம்படுத்தி வாழ்ந்த ஒரு கிராமத்தை விட்டு அதன் மக்கள் இனப்பூசலின் விளைவான அனர்த்தங்களினால் அனாதைகளாக ஓடநேர்ந்த அவலத்தைக் காட்டும் **பிரளயம்** என்ற சிறுகதை, பிறந்த நிலத்துக்கும் மக்களுக்கும் இடையிலான ஆத்மார்த்த உறவினைத் துலக்குவதாகக் காணப்படுகிறது.

தாயை இழந்த பூனைக்குட்டிகள்பால் இரக்கம் பாலிக்கும் ஒரு பெண்ணின் கதையைக் கூறுவது **நீர்மை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதையினை ஆசிரியர் அமைத்துள்ள விதம் கதை சொல்லும் அவரது ஆற்றலுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். ஏழை மக்களின் துன்பவாழ்வு போர் நிலைக் குழப்பங்களால் மோசமான நிலையிலும் சுரண்டலும் கிண்டலும் "தவிச்சமுயலடிக்கும்" செயல்களும் இடம்பெறும் கேவலத்தை, மனச்சாட்சியுடையவர்களின் மனதை உறுத்தும் வகையில், எடுத்துக்காட்டுவது **யார்க்கெடுத்துரைப்பேன்** என்ற கதை.

சாதாரண மக்களுக்கு நம்பிக்கையினையும் ஆறுதலினையும் வாழ்க்கையிலே படிப்பினையையும் அளித்து வந்த கிராமியத் தெய்வம், ஆகமவழிபாட்டு முறையின் மேலாதிக்கத்தினால், சிறுதெய்வம் எனக் குருக்களும் கும்பாபிஷேகமும் இன்றி ஒதுக்கப்பட்டது முறையாகுமோ என்ற வினாவினை எழுப்புவது **வல்லமை தாராயோ** என்ற கதை.

பலவிதமான அவலங்கள், அச்சுறுத்தல்களின் மத்தியில் மனிதசீவியம் அந்தரப்பட்ட, அநாதைநிலையுற்ற நிலையை உணர்த்துவது **நாட்கள், கணங்கள்... நமது வாழ்க்கைகள்** என்ற கதை.

திறமைகண்ட விடத்தும் அதனை மெச்சத் தடையாகும் சாதி உணர்வின் வக்கிரத் தன்மையைக் காட்டும் **காலத்தின் கோலம்** என்ற கதையிலே செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் இடையிலான வேறுபாடு உணர்த்தப்படும் விதம் நயம்பயப்பதாகும். **ஒலிமுச்சு** என்ற கதையைப் படிக்கிற போது ஊனத்தின் கொடுமையை சமகால சூழ்நிலையில் இன்னும் குரூரமாக உணர முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மண்ணு லகத்துநல் லோசைகள் காற்றெனும்

வானவன் கொண்டு வந்தான்

பண்ணி லிசைத்தவ் வொலிக ளனைத்தையும்

பாடி மகிழ்ந்திடுவோம்"

என்ற மகாகவி பாரதி பாடல் நினைவுக்கு வருகிறது. ஏக்கம் மனதினுள் சுழிக்கின்றது.

சிறுவியாபாரம் செய்து பிழைப்பு நடாத்தும் ஒரு ஏழைக் கிழவியின் பிரயாணத்துக்கு உதவும் ஒரு "தட்டிவான் கொண்டக்டரின்" மனிதாபிமானத்தை ஒடுக்கப்பட்டோரின் உள்ளார்ந்த உணர்வை மெச்சுவது **ஒரு மனிதாபிமானியின் தரிசனம்**. அல்போர்ட் ஜன்ஸ்ரீனின் தொடர்புநிலைக் கொள்கையைப் பற்றிக்கூறி, சமூக அமைப்பு மாறாதவரை சீர்த்திருத்தங்கள் சாத்தியப்படா நிலையினைக் கதவு என்ற கதை மூலம் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞானத்துறையில் முழ்கிப் புலமைப்பரிசில் பெற்று அவுஸ்திரேலியாவில் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வில் ஈடுபட்டுள்ள கலாமணி, கிராமத்து வாழ்விலே திளைத்தவராகவே காணப்படுகிறார். அவரது கிராமத்தின் பெருமைகளையும் சிறுமைகளையும் அவரது கதைகளின் வாயிலாகத் தரிசிக்க முடிகிறது. தன்னைச் சுற்றி வாழ்ந்த மக்களின் இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்கெடுத்தமைக்குச் சான்றாக விளங்கும் இக்கதைகள் அவரது உண்மை அனுபவங்களே அன்றிப் போலி அனுபவங்கள் அல்ல என்பது துலாம்பரமாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய சூழலும் அதன் விளைவான சோக சம்பவங்களும் அவரது மனதை வெகுவாகப் பாதித்துள்ளமை விளங்குகிறது. யதார்த்த நெறிக்குட்பட்ட அவரது கதைகளில் இழையோடும் மனிதாபிமானமும், வாழ்க்கை நிகழ்வுகளை விஞ்ஞான அடிப்படையில் விளங்க முனையும் திறனும் விதந்து பேசத்தக்கவை.

சி. தில்லைநாதன்
தமிழ்ப்பேராசிரியர்

பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை
02.11.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் எனது கதைகளும்

என்னைச் சுற்றியுள்ள உலகுதான் எனது கதைகளின் தளம். இதன் மனிதர்கள், நானாய் என் சுற்றமாய், என் அயலவராய், நான் அறிந்தவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் உண்மையானவர்கள்; உங்களின் அருகாக வாழ்ந்து வருகின்றவர்கள்.

சிறுவயதிலிருந்தே கதை கேட்பதில் ஆர்வங் கொண்டவன் நான். எனது தந்தையின் சகோதரர் வே.த. தணிகாசலம் ஆசிரியர் என் கதைப்பசியை அறிந்து, சளைக்காமல் கதைகள் சொல்லி மனம் நிறைந்திடச் செய்தவர். கதைப்பசிக்கு அமுத சுரபியானவர். எனது ஐயாவின் வீடு, வாசிப்பதில் ஆர்வமுள்ளவர்களால் நிறைந்திருந்தது. கைதொடும் இடமெல்லாம் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நிறைந்திருந்தன. வளரிளம் பருவத்திலே இவைகளே என் மனம் நிறைந்த தோழர்கள். இவர்கள் என்னைப் பிரமிக்க வைத்தனர், பூங்கனவுகள் காணச் செய்தனர், மெல்ல மெல்ல படைப்பாளியாவதற்குரிய வீரியமான விதைகளை எனது நெஞ்சிலே தூவினார்கள்.

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரணமாக்கும் என்பதில் என் ஐயாவுக்கு திடமான நம்பிக்கை. சங்கற்பம். இதுவே என் உயர்கல்விக்கு எண்ணெயும் திரியுமாக மாறிற்று. எல்லாவற்றையும் ஒரு சேரவைத்து யோசிக்கின்ற போது, என் வாழ்வின் கனவுகளுக்கும் நனவுகளுக்கும் சாதனைகளுக்கும் ஐயாவே உந்து சக்தியாய் விளங்கியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தொகுதியின் ஒவ்வொரு எழுத்திலும் என் ஐயாவின் செந்தளிர்ப்பான புன்னகையை, நிறைவை, மானசீகமாக நான் உணருகின்றேன். இன்னும் உணர்வேன்.

புத்தகங்களின் தோழனான எனக்கு வாய்த்த நண்பரும் புத்தகங்களின், எழுத்தின் தோழரே. இவர்கள் என் எழுத்தையும், என் சிந்தனையையும் மெருகூட்ட வாய்த்த வர்கள். என் துணைவி, மைத்துனர் சி. வன்னியகுலம், கி. பவானந்தன், கே. டானியல், டொமினிக் ஜீவா, ஐ. வரதராசன் க. சின்னராசன், வ. அபிராமி என்று வரிசையாய் இவர்கள் வருகிறார்கள். இவர்களுக்கு நன்றி கூறுதலென்பது வெறும் "ஒப்பாசார" மே.

எழுத்து என் நேசம். ஊடகம். கனவுகளின் உண்மை செறிந்த வடிகால். எனது எழுத்துலகம் இன்னும் இன்னும் அக, புற உலகங்களின் குறுக்கங்களையெல்லாம் தாண்டி விரிவடையும். இந்தத் தொகுதியை இனிவரும் தொகுதிகளுக்கான படிக்கல்லாய் நான் உணர்கிறேன். படிக்கற்களே சிகரங்களைத் தொட உந்தும் முன்வைப்பு என்பதை நான் அறிவேன். சர்வதேச எல்லைகளைத் தொட இன்னும் தமிழ்ப் படைப்பு யுகத்தில் நான் அணி வகுத்து நிற்பதில் பெருமை கொள்கிறேன்.

சர்வதேச புத்தகத்தரத்தை தொட பிரகடனம் செய்திருக்கும் குணசேன நிறுவனம் எனது நூலை வெளியிடுவதில் நான் பெருமை கொள்கின்றேன்.

என் விருப்பப்படி, கற்பனை வார்ப்பின்படி தன் தூரிகையினால் அட்டைப் படத்தில் கவிதையினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைந்தவர் ஓவியர் ரமணி. என்னைப் படித்து முன்னுரை வழங்கிய பேராசிரியர் சி. தில்லைநாதன். இவர்களுக்கு நன்றி சொல்லும் வல்லமை என் சொற்களுக்கு இப்போது இல்லையென்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. இக்கதைகளை வெளியிட்ட இதழாசிரியர்களுக்கு எனது அன்பான நன்றி.

அன்பன்,
த. கலாமணி
"மணிமாளிகை"
அல்வாய்
17/11/99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையத்து முந்தி இருக்கச் செய்த

எனது தந்தையார்

ச. தம்பிஐயா

அவர்களுக்கு சமர்ப்பணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

	கதைகள்	பக்கம்
1.	ஒரு மனிதாபிமானியின் தரிசனம்	01
2.	கதவு	10
3.	காலத்தின் கோலம்	27
4.	ஒலிமுச்சு	36
5.	பலூான்	50
6.	பிரளயம்	65
7.	நீர்மை	83
8.	யார்க்கெடுத்துரைப்பேன்	96
9.	வல்லமை தாராயோ	109
10.	நாட்கள், கணங்கள்... நமது வாழ்க்கைகள்	119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதாபிமானியின் தரிசனம்

நான் "றிஸ்ற் வோட்சைப்" பார்த்துக் கொள்கின்றேன். மணி ஐந்து முப்பது. வழமையைவிட இம்முறை நேரத்துக்கே வந்துவிட்டேன். "லஷ்மி" தியேட்டரின் முன் வழமையான காட்சிதான். முன்றோ நான்கு தட்டிவான்கள்; செல்லத்துரையின் "சோமெசற்" கார்; சங்குண்ணியின் தேனீர்க்கடை முகப்பில் தொங்க விடப்பட்ட பெற்றோ மாக்ஸிலிருந்து தரையில் பரவும் ஒளி வெள்ளம்; பார்க்கும் வேளைதோறும் எரிச்சலை ஊட்டும்படியாக நெடிதுயர்ந்த கம்பத்தில் தூங்கி வழியும் இருபத்தைந்து "வாற்" பல்ப்.

"சாவகச்சேரி போறாக்கள் கெதியா வந்து ஏறுங்கோ; வான் வெளிக்கிடப்போகுது."

சந்தியில் நின்றவாறே குரல் எழுப்புகிறான் ஒருவன்.

"தம்பி துலைக்கோ?"

தட்டிவானொன்றை "ஸ்ராட்" செய்து என்னருகே கொண்டுவந்து நிறுத்தியவாறே கேட்கிறார் "றைவர்."

"நான் கொடிகாமம் போறன்"

பதிலிறுத்தவாறே வானுக்குள்ளும் ஒரு நோட்டம் விடுகிறேன். வான் நிரம்பி வழிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதோ புறப்படுகிறேன்" என இருந்த வான் தூரத்தில் இன்னும் சிலர் வருவதைக் கண்டு நிற்கிறது. பனங்கிழங்கு அடுக்கியது போல் ஆட்களை அடுக்கிக் கொண்டு புறப்பட இருக்கும் வானுக்குள் பாய்ந்துவந்து ஏறியவாறே "கொண்டக்டர்", றைவரைப் பார்த்துக் கடிந்து கொள்கிறான்.

"இப்ப என்னண்ணை நேரம் போட்டுதென்றே அவசரப்படுறாய். இன்னும் ஒரு அஞ்சு நிமிசம் பொறு. வானுக்குள்ளும் இன்னும் நாலைஞ்சு இடங்கிடக்குது. இப்பத்தான் கொஞ்சப்பேர் தேத்தண்ணி குடிக்கினம் அவையளும் வரட்டும்"

நான் எனக்குள் சிரித்துக் கொள்கின்றேன்.

என்னுடன் இன்னும் ஏழு எட்டுப்பேர் வந்து சேர்ந்து கொள்கிறார்கள். கொழும்புக்குச் செல்பவர்களாக இருக்க வேண்டும். "வாசிற்றிப் பெடியள்" ஒருவரையுமே காணவில்லை. அவர்கள் நேற்றே மெயிலில் புறப்பட்டுப் போயிருப்பார்கள். எனக்கு ஒரே சலிப்பாக இருக்கிறது. திரும்பத் திரும்பக் கைக்கடிகாரத்தையே பார்த்துக் கொள்கிறேன். நேரம் ஐந்து நாற்பத்தைந்து. அப்பொழுது தான் கொடிகாமம் செல்லும் தட்டி வான் எங்களருகே வந்து நிற்கிறது.

"ஓ சின்னத்தம்பி!"

"தம்பி ஏறுங்கோ"

"பெட்டி இதிலை இருக்கட்டும் அண்ணை, நான் ஒரு ரீ குடிச்சிட்டு வாறன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியை றைவரின் ஆசனத்துக்கருகே இருந்த சீற்றில் வைத்துவிட்டு சங்குண்ணி கடையை நோக்கி நடக்கின்றேன்.

"தம்பி, நாளைக்கோ வாசிற்றி தொடங்குது?"

என்னைத் தொடர்ந்துவந்த றைவர் மாணிக்கம் பீடித்துண்டைப் பற்றவைத்தவாறே கேட்கிறான். தேநீர் அருந்தியவாறே "வாசிற்றிப் பெடியளின்" நாகரிகப் போக்குக் குறித்து சர்ச்சையில் இறங்குகின்றான் றைவர். நானும் பரிச்சயமானவன் என்ற முறையில் மறுப்பு ஏதும் சொல்லாமல் தலையை மட்டும் இடை இடையே ஆட்டிக் கொள்கின்றேன். கதையின் சுவாரசியத்தில் நேரம் கரைகிறது.

தேநீரைக் குடித்துவிட்டு "வான"டிக்குத் திரும்பிய போது, வானில் இன்னும் நாலைந்து இடங்களே காணப்படுகின்றன. நான் முன் இருக்கையில் அமர்ந்து கொள்கின்றேன்.

"சின்னத்தம்பி, நேரமாகுது வெளிக்கிடுவம். உதிலை நிக்கிறாக்களை கேட்டுப்பார், ஸ்ரேசனுக்குப் போலை கிடக்கு."

பீடித்துண்டை வெளியே வீசியெறிந்தவாறே இருக்கையில் ஏறி அமர்ந்துகொள்ளும் மாணிக்கம் வெளியே நிற்பவர்களைப் பார்த்துக் கேட்கின்றான்.

"அண்ணை ஏறுங்கோ வான் வெளிக்கிடுது. நான் ஸ்ரேசனிலை கொண்டே விடுறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ உப்பிடித்தான் சொல்லுவாய், பிறகு ஆட்கள் வரட்டுமென்று பார்த்துக் கொண்டிருப்பியள்."

"இல்லை அண்ணை ஏறுங்கோ நான் "வானை" எடுக்கிறன்."

"உவங்கள் உப்பிடித்தான் சொல்லுவங்கள், பிறகு பஸ் வருமட்டும் பார்த்துக் கொண்டிருப்பாங்கள். இப்ப பஸ் வந்திடுந்தானே; நாங்கள் பஸ்ஸிலையே போவம்."

"வானி"ல் ஏறப்போன ஒருவரை மற்றொருவர் தடுத்து நிறுத்துகிறார்.

"இல்லை செல்லையா, இன்றைக்கு வாசிற்றிப் பெடியள் வருங்கள்; நாங்கள் வானிலை முன்னுக்குப் போனம் என்றால் "கியு" விலை நில்லாமல் ரிக்கற் எடுக்கலாம். அவன் றைவர்ப்பெடியனை எனக்குத் தெரியும். அவனும் வானை எடுக்கப்போறான்; நீங்கள் ஏறுங்கோ."

மாணிக்கம் பின்னுக்குத் திரும்பிச் சின்னத் தம்பியைப் பார்த்துச் சிரிக்கிறான். அச்சிரிப்பில் பெருமிதம் தொனிக்கிறது. சின்னத்தம்பி அதனைக் கவனியாதவனாக யாரையோ எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான்.

"பின்னுக்கு அந்தப் பலகையைப் போட்டுச் சின்னாச்சியை இருக்கச் சொல்லிப்போட்டு இதிலை செல்லையாண்ணையை விடு."

றைவரின் ஆஞ்ஞைப்படி, இரண்டு சீற்றுக்களிடையே பலகைத்துண்டொன்று தொடுக்கப்பட்டு சின்னாச்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசனமாக, செல்லையா நீட்டி நிமிர்ந்து சின்னாச்சி முன்பு இருந்த சீற்றில் அமர்ந்து கொள்கிறார். ஒன்றாகச் சேர்ந்துகொண்ட பெண்களினால் வான் கலகலக்கிறது. அவர்கள் காலைச்சந்தைக்கு வியாபாரஞ் செய்யக் கொடிகாமம் செல்லும் பெண்கள்.

"எங்கேடி இவள் தெய்வானையைக் காணேல்லை."

சின்னாச்சியைப் பார்த்து ஒருத்தி கேட்கிறாள்.

"ஓ நானும் அதைக் கவனிக்கேல்லை, அவளிருக்கிறாளெண்டெல்லோ நான் நினைச்சன். ஏதும் சுகமில்லையோ?"

"என்ன விசர்க்கதை கதைக்கிறாய், அவளே சுகமில்லையெண்டு படுத்திருக்கிறவள்! தான் இருக்கேக்கை தன்ரை பிள்ளையளுக்குக் கஸ்ரம் இல்லாமல் பாக்கோணும், பிறகங்காலை தங்கடை பாட்டைப் பார்க்கட்டும் எண்டு சொல்லுறவள்; ஒரு நேரம் படுத்திருப்பாளே."

"சின்னத்தம்பி ஏறு; வெளிக்கிடுவம்."

மாணிக்கம் சாவியைச் செருகித் திருப்பிக் "கிளச்"சை அழுத்துகிறான்.

"மாணிக்கண்ணை இன்னும் ரெண்டு நிமிசம் பொறு, ஒராள் வரோணும்."

"என்ன பேய்க்கதை கதைக்கிறாய். இப்பவே நேரம் அஞ்சு அம்பத்தெட்டாச்சு, பஸ்ஸும் வரப்போகுது, வானுக்குள்ளை இடமும் இல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் சச்சரவையும் மீறி பெண்களின் கதை தொடர்கிறது.

"தெய்வானேன்ரை மேளொருத்தியல்லோ பிள்ளைத்தாச்சியா இருக்கிறாள். அவள்தான் பிள்ளைப் பெத்துப்போட்டாளோ?"

"சீ அவளுக்கு பெறுமாசம் ஆனியெண்டல்லோ தெய்வானை என்னட்டைச் சொன்னவள். பாவம் என்னாச்சோ தெரியேல்லை, றைவர்ப் பெடியனும் அவசரப்படுத்துது, உந்த வசுக்காறங்கள் ஏதோ மறிச்சு ஏத்தப் போறாங்களே."

"ஓ... எங்களுக்குச் சின்னத்தம்பீன்ரை வானென்டால் ஒரு கரைச்சலுமில்லை. அவன் பெடியன்ரை முழுவியளம்தான் எங்கடை யாவாரமும்"

தூரத்தே பஸ்ஸின் உறுமல் ஒலி கேட்கிறது.

"என்ன மாணிக்கம். பஸ்ஸும் வருகுது போலை.. வான் வெளிக்கிடேக்கை சிலமனைக் காணேல்லை."

செல்லையா எரிச்சலுடன் கேட்கிறார்

சின்னத்தம்பியின் முகத்தில் வாட்டம். பாதையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

"பாவம் தெய்வானை, இன்றைக்கு அவளின்ரை யாவாரமும் பட்டுது. சந்தைக்கு நேரமும் ஆச்சுது, சந்தை நேரத்துக்கு இனி எப்பிடி வரப்போறாளோ தெரியேல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னாச்சி குரலில் சோகத்தை வரவழைத்துக் கொண்டு சொல்கிறாள்.

"இனியும் உவன் விசரன்ரை கதையைக் கேக்கலாது, தம்பி. என்ரை முகத்துக்காகத்தான் செல்லையண்ணை ஆக்கள்கூட ஏறி இருக்கினம். உவருக்கென்ன தன்ரை வானென்ற நினைப்போ. முதலாளி அறிஞ்சாரென்றால் உவனாலை என்னையுமல்லோ வேலையாலை நிப்பாட்டிப் போடுவார்."

மாணிக்கம் தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க முனைந்தவாறே, "கியரை" மாற்றி, "அக்சிலேட்டரை" ஒரு வெறியுடன் மிதிக்கிறான். வான் சீறிக் கொண்டு புறப்பட்டு ஐம்பது யார் தூரத்திலேயே உள்ள வளைவில் திரும்புகிறது. பின்நோக்கியே பார்வையைச் செலுத்தி வந்த சின்னத் தம்பியின் வாடிய முகத்தில் திடீரென ஒரு சலனம்.

"மாணிக்கண்ணை கோவிச்சுக் கொள்ளாதை. பின்னுக்கு ஆள் வருது. உப்பிடியே "றிவேர்சிலை" வானைப் பின்னுக்கு விடு"

இது வரை றைவரின் பிற்பார்வைப் கண்ணாடியையே பார்த்துக் கொண்டிருந்த நானும் பின்னோக்கித் திரும்பிப் பார்வையைச் சாலை வழியே செலுத்துகிறேன். "வான்" றிவேர்சிலை பின்னுக்குத் திரும்புகிறது. நிலம் வெளுத்து ஆளை ஆள் இனம் கண்டு கொள்ளக்கூடிய அளவுக்குப் பொழுது விடிந்திருக்கிறது. "வான்" முன்பு நின்ற இடத்தில் பஸ் ஒன்று நின்று கொண்டிருக்க, கையில் கடகத்துடன் ஒரு கிழவி பஸ்ஸில் ஏற முயற்சிக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி வானை விட்டுட்டன், உன்னைக் கும்பிட்டன் என்னையும் ஏத்திக் கொண்டு போ ராசா."

"வானை"க் கவனியாத கிழவி பரிதாபமாகக் கொண்டக்டரிடம் முறையிடுகிறாள்.

"ணேய் இதிலை போகேலாது. ஆக்கள் நிக்கிறதுக்கே இடமில்லை."

பஸ் கொண்டக்டர் நந்தி மாதிரி நுழைவாயிலில் மறித்து நிற்க, இரண்டொருவர் ஓடி வந்து முன்வாயிலால் ஏறிக்கொண்டிருக்கின்றனர்.

"ஆச்சி, ணேய்!"

"அட, சின்னத்தம்பி!"

கிழவியின் முகத்தில் இவ்வளவென விபரிக்க முடியாத பரவசம். வானுக்குள் இருந்த பெண்களுக்கும் தெய்வானையைக் கண்டதில் ஒரே குதூகலம். தெய்வானை ஒரே ஓட்டமாக ஓடி வந்து வானில் ஏறிக்கொள்கிறாள்.

"இஞ்சைபார் மாணிக்கம். உன்ரை முகத்துக்காகத் தான் இவ்வளவும் நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தனாங்கள். உங்கடை ஆட்டங்களுக்கெல்லாம் ஆடுறதுக்கு நாங்கள் என்ன வேலைவெட்டி இல்லாத ஆட்களே."

வெறுப்பை உமிழ்ந்து விட்டுச் செல்லையாவும் அவரோடு கூடிய இன்னும் பத்துப் பன்னிரண்டு பேரும் வானைவிட்டு இறங்கி ஓடிச்சென்று பஸ்ஸில் ஏறுகின்றனர். வானில் அரைவாசிக்கு மேல் வெறுமையடைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமையை விளங்கிக் கொண்ட தெய்வானை ஆச்சி சின்னத்தம்பியைக் கழிவிரக்கத்துடன் பார்க்கிறாள். மாறாக, சின்னத்தம்பியின் இதழ்க் கடையோரம் மென்னகை ஒன்று மலர்கிறது. "புட்போட்டில்" நிற்கும் செல்லையாவும் மற்றையோரும் சின்னத்தம்பியை ஆச்சரியத்துடன் பாாத்துக்கொண்டிருக்க, நெல்லியடியிலிருந்து வான் விரைகிறது, கொடிகாமம் நோக்கி.

(1975)

(பேராதனைப் பல்லகலைக்கழகத் தமிழ்ச்சங்கம் போட்டியில் பரிசு பெற்ற கதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவு

"லாண்ட் மாஸ்ரரின்" இரைச்சலுடன் கூடிய "கிரி.. கிரி" என்ற சத்தத்தில் இவன் விழிப்புக் கொண்டான்.

கட்டிலிலிருந்து எழும்பாமலே உடம்பைப் பின்புறமாக நகர்த்தி, முதுகை நிமிர்த்திச் சுவரில் சாய்த்து, சற்று எ..கியவாறே தலைக்கு நேர் மேலே இருந்த சுவர்ப்பகுதியைத் தடவிப்பார்த்து "சுவிச்சை" அழுத்தியதும் அறையுள் ஒளி வெள்ளம்.

அந்த அறையையும் அதனோடு ஒட்டியிருந்த கூடத்தையும் இணைக்கும் கதவு வழமைபோல் திறந்தே கிடந்தது.

திறந்த கதவு வெளியினூடு பாய்ந்து செல்லும் ஒளிக்கற்றையையும் விரட்டிச் சென்ற இவன் பார்வை, கூடத்தின் மறுமுனையோடு ஒட்டியிருந்த அறைக்கதவின் மீது படிந்தது.

கதவைத் திறந்துகொண்டு யாராவது வருகிறார்களா என்று இவன் காத்திருந்தான்.

நித்திரையிலிருந்து அவர்கள் அருண்டமைக்கான அசுமாத்தம் எதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால்காரனின் இந்தக் காட்டுக்கத்தலில் கூட நித்திரை கொள்கின்ற அவர்களை நினைத்து இவன் ஆச்சரியம் கொண்டான். அன்றிரவு நெடுநேரஞ் சென்ற பின்பே அவர்கள் நித்திரைக்குப் போனார்கள் என்பது ஞாபகத்துக்கு வர அவர்கள் மீது பச்சாதாபமும் கொண்டான்.

இவனும் இரவு நெடுநேரம் தூங்கவில்லைத்தான். பல நினைவுகளாலும் அலைக்கழிக்கப்பட்டு படுக்கையில் உழன்று கொண்டிருந்தவனுக்கு, வெகுநேரம் அவர்களும் உறங்காமல் கதைத்துக் கொண்டிருந்தமையும் கேட்கத்தான் செய்தது.

"கிரி... கிரி... கிரி..."

கட்டிலிலிருந்து எழும்ப முடியாத அளவுக்கு உடல் சோர்வாக இருந்தது. ஆயினும் லாண்ட் மாஸ்ரரின் "கட கட" ஒலியையும் பால்காரனின் கத்தலையும் சகிக்க முடியாதவனாக இவன் எழுந்தான். கட்டிலிலிருந்து இறங்கி நெட்டி முறித்துக் கொண்டே கூடத்தையும் அறையையும் இணைத்திருக்கும் கதவு வெளியினூடு சென்று கூடத்தின் ஒரு மூலையில் மேசைமீதிருந்த அலுமினியச் சட்டியையும் எடுத்துக் கொண்டு "கேற்ற" டிக்கு விரைந்தான்.

"ஆ மாத்தயா எப்படி? லொக்கு மாத்தயா தவம நிதித?"

வீட்டுக்காரப் பெரியவரின் நித்திரை அவனுக்கு நிம்மதியைக் கொடுத்திருக்க வேண்டும். இல்லாவிடில் இந்நேரம் "பால் தண்ணீர்பிடிப்பாக இருக்கிறதே" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடன் வீட்டுக்காரர் சண்டைப்பிடித்துக் கொண்டு நின்றிருப்பார்.

பாலை வாங்கி வந்து மூடி வைத்து விட்டு மீண்டும் கட்டிலில் வந்து அமர்ந்தவன், அன்றைய விரிவுரையைத் தயார் செய்ய எண்ணி அருகிலிருந்த மேசைமீது விரித்து வைத்திருந்த புத்தகத்தை எடுத்தான். தலையணையைச் சுவேராடு சரித்து வைத்து அதன்மீது முதுகைச் சாய்த்து அன்றைய விரிவுரைக்குரிய பாடத்தை நினைத்துப் பார்த்துக்கொண்டான்.

அப்போதுதான் தங்கள் அறைக்கதவைத் திறந்துக்கொண்டு வீட்டுக்கார அன்ரி வெளியே வந்தாள். வந்தவள், கூடத்து மேசைமீதிருந்த அலுமினியச் சட்டியைத் திறந்து பார்த்துவிட்டு இவன் அறைப்பக்கம் திரும்பி "தாங்ஸ்" ஒன்றை உதிர்த்துவிட்டு அறைக்குள் சென்று மறைந்தாள்.

அன்ரியை "அங்கிள்" கடிந்து கொள்வதும் அன்ரி சரளமாக ஆங்கிலத்தில் உரையாடி அவரைக் கலகலப்பாக்க முயல்வதும் இவனுக்குக் கேட்கிறது.

இவன் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.

இவனுக்கு என்றைக்குமே அவர்களை நினைத்து வியப்புத்தான். இந்த வயதில்கூட ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டவராய் இளம் தம்பதியினரின் குதூகலத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களைப் பார்த்து இவன் அதிசயிப்பான். குழந்தைகள் இல்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையையும் மறந்து இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களுக்குக் கண்ணூறு பட்டுவிடக்கூடாதே என்று ஆதங்கமும் கொள்வான்.

இந்த வீட்டுக்கு வந்த புதிதில், விரிவுரை தவிர்ந்த நேரங்களில் இந்த அறையினுள்ளேயே இவன் அடைந்து கிடந்தான். இந்த அறையின் யன்னலைத் திறந்து வைத்துக் கொண்டு பேராதனைப் பூங்காவையும் இந்த வீட்டையும் பிரிக்கின்ற கம்பிவேலிக்குமூடாக அந்த வேலி ஓரமாக அமைந்த பாதையில் வருகின்ற வெளிநாட்டவரையும் பாடசாலைச் சிறுவர் சிறுமியரையும் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே இவனின் பெரும் பொழுது கழியும்.

பல்கலைக்கழக விடுதிகளுள் ஒன்றில் இடம் கிடைத்திருந்தும் அமைதியான சூழலையும் சுதந்திரத்தையும் விரும்பி வந்த இவனின் உணர்வுகளை அவர்களும் மதித்தனர்.

இவனின் அறைக்கு அவ்வீட்டின் கூடத்தினூடு செல்லாது முன்புறமாகவே செல்லக்கூடியதாக முன் கதவும் இருந்தது. இக்கதவின் சாவியையும் வெளிக்"கேற்"றின் சாவிகளிலொன்றையும் அவர்கள் இவனுக்குக் கொடுத்திருந்தமையினால் இந்த முன் கதவினூடாகவே இவன் எந்நேரமும் தனது அறைக்கு வந்து செல்லக் கூடியதாகவும் இருந்தது.

கையிலிருந்த புத்தகம் நழுவி வீழ்ந்த போது வீட்டுக்காரர் பற்றிய நினைப்புக்களிலிருந்து மீண்டு அப்புத்தகத்தின் அட்டையை இவன் உற்றுநோக்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விசாலமான தலையுடனும் அதற்குச் சற்றும் பொருத்தமில்லாத உடலுடனும் கூடிய அந்த உருவம்

"அல்போர்ட் ஐன்ஸ்ரீன்"

அணுயுகத்தின் அபிமானபிதா!

தொடர்பு நிலைக்கொள்கையின் சூத்திரதாரி!

உலகம் ஐன்ஸ்ரீனைக் குறித்து, கொண்டிருக்கும் கணிப்புக்கு இந்தச் சித்திரத்தை விட வேறென்ன அத்தாட்சி வேண்டும் என இவன் தன்னையே கேட்டுக்கொண்டான்.

இந்தச் சித்திரம் பற்றிய விளக்கத்துடனேயே தொடர்பு நிலைக்கொள்கை பற்றிய இன்றைய விரிவுரையை ஆரம்பித்து அதனை வளர்த்துக் செல்லவும் இவனால் முடியும். ஆனாலும் சென்ற வருடத்து விரிவுரைகளை இச்சித்திரம் பற்றிய விளக்கத்துடனேயே ஆரம்பித்தமை நினைவுக்கு வந்து வேறு எம்முறையில் இவ்வருடத்து விரிவுரைகளைத் தொடங்கலாம் என இவன் சிந்தித்தான்.

இவனுக்கு இது கைவந்த கலையும் கூட. விஞ்ஞானம் மக்களின் வாழ்வுடன் இணைந்த தன்மையை உணர்த்தும் முன்னுரையுடன் தனது விரிவுரைகளைத் தொடங்கி, நகர்த்திச் செல்லும்போது மாணவர்களின் கவனத்தையும் நன்கு ஈர்த்துக் கொள்ள முடியுமென நம்பியதோடு அதில் வெற்றியும் கண்டான். சென்ற வருடப் பரீட்சையில் இவன் விரிவுரை எடுத்த பாடங்களில் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மதிப்பீடுகள் யாவுமே சார்புடையவைதான்" என்று ஆரம்பித்து, இலக்கிய விமர்சனத்திலும் கூட "நடுநிலை" என்று ஒன்றில்லை என்ற கருத்துக்களையும் முன்வைத்து "தொடர்புநிலைக் கொள்கை" பற்றிய இன்றைய விரிவுரையை சற்றுக் கவனமாக எடுக்க வேண்டும் எனத் தீர்மானித்து கையிலிருந்த புத்தகத்தின் ஒற்றைகளைப் புரட்டிச் செல்கையில் கண்ணில் பட்ட ஒரு குறும்பா மீது இவன் கண்கள் நிலைக்குத்தி நின்றன.

சாதாரண குறும்பாவா அது. மனோவை இவனிடத்து ஈர்த்த வல்லமை பொருந்தியதல்லவா அது.

மஹாகவியின் குறும்பாத்தொகுதியொன்றை முன்னர் படித்துச் சுவைத்தமை நினைவில் வந்தது. அக்குறும் பாக்களினூடாக நகைச்சுவையோடு யாழ்ப்பாணச் சமூகத் தின் நலிவுகளை மகாகவி சாடியதையும் எண்ணி மனதி னுள் புன்னகை செய்தான்.

ஐன்ஸ்ரீனின் தொடர்பு நிலைக் கொள்கைபற்றிய அதீதமான விளக்கத்தைக் கொடுக்கின்ற அந்த குறும்பாவில் தனது கற்பனையையும் சேர்த்து வழங்கிய தமிழ் வடிவம் தான் மனோவை இவன் அறிந்து கொள்ளக் காரணமானது.

சென்ற வருடம் தொடர்பு நிலைக் கொள்கை பற்றிய விரிவுரைகளை எடுத்துச் செல்லும்போது மாணவர்களைத் தன்வசம் ஈர்த்துக் கொள்வதற்காக விரிவுரையினிடையே இவன் சொல்லிவைத்த அக்கவிதை வரிகள்;

ஒளியை விட விரைவுகொண்டால் காலரதம்கூடப் பின்னோக்கிச் சுழலும் என்பதை விளக்குகின்ற வரிகள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நளினியென நாமம் கொண்டாள் பாவை
ஏழிற் செவ்வாய்த் தோஷம் அவள் தீர்வை
பழி அகற்றச் செவ்வாய்க்கே
இன்று போய் நேற்று வந்தாள்
ஒளியை விட விரைவு கொள்ளும் பூவை"

இக்கவிதை வரிகளால் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் இவனின் விசிறிகளாக மாறியமை;

அதே கவிதை வரிகளை தமது விடுதித்தோழியர்க்கும் தோழர்க்கும் அவர்கள் கூற, அக்கவிதை வரிகளின் பிரபல்யத்தால் வேறு கல்விநெறி பயின்ற மாணவ மாணவிகளும் இவரை அறிய நேர்ந்தமை;

கலைப்பீட மாணவியான மனோ இவனை நேரிலேயே சந்தித்து, மஹாகவியின் குறும்பாக்களின் அதே தொனி இவனது குறும்பாவிலும் வெளிப்பட்டிருப்பதைக் கூறி இவனைப் பாராட்டியமை;

அந்த அறிமுகத்தோடு மனோவுக்கும் இவனுக்குமிடையே கருகலான உறவொன்று மலர்ந்து வளர்ச்சி பெற்றமை;

எல்லாமே இவனுக்கு நினைவுக்கு வர இவன் மனதினுள்ளே சிலிர்த்துக் கொண்டான்.

உள்மனத்து ஒலிப்பு இவனுக்கு நன்றாகவே கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனோ.... நீ எனக்கே உரியவள் தானா?"

"அதிலென்ன சந்தேகம்" என்று நினைத்துக் கொள்கின்ற போதும், இவனைத் தயக்கம் கொள்ளச் செய்யும் உள்ளுணர்வு விழித்துக்கொண்டு இவனை ஆட்டம் காணச் செய்யவே இவன் மனோவைப்பற்றிய நினைவுகளை வரிசைப்படுத்திப் பார்க்கத் தொடங்கினான்.

இயல்பாகவே ரசனை உணர்வு நிரம்பப்பெற்ற மனோ; பேராதனை கலை இலக்கிய வாசகர் வட்டத்தின் நிகழ்ச்சி ஒழுங்குகளில் சிரத்தை எடுத்துக்கொள்கின்ற மனோ;

இவனின் இலக்கிய ஈடுபாட்டை அறிந்து கொண்டு "விஞ்ஞானத்தில் தமிழ்" எனும் தலைப்பில் இவனைக் கட்டுரை படிக்கச் செய்த மனோ...

தமிழில் உள்ள விஞ்ஞானக் கருத்துக்களைப் பற்றிக் கட்டுரையொன்று எழுதவேண்டும் என்ற எண்ணம் இவனுக்கு நெடுநாட்களாகவே இருந்ததுதான். சங்க இலக்கியங்களிற் காணப்படுகின்ற சில அறிவியற் கருத்துக்கள், அனுபவ முடிவுகள் என்பதையும் மறந்து விஞ்ஞான முறைமை பற்றிய தெளிவு சற்றுமின்றி, அந்த அனுபவ முடிவுகளையே விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களாகக் காணும் சில தமிழ் அறிஞர்களின் அறியாமைக்காகவேனும் அக்கட்டுரையை எழுத இவன் விரும்பினான்.

இவன் படித்த கட்டுரை சர்ச்சைக்குள்ளாகியமை;

இவனின் கருத்துக்களுக்குச் சார்பாக அச்சர்ச்சையில் மனோவும் கலந்து கொண்டமை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைத் தொடர்ந்து வாசகர் வட்ட நிகழ்ச்சிகள் பலவற்றிலும் மனோவுடன் சேர்ந்து புரிந்துணர்வோடு கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டமை;

இவை யாவும் தந்த உத்வேகத்தில் இவனின் நெஞ்சத்து விருப்பு மீண்டும் உள்ளொலித்தது.

"மனோவையே எனது வாழ்க்கைத் துணையாகவும் கொண்டால்...?"

என்றோ இவனுள் கருக்கொண்டு அமுங்கிப்போன எண்ணங்கள்...

இன்னும் மாறாதிருக்கின்ற இந்த சமூக அமைப்பில் அமுக்கப்படவேண்டிய எண்ணங்கள்...

மனோவும் இவனும் ஒருவர் மீது ஒருவர் காதல் கொண்டு கருகலாகவே உள்ள தமது காதலை வெளிப்படுத்த முயன்று தோற்றுப் போய்விட்ட சந்தர்ப்பங்களை நினைத்துப் பார்க்கின்ற போதுதான் இந்தச் சமூக அமைப்பு ஒன்றும் இன்னமும் மாறிவிடவில்லை என்று நிரூபணம் ஆனது.

சாதாரண சமூக அமைப்பா இது?

விஞ்ஞான வளர்ச்சியையே தோற்கடிக்கச் செய்கின்ற சமூக அமைப்பு..

இவன் பல்கலைக்கழகத்திற் பெற்ற பிரபல்யத்திற்குப் போட்டியாக "இவன் யார்" என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டிவிட முனைப்புக் கொள்ளும் அமைப்பு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனுக்கும் மனோவுக்குமிடையில் தொடர்பேதும் ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தில் வரம்பு கட்டிவிட முனையும் சமூக அமைப்பு.....

இந்தச் சமூக அமைப்பிடம் தோல்வியுறத்தயங்கி, மனோவிடம் கேட்கத்துடித்தவற்றை எல்லாம் அமுக்கி வைக்கத்தான் இவனால் முடிந்தது; மனோவைச் சந்திப்பதை இவன் தவிர்க்கத்தான் வேண்டியிருந்தது.

மனோவின் அப்பாவைக் குறித்து இவன் அண்மையில் அறிய நேர்ந்தபோது அமுக்கி வைத்த எண்ணங்கள் யாவுமே கிளர்ந்தெழுந்தன.

"ஓ.... அவரா? அவரின் மகளா மனோ!"

நெஞ்சு பூபாளம் இசைத்தது.

மெல்ல மெல்ல நெஞ்சில் முகிழ்க்கும் நம்பிக்கைகளோடு நாளை எப்படியும் தனது எண்ணத்தை மனோவிடம் தெரிவித்துவிடத் தீர்மானித்து இரவு முழுவதும் நித்திரையின்றி உழன்று...

"டண்.... டண்.... டண்... டண்..."

பூங்காவில் அடிக்கும் மணிச்சத்தம் கேட்டு இவன் தன் நினைவுகளிலிருந்து மீண்டான்.

காலையில் பூங்காவுக்கு வேலைக்கு வருபவர்களுக்கான முன்னறிவிப்பு மணி அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணீரென்ற மணிச்சத்தத்துடன் இந்த வீடும் உயிர்ப்புக்கொண்டது.

"அங்கிள்" பரபரக்கத் தொடங்கினார்.

அரைமணித்தியாலத்திற்குள்ளாகவே அவர் தனது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கடமைக்குச் செல்ல வேண்டும்.

ஆறரை மணிக்கு வேலைக்கு வருகின்றவர்களுக்கு வேலைகளைப் பணித்து, வேலைக்கு வராதவர்களின் இடங்களுக்கு வேறு ஆட்களை அமர்த்தி முடித்து, வேலை ஆரம்பமாகி விட்டதா என்பதையும் ஒரு சுற்றுச் சுற்றி பார்த்துவிட்டு வந்துதான் அவரின் காலைச் சாப்பாடு கூட.

இந்தக் கடமை உணர்வு தான் "சுப்பிரிண்டன்" நிலைக்கு பதவி உயர்வையும் சேவை நீடிப்பையும்கூடப் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

அங்கிளின் பரபரப்பை உள்வாங்கியவாறே இப்போது தொடங்கி வெளிக்கிட்டால்தான் தானும் நேரத்துக்கு செல்லமுடியுமென நினைத்து இவனும் குளிக்க விரைந்தான்.

❐ ❐

விரிவுரைக்கு வேண்டிய குறிப்புக்களையும் எடுத்துக்கொண்டு முன்புறத்துக் கதவை உட்புறமாகவே அடித்துச் சாத்தி இழுத்துப் பார்த்துக் கொண்டபின், திறப்புக் கோர்வையையும் எடுத்துக் கொண்டு கூடத்து இணைப்புக் கதவு வெளியினூடு இவன் வெளியே வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதூகலித்துக்கொண்டே காலை உணவை உட்கொள் ளும் அவர்களைக் காண இவனுக்கும் சந்தோஷமாக இருந்தது.

"டூ யு நோ, வட் ஹப்பின்ட் லாஸ்ற் நைற்?" .... இவர் நித்திரையாப் போயிட்டார் "டப்" என்று கட்டில்லை ஏதோ விழுந்து சத்தம் கேட்டது. நான் பதறிப் போனன். பார்த்தால் இவருக்குப் பக்கத்திலை பல்பும் ஷேடும் விழுந்து சிதறிப்போய்க் கிடக்கு. நல்லவேளை கொஞ்சம் இவர் திரும்பியிருந்தாலும் இவருக்கு மேலைத்தான் விழுந்திருக்கும்."

இரவு நடந்ததை "அன்ரி" விபரிக்கும் போது அங்கிள் இடைமறித்தார்.

"நான் இவவுக்கு மேலேதான் விழுந்து போச்சாக்கும் என்று பயந்துபோனன்"

"எனக்கு மேலை விழுந்தால் விழுந்திட்டுப் போகட்டும் நான் உங்களுக்கு மேலை விழுந்து போச்சோ என்று தான்...."

"உமக்கு மேலை விழுந்தால் விழட்டுமோ..?"

ஒருவரை ஒருவர் அன்புடன் கடிந்துகொள்ளல்;

செல்லமாகக் கோபித்தல்;

ஒருவருக்காக ஒருவர் ஏங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ! வாழ்க்கை என்பது இது தானோ!

அவர்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வெளியேறி, கலஹா வீதியில் நடந்து செல்லும்போது சிந்தனை இவனை அறுத்துக்கொண்டிருந்தது.

"எவ்வாறு பேச்சைத் தொடங்குவது?"

நெஞ்சில் வழமைபோல் தயக்கம். இவனின் எண்ணங்களை நெஞ்சினுள்ளேயே அமுக்கிவிடுகின்ற தயக்கம்....

எதிரே ஒற்றைப்பசு ஒன்று இவனை முட்டுவதுபோல எதிர்ப்பட்டது.

இவன் திடீரென ஒதுங்கிக் கொண்டான்.

"நல்ல சகுனம் தானோ?"

கிருஹப் பிரவேசத்தின் போது வீட்டு முகப்பில் பசுக்கன்றைக் கட்டிவைத்திருப்பது ஞாபகத்துக்கு வந்தது.

ஒற்றைப் பிராமணன் எதிர்ப்பட்டால் தீச்சகுனம் என்று யாரோ சொல்லக்கேட்டது திடீரென நினைவுக்கு வர, அதுபோல இதுவும் நாம்பனாக அமைந்தால் தீச்சகுனமாகுமோ என்ற தவிப்புடன் இவன் திரும்பிப் பார்த்துக் கொண்டான்.

"பசுமாடுதான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் பால்காரனின் முகத்தில் விழித்தது ஞாபகத்துக்கு வந்து அதுவும் நல்ல உற்பாதம் தான் என்று மனம் ஆறுதல் கொண்டது. ஆனாலும் நல்ல விடயத்துக்கெனப் புறப்பட்டு வரும்போது, முகத்தில் விளித்த தன்வீட்டு மலட்டுத் தம்பதியர் துர்ச்சகுனமாக இருக்கலாமோ என்று மனம் சோர்வடைந்தது.

இவன் அனுப்பிவைத்த செய்தி அவளுக்குக் கிடைத்திருக்க வேண்டும்.

தூரத்தில் இவனைக் கண்டதுமே அவள் முறுவலித்தாள்.

இவன் மனம் உற்சாகத்தில் கரைபுரண்டது.

சாத்திரங்களிலும் சம்பிரதாயங்களிலும் தான் கொண்ட புதிய நம்பிக்கை குறித்து இவன் வெட்கமடைந்தான்.

தலைக்குனிவு ஏற்பட்டாற் போல வெம்பிச்சாம்பினான், மனங் குமைந்து வருந்தினான்.

விஜயவர்தனா விடுதிமுன்னால் பஸ்ஸுக்காகக் காத்திருப்பவள் போல இவனுக்காக அவள் காத்திருந்தாள்.

அவளுடன் தீர்க்கமாகப் பேசி முடிவுக்கு வரும்வரையில் கலஹா வீதியில் எதிர்ப்படக்கூடிய நண்பர்களை அவளுடன் ஒன்றாகவே சேர்ந்து எதிர்க்கொள்ளக் கூடாதென நிச்சயித்தவனாக, விஜயவர்தனா விடுதிக்குப் பக்கமாக ஸ்ரேசனுக்குச் செல்லும் குறுக்குப்பாதையைக் குறிப்பால் உணர்த்தி இவன் முன்னேறினான். ஆனால் அவளோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது நடையைத் துரிதப்படுத்தி இவனின் அருகாகவே நடந்தாள்.

"ஓ! இவள் எனக்கே சொந்தமானவள்."

நெஞ்சு ஆனந்த கானம் இசைத்தது.

❐ ❐

அவ்வளவு நேரமும் நூல்நிலைய மேல்மாடியில் விரித்து வைத்த புத்தகத்தில் முன்னே திரைப்படமாக ஓடிய மனக்காட்சிகளின் தாக்கத்தால் நெஞ்சு சுமையேறிப்போய், கலஹா வீதியில் நடந்து வருவதையும் தவிர்த்து, என்றுமில்லாத விதமாக பஸ்ஸில் திரும்புகின்ற போதும் பஸ்ஸின் விரைவுடன் போட்டி போட்டுக் கொண்டு துண்டுதுண்டாக நினைவுகள் நைந்து சிதறின.

"நான் உங்களை விரும்பினநான் தான். ஆனால் அது நிறைவேறாது என்று தெரிஞ்ச உடனேயே நான் உங்களிலையிருந்து விலகத் தொடங்கீட்டன். உங்களைப் பற்றிக் கற்பனைகளை வளர்த்து நானும்குழம்பி உங்களையும் குழப்பவிரும்பேல்லை."

சிரித்துச் சிரித்து பேசிக்கொண்டிருந்தவள் திடீரென இறுக்கமாகித் தனது எண்ணங்களை வெளிப்படுத்திய போதிலும் அவளுள்ளேயே நிகழ்கின்ற தடுமாற்றத்தைப் புரிந்து கொண்டவனாக அவன் இடைமறித்தான்.

"மனோ; உம்முடைய அப்பாவைப்பற்றி கிட்டடியிலைதான் கேள்விப்பட்டனான். அவர் இதுக்கு மறுப்பொன்றும் சொல்லமாட்டார் தானே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனக்குத் தனக்கு வந்தால் தான் தலையிடி தெரியுமென்னுவினம். அப்படித்தான் சீர்திருத்தம் பேசிறவையும் ... எங்கடை சமூக அமைப்பு இப்படி இருக்கேக்கை சீர்திருத்தம் பேசி ஒண்டுஞ் செய்யேலாது.. நான் எங்கடை விருப்பத்தைக் குறிப்பாலை உணர்த்தி அப்பாவிட்டை கேட்டுபார்த்திட்டன். அவருடைய பதில் என்னவாக இருக்குமெண்டு எனக்கு நல்லாத் தெரிஞ்சுபோச்சு... நான் அப்பாவை நல்லா நேசிச்சு வந்திருக்கிறன். எங்களுடைய விடயத்தாலை அவரோடு முரண்பட்டு என்னாலை அவரை வெறுக்க முடியாது. அதனாலைதான் அவரை வெறுக்கக்கூடிய அளவுக்கு உங்கள் மீதான என் விருப்பத்தைக் கட்டுப்படுத்தி என்னை மாற்றிக் கொண்டிட்டன். என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ..."

வீட்டின் முன்னால் பஸ்ஸிலிருந்து இறங்கி ரோட்டைக் கடக்கின்றபோது உள்ளம் மட்டுமன்றி உடலும் தள்ளாடியது. அன்று முழுவதும் உணவு உட்கொள்ளாததன் தாக்கத்தை அவன் உணர்ந்தான்.

தனது அறையின் முன் கதவைத் திறந்து சுவிட்சைப் போட்ட போது "பல்ப்" ஒளிர மறுத்தது. சுற்று முற்றும் சூழ நோக்கிய போது தான் எங்குமே இருள் மெல்லெனப் பரவியிருப்பது தெரியவருகிறது.

திறந்திருந்த அந்தக் கூடத்துக் கதவு வெளியினூடு கூடத்தை மெதுவாக இவன் நோக்கினான்.

"பீ கெயர்புல். கவனம்... கவனம் .... ரெடி என்று சொல்லுங்கோ நான் மெயின் சுவீட்சைப் போடுறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்ப் ஒன்றைப் பொருத்துவதையே பெரிய வேலையாக எடுத்துக் கொண்டு அந்த மலட்டுத் தம்பதியினர் பேசுகின்ற கொஞ்சல்மொழி இவன் காதுகளில் நாராசமாய் ஒலித்தது.

"வெயிட்... வெயிட்.. றைற் சுவிட்ச் ஓன்."

இவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

"பிள்ளை இல்லா வீட்டிலை கிழவன் துள்ளிவிளையாடினானாம்." என்ற பழமொழி நினைப்பு வர, காதைப்பொத்தியபடி "படார்" என்று கூடத்து இணைப்புக் கதவை அறைந்து சாத்தியவாறே கட்டிலில் சரிந்தான்.

இவன் உடலில் கனமாக ஏதோ உறுத்தியது.

இவன் என்னவாக இருக்குமெனத் திரும்பிப் பார்த்துக்கொண்டான். திடீரெனப்பரவிய ஒளி வெள்ளத்தில்...

"அல்போர்ட் ஐன்ஸ்ரீன்!"

(1986)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் கோலம்

பொன்னம்பல வாத்தியார் இப்போதுதான் ஊருக்கு மாற்றலாகி வந்திருக்கிறார். தன்னுடைய வாழ்வின் பெரும்பகுதியை மலைநாட்டிலும் வன்னிப் பகுதியிலும் கழித்துவிட்ட வாத்தியாருக்கு ஊருக்குள் காலடி வைக்கும் போதே புண்ணிய பூமியில் காலடி பதித்த உணர்வுதான் ஏற்பட்டது.

இருபது வருடங்களுக்கு முன்னர் மனைவியுடன் ரயிலேறிய வாத்தியார், இடையில் கந்தையா அம்மானின் சாவீட்டிற்கும், மயிலண்ணரின் மகளின் திருமணத்திற்கும் என இரண்டொரு முறை ஊருக்கு வந்து போனதுடன் நிரந்தரமாகவே வெளியூர் வாசியாகி விட்டார்.

ஊருக்கு வாத்தியார் ஒரு புதிர்.

தானுண்டு தன் வேலை உண்டு என்றிருந்த வாத்தியாரைக் குறித்து எல்லோருக்குமே ஆச்சரியம்.

வாத்தியாரின் பரம்பரை என்ன சாமானியமானதா?

கீழ் நிலையிலுள்ளவர்களிடம் அதிகாரம் செலுத்தி சாதியாசாரத்தில் அணுவளவும் பிசகாத பரம்பரைப்பண்பு வாத்தியாரிடமிருந்து எங்கு ஓடி ஒளித்தது?

வாத்தியாரைப்பற்றி ஊருக்குள் எத்தனையோ கதைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டதில் தனது சுயத்தையே இழந்துவிட்டார் என்பது சிலரின் அபிப்பிராயம்.

தாம்பத்திய உறவைப் பூரணமாக அநுபவிக்காத நிலையிலேயே இளம் மனைவியை ஆஸ்த்மாவுக்குப் பலிகொடுக்க நேர்ந்த பின் அப்படியும் இப்படியுமாக பிசகிய வாழ்வினாற்தான் அவர் அப்படி இருக்கிறார் என்று வேறு சிலர் கூறினர்.

வாத்தியார் பத்தரைமாற்றுத் தங்கமாகத்தான் இருந்தார். மனைவி விசாலத்தின் அழகிலும் அறிவிலும் மயங்கி, அவள் சொல்வதை வேதவாக்காகக் கொள்ளும் பக்தனின் நிலையில் தான் இருந்தார் அவர்.

அந்த நாளில் எட்டாம் வகுப்புப் படித்து ஆசிரியையான விசாலம் அவரின் மானசீகக் காதலி.

ஊரவருக்கும், உறவினருக்கும் இது தெரிந்து தான் இருந்தது. ஆனால், திருமணமாகி அவர்கள் இருவரும் வாழ்க்கைப் பயணத்தில் காலடி எடுத்து வைக்க இருந்த வேளையில் விசாலத்தின் உறவுக்காரி ஒருத்தி சபைசந்திக்கில்லாத ஒருவனுடன் ஓடிப்போய் விட்டதால் வந்தது வினை.

வாத்தியார் விட்டுக் கொடுக்கவில்லை.

விசாலத்தின் வாதத்திலிருந்த நியாயத்தை வாத்தியார் உறுதியாகப் பற்றிக்கொண்டார்.

தனக்கே தெரியாத யாரோ உறவுக்காரி சபை சந்திக்கில்லாத ஒருவனுடன் ஓடிவிட்டாள் என்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை வாத்தியார் மணக்கக் கூடாது என்பதில் என்ன நியாயம் இருக்கிறது என்று விசாலம் வாத்தியாரிடமே கேட்டாள். வாத்தியார் சீர்திருத்தவாதியானார். தனது குடும்பத்தினரதும், உறவினரதும் மனக்கசப்பையும் பொருட் படுத்தாமல், விசாலத்தை வாத்தியார் மணந்து கொண்டார்.

திருமண வாழ்வில் இன்பம் வேண்டி இருவருக்கும் வெளியூருக்கு மாற்றம் கேட்டார்.

விசாலம் உயிருடன் இருந்திருந்தால் வாத்தியார் எப்படி மாறியிருப்பாரோ என்னவோ, பத்திரிகை செய்திகளைப் படிக்கும் போதெல்லாம் அவரின் பரம்பரைக் குணம் எட்டிப் பார்க்கத்தான் செய்தது.

தேனீர்க்கடைத் திறப்பும், ஆலயத்திறப்பும் அனுமதிக் கப்பட முடியாதவையாகவே வாத்தியாருக்குத் தோன்றின.

தங்களுடைய ஆட்கள் அவர்களை இவ்வளவு தூரம் தலையெடுக்க விட்டது தவறு என்று வாத்தியார் நினைத்துக் கொள்வார்.

ஊரிலிருந்து ஒதுங்கி வாழ்ந்து கொண்டு ஊரின் சரிபிழைகளை தான் எப்படிச் சொல்லலாம் என்று தன்னையே அவர் கேட்டுக் கொண்டபோதுதான் காலங் கடந்தாயினும் ஊருக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற ஆவல் அவரிடம் எழுந்தது. இந்த ஆவலை கல்வித் திணைக்களம் நிறைவேற்றி வைத்தது.

வாத்தியார் ஊருக்கு மாற்றல் பெற்று வந்து இன்று தான் முதன் முதலாக தனது பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் கடந்து செல்லும் அந்த இளஞ்சோடியின் பொருத்தத்தை எண்ணிப்பார்த்து, "அவர்கள் யாராக இருக்கக் கூடும்" என்று சிந்திக்கையில் அவனின் குரல் வாத்தியாரைத் தூக்கி நிறுத்தியது.

"மாஸ்ரர் ஊருக்கு மாற்றம் போலை... நான் கந்தப்புவின் மகன்."

வாத்தியாருக்கு உச்சந்தலை விறைத்தது. அவனையும் அவளையும் உற்றுப் பார்த்தார். பார்க்கக் கூடாத இடமெல்லாம் பார்வை நிலைக்குத்தி நின்றது.

அவர்கள் வாத்தியாரைக் கடந்து போய் விட்டனர்.

வாத்தியார் தனக்குள் கறுவிக் கொண்டார்.

"கந்தப்பனின் மோன் எங்களைக் குசலம் விசாரிக்க வந்திட்டானோ?" நெஞ்சு ஆத்திரத்தில் விம்மியது.

கந்தப்பனின் மருமகளின் நளினத்துடன் கூடிய எடுப்பான தோற்றம் வாத்தியாரின் மனக்கண்ணில் நின்று அவரை என்னவோ செய்தது.

வாத்தியார் சிறுவனாக இருந்த காலத்தில், கந்தப்பனின் தாயும் இன்னும் சிலரும் மேல் சட்டை அணிந்து அம்மன் கோவிலுக்கு வந்தது கண்டு வாத்தியாரின் உறவினர் ஓடிச்சென்று அப்பெண்களின் மேல் சட்டைகளைக் கொக்கத்தடியால் கொழுவி இழுத்துக் கிழித்த காட்சி வாத்தியாரின் மனக்கண்ணில் திரைப்படமாக ஓடியது.

பாடசாலைக்குள் நுழைந்து அதிபரைச் சந்திக்கும்வரை வாத்தியாரின் மனம் அலைக்கழிந்து கொண்டுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. "குட்மோனிங் சேர்! நீங்கள் இந்த ஊரவர் தான் என்று கேள்விப்பட்டன். உங்களுடைய ரைம் ரேபிளைப் படியுங்கோ. பெல் அடிச்சு பத்து நிமிசம் ஆச்சு. உங்களுக்கு முதற்பாடம் ஏழாம் வகுப்புத் தமிழ். வாருங்கோ வகுப்பைக் காட்டுறன்.."

அதிபரின் கண்டிப்பையும் உறுதியையும் காணக்காண வாத்தியாருக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது.

"மாதகல் கரையாம் பொடியனை அதிபராயிருக்க விட்டிட்டு எங்கடை ஆக்களும் எம்பீ மாரும் எங்கை போய் ஒழிஞ்சிட்டினம்?"

வாத்தியாரின் மனம் யாரையோ சபித்தது.

வகுப்பு நிசப்தமாக இருந்தது.

மாணவன் ஒருவன் வகுப்பறை நடுவில் எழுந்து நின்றுகொண்டு தமிழ்ப் புத்தகத்தை சத்தமாக வாசித்துக் கொண்டிருந்தான்.

"ஓ.. இவன் தான் மொனிற்றர் போலை" .....

அனுமானம் சரியானது தான்.

வாத்தியார் உள்நுழைவதைக் கண்டு அம்மாணவன் தனது இருக்கைக்குச் சென்றான்.

"குட்மோனிங் சேர்!"

"வணக்கம் இருங்கோ."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லது! இந்தப் பாடம் தமிழெல்லே?..... உங்களுக்குத் தமிழ் எடுத்த வாத்தியார் கடைசியாக என்ன படிப்பிச்சவர்?"

"செய்வினை செயப்பாட்டு வினை"

மாணவர்கள் ஒரே குரலிற் சொல்கின்றனர்.

"நல்லது, நாங்கள் இன்றைக்குத் திரும்பவும் அதையே படிப்பம். எங்கே இதை செயப்பாட்டு வினாவாக்கியமாக்கிச் சொல்லுங்கோ பார்ப்பம்."

"பூனை குடித்தது... தெரிந்தவை கை உயர்த்துங்கோ."

"தம்பி சொல்லு, தம்பிக்கு என்ன பெயர்?"

"சுந்தரேசன்."

"ஆ, சொல்லு பார்ப்பம்."

"பூனையாற் குடிக்கப்பட்டது."

"சரி, கெட்டிக்காரன்.. சுந்தரேசனைத் தவிர மற்றவை ஒருத்தரும் படிக்கிறேல்லைப்போலையிருக்கு.. இங்கே பாருங்கோ..... "பூனை குடித்தது" என்பது செய்வினை வாக்கியம். இதைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றும்போது செய்வினை வாக்கியத்தின் செயப்படுபொருள் செயப்பாட்டு வினை வாக்கியத்தில் எழுவாயாக வரும். எப்படி? பால் பூனையாற் குடிக்கப்பட்டது. எது குடிக்கப்பட்டது? பால். அப்போ இங்கு எழுவாய் என்ன? "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பால்."

"சரி .. ஆனால் சில வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்ற முடியாது. உதாரணத்துக்குப் பாருங்கோ... ஒல்லாந்து கடல் மட்டத்திலிருந்து மிகவும் தாழ்ந்த ஒரு நாடாகும்... செயப்படு பொருள் இல்லாத வாக்கியங்களை செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்ற முடியாது, விளங்குதா?"

"ஓம்."

"இப்போ இந்த வாக்கியத்தை சரியாகச் செயப்பாட்டு வினை வாக்கியமாக்கிச் சொல்லுறவைக்கு ஒரு பரிசு தரப்போறன், கவனியுங்கோ... திருக்குறளை மேனாட்டாரும் போற்றிப் புகழ்கின்றனர்... கடைசி வாங்கிலையிருந்து சொல்லிக் கொண்டு வாருங்கோ."

மாணவர்கள் ஒவ்வொருவராக எழும்பி மௌனமாக நிற்கின்றனர்.

"ஆ.. தம்பி சொல்லு உனக்கென்ன பெயர்?"

"கந்தசாமி."

"கந்தசாமி சொல்லப் போறார்... எங்கே சொல்லு பார்ப்பம்?"

"மேனாட்டார் திருக்குறளால் போற்றப்படுகின்றனர்"

"பிழை, மற்றாள், மற்ற ஆள்? .. சுந்தரேசன்.."

"திருக்குறள் மேனாட்டாரால் போற்றிப் புகழப்படுகிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கெட்டிக்காரன்! இன்னும் சரியாகச் சொன்னால் திருக்குறள் மேனாட்டாராலும் போற்றிப் புகழப்படுகிறது. ஏனென்றால் பாருங்கோ செய்வினை வாக்கியத்தில் "மேனாட்டாரும்" என்று உம் சேர்ந்து வாறதாலை செயப்பாட்டு வினை வாக்கியத்திலும் "மேனாட்டாராலும்" என்று "உம்" சேர்த்துச் சொல்ல வேண்டும்."

"சுந்தரேசன் தான் கெட்டிக்காரன், மொனிற்றரும் சுந்தரேசனே?"

"ஓம் சேர்"

"சுந்தரேசனின் அப்பாவுக்கு என்ன பெயர்?"

"சின்னக்குட்டி."

வாத்தியாரின் முகத்தில் எங்கிருந்து தான் இருள் வந்து சூழ்ந்ததோ தெரியவில்லை. தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டார்; "அப்படி இருக்குமோ? சே இருக்காது அப்படியான பெடியனை ஏன் மொனிற்றராய்ப் போடனம்."

"சுந்தரேசன் எங்கே இருக்கிறது?"

"செம்பாட்டுத் தெருவிலை."

வாத்தியாரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. இதுவரை அடங்கியிருந்த உணர்வுகளும் எண்ணங்களும் உடைப்பெடுத்துக் கொண்டு கிளம்புகின்றன.

"சுந்தரேசா. நீ தாழ்ந்த சாதிப் பெடியன் தானே..?"

".....?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சொல்லு நீ என்ன சாதி?"

"தாழ்த்தப்பட்ட சாதி"

சுந்தரேசன் தயங்கியப்படிதான் சொல்கிறான்.

வாத்தியாருக்கு தலைகால் தெரியாத கோபம்.

என்ன செய்கிறோம் என்பது தெரியாமலேயே மேசைமீது கிடந்த பிரம்பை நோக்கிப் பாய்கிறார்.

"மூத்திரம் பெய்யத்தெரியாத முளையான்ரை கதையைப் பார்... எனக்குப் படிப்பிக்க வந்திட்டார்....." என்று கத்தும் வாத்தியாரின் மனக்கொதிப்பு உயர்ந்து உயர்ந்து தாழும் அவரின் கைவீச்சில் தெரிகிறது.

(1974)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி மூச்சு

ஒலி!

எத்தனை வகையாக ஒலிக்கிறது.

மென்மையாக ஒலித்து நெஞ்சையே நெருடச் செய்கின்ற இசையொலி... கர்ணகடூரமாக ஒலித்துக் காதுகளைச் செவிடாக்குகின்ற ஓசை.

இந்த சப்தஸ்வரங்களையே மாற்றி மாற்றி ஒழுங்கு செய்தால் எத்தனை எத்தனை இராகங்கள்.

சங்கீதத்தை ரஸிக்க வேண்டுமென்றால் ஞானம் வேண்டுமே!.

இனிய சங்கீதத்தைக் கேட்டு ஒருவனால் உருக முடிகிறதென்றால்... இதயத்தைப் பிழியச் செய்யும் நாதத்திலேயே ஒன்றிப்போக முடிகின்றதென்றால், அதைவிட வேறென்ன ஞானம் வேண்டும்?

இல்லை. கேட்பவரைத் தன்னுடனேயே பிணித்துக் கொள்ள முடிகின்ற இசையின் தன்மையையே ஒருவனின் ஞானம் என்று எப்படிக் கொள்ள முடியும்? இசையின் தன்மை வேறு, இசையைப் புரிந்து கொள்கின்ற ஞானம் வேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சக் காலமாக, வெறும் ஓசைகளிற் கூட ஒரு வகையான சங்கீதத்தை இவனால் கேட்க முடிகிறது.

இவனின் சங்கீத ஆர்வம்...

எட்டாம் வகுப்புடனேயே மழுங்கடிக்கப்பட்ட ஒன்று.

பாட்டுப்படித்து என்ன செய்வது? தொடர்ந்து சங்கீதத்தை ஒரு பாடமாகப் படிக்கவேண்டுமாயின் கலைத் துறையைப் படிக்க வேண்டும். கலைத்துறைக்குத்தான் மதிப்பேது?

ஒவ்வொரு பெற்றோருக்குமே தன் பிள்ளை "ஸயன்ஸ்" படித்து ஒரு டொக்டராகவோ எஞ்சினியராகவோ வரவேண்டும் என்றுதான் ஆசை.

அந்த ஆசையில் மண் விழ... அன்றைய காலக் கல்வித் தரப்படுத்தலில் தடக்குற்று, கல்விப் பொதுத்தராதர, உயர்தர வகுப்புடனேயே கல்வியை நிறுத்திக் கொண்டு வெறும் "கிளார்க்" ஆகத்தான் இவனால் வரமுடிந்தது.

உத்தியோகம் கிடைத்து விட்டால் பிறகென்ன? கல்யாணச் சந்தையில் நிற்க வேண்டியது தானே. முப்பது வயதுக்குள் இரு பிள்ளைகளுக்குத் தகப்பனாராகி விட்டான். ஏழு வயதிலும் ஆறு மாதத்திலும் என இரு ஆண் பிள்ளைகள்.

இரு பிள்ளைகளுக்குமிடையேயான இந்த இடைவெளி குறித்து இவனின் நண்பர்கள் பகிடிபண்ணும் போதெல்லாம் நெஞ்சில் கீறல்கள் விழுந்து ரணமாகிப் போனபோதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைத் தன்னுள்ளேயே ஊமைக்காயங்களாகப் பேணவும் பழக்கப்படுத்திக் கொண்டாயிற்று.

"ரெண்டு ஆம்பிளைப் பிள்ளையள் இருக்கேக்கை என்ன குடிமுழுகிப்போன கவலை?"

இரண்டாவது பிள்ளை பிறந்த செய்தி அறிந்து "ரைப்பிஸ்ற்" இவனைச் சீண்டியபோதும் உள்ளத்திலிருப்பவற்றை எல்லாம் கொட்டித்தீர்த்துவிட முடியாதபடி அலுவலக உறவுகளின் அந்நியத் தன்மை இவனைக் கட்டிப்போட்டது.

இரவின் நிசப்தத்தில் மனைவி துளசியுடன் தனது உணர்வுகளைப் பகிர்ந்துக் கொண்டு நெஞ்சில் ஏற்பட்டு விட்ட ரணங்களுக்கெல்லாம் ஒத்தடம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பிற்குக் கூட வரம்பு கட்டி, துளசியின் ரணங்களுக்கும் இவனே ஒத்தடம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

"சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை தானே!"

துளசி கண்ணீர் விட்ட வேளைகளிலெல்லாம் உதடு வரை வந்து ஒலிக்கமுடியாது உறைந்து போய்விடுகின்ற முதுமொழி.

இரண்டாவது குழந்தை பிறந்ததிலிருந்துதான் சற்று நிம்மதி கொள்ள முடிகிறது.

"சிசேரியன்" முடிந்து, மயக்கத்திலிருந்து விழித்தெழுந்த துளசி மலங்க மலங்க விழித்தது, அருகிலிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டிலில் உறங்கிய அந்தப் பிஞ்சின் விரல்களில் இவன் சுண்டிவிட... வீரிட்டழுத குரல் கேட்டு ஆனந்த ராகம் ஒன்றைக் கேட்ட ஆறுதலில் "பொல பொல" என்று துளசி ஆனந்தக் கண்ணீர் உகுத்ததுங்கூட இவன் நெஞ்சுள் சித்திரமாய் இன்னும் பதிந்திருக்கிறது.

அந்த ஜீவனின் அழுகுரல் இவனுக்குங் கூட கானமாய்த்தான் ஒலித்தது. அந்த இனிய சங்கீதத்தைக் கேட்க ஏழாண்டுகளாக அல்லவா தவம் கிடந்தான்.

இந்த ஆறுமாத காலமாக அந்த ஜீவனின் அழுகுரலே மோகனமாய், நீலாம்பரியாய், ஆனந்த பைரவியாய் ரீங்காரம் செய்கிறது.

இந்த ஆறுதலையும் மீறி முத்தவனைக் காணும் போதெல்லாம் இனம் புரியாத சோகம் எழுந்து அனைத்தை யுமே அமுக்கி விடுகிறது.

தனது தம்பியின் சிறுகை அசைவுகளை, கால் எறிவுகளை பூரிப்போடு பார்த்துச் சிரித்து மகிழ்ந்தாலும் அதனை வார்த்தைகளில் வடிக்கமுடியாத மூத்தவனின் இயலாமை நிலைகுறித்து இவன் நெஞ்சு மௌனராகம் இசைக்கிறது.

"மூத்தவனுக்கு பேசவே வராதா?"

"வரும்" என்ற நம்பிக்கையைத்தான் மனம் பற்றிக்கொள்ள விழைகிறது. ஆனாலும் இத்தனை நாட்க ளாக மேற்கொண்ட வைத்தியப் பரிசோதனைகள் எல்லாம் அந்த நம்பிக்கை எனும் பற்றுக்கோட்டைச் சிதறடித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் பார்த்த சில திரைப்படங்கள் நினைவுக்கு வந்து, மனம் அந்த நம்பிக்கை இழையைப் பற்றிக் கொண்டு ஊசலாடவும் செய்கின்றது.

அதிர்ச்சியினால் ஊமையாகிப்போனவர்களும் அதிர்ச்சியால் பேச ஆரம்பித்தவர்களும் எந்த எந்தத் திரைப்படங்களில் வருகிறார்களென நினைவுகளை மீட்டிக் கொள்ள விழையும்போது, பிறவியிலேயே ஊமையானவர்கள் யாராவது பின்னர் பேசுவதாக அமைந்த படம் ஏதும் வந்ததா என்ற தேடலில் இவன் தோற்றுப்போய்...

"கொஞ்ச நஞ்சம்" இருந்த நம்பிக்கையும் இவன் இழந்திருந்த வேளையில் தான், "ஊமையாகப் பிறந்தவர்கள் பேச முடியாதென்பது ஒரு விதியல்ல" என்று "ஸ்பெஷலிஸ்ற்" ஒருவர் குறிப்பிட்டமை இவன் காதுகளில் தேன்வார்த்தது. அன்றிலிருந்துதான்–

கர்ணகடூரமாய் ஒலிக்கும் இந்த முழக்கங்கள் எல்லாமே இவனுக்குச் சங்கீதமாய் ஒலிக்கின்றன.

வானிற் பறந்து திரிகின்ற "ஹெலிகொப்ரர்"களையும் குண்டு வீச்சு விமானங்களையும் மூத்தவன் மிரண்டு பார்க்கும்போது அவற்றின் இரைச்சல் ஒலியாவது அவனுக்குக் கேட்கமாட்டாதா என்ற ஏக்கம் இவனின் இதயத்தின் மூலையில் எழுந்து மறையும்.

குண்டு வெடிக்கும் சத்தங்களையும் "ஷெல்" முழக்கங்களையும் கேட்டும் கூட இவன் நெஞ்சு பயம் கொள்ள மறுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த முழக்கங்களாவது முத்தவனின் செவிப்பறையை அதிரவைத்து கேட்கும் திறனையேனும் அவனுக்குத் தரமாட்டாவா" என்ற ஆதங்கம் இவன் நெஞ்சுள் விசுவரூபம் எடுத்தது.

இந்த ஆதங்கத்தில், வீட்டு முற்றத்தில் குண்டொன்று வீழ்ந்து வெடித்தேனும் முத்தவனை அலறவைக்காதா என்ற விபரீத ஆசைகூட இவனுள் விட்டு விட்டு எழுகிறது.

துளசிக்குங் கூட நெஞ்சு வைரித்துப் போய் விட்டது. அயலவர்கள் கொண்ட பீதியிலும் அச்சத்திலும் ஒரு துளியாவது இவளுக்கு இருக்க வேண்டுமே.

மூன்று நாட்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்ற தாக்குதலுக்கு அஞ்சி ஊரிற் பலர் ஆலயங்களில் தஞ்சமடைந்து விட, எஞ்சியிருக்கின்றவர்களும் "ஷெல்" அடிக்குப் பயந்து பதுங்குகுழிகளே தஞ்சமென்று இருக்கின்ற நிலைமையை அறிந்தும்...

"இவளுக்கு மட்டும் என்ன வீறாப்பு?"

என்ரை பிள்ளைக்கில்லாத பயம் எனக்கேன் வரோணும்?

துளசிக்குப் பதில் சொல்ல முடியாத இக்கட்டான நிலையிலும் அவளைத்தேற்றி, நாலாம் நாளான இன்று அம்மன் கோயிலுக்கு அழைத்து வந்தாயிற்று.

ஆலயத்தினுள்ளும் அந்த சுற்றுப் பிரகாரங்களிலும் திரண்டிருக்கும் மக்கள் வெள்ளம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நெரிசலிலும் கைக்குழந்தையைக் காட்டி, ஆலயத்தின் உட்பிரகாரத்துள் நெரிசலுள் நெரிசலாய் அகப்பட்டு மூத்தவனையும் இளையவனையும் படுக்க வைக்கக்கூடிய அளவு இடம் தேடியாயிற்று.

சூழ இருப்பவர்களின் கதைகளை எல்லாம் கேட்கின்ற போதுதான் மெல்ல மெல்ல பயம் இவளை ஆட்கொள்ளு கின்றது.

இரு குஞ்சுகளையும் தன் இறக்கைக்குள் சேர்த்த னைத்து மெலிதான முனகலுடன் கண்ணீரையும் உகுத்துக் கொண்டிருக்கின்ற அவளைத் தேற்றமுடியாத சூழல் இவனை என்னவோ செய்கிறது.

துளசியை நேருக்கு நேர் சந்திக்கத் திராணியற்று தங்களைச் சுற்றிலும் அமர்ந்திருப்பவர்களை நோக்கிய போது அவர்களின் வாடிய முகங்கள் ஏதோ சேதி சொல்லின.

பசி என்பது எப்படித்தான் இவர்களுக்கு மறந்து போயிற்று?

நான்கு நாட்களாக நேர்சீரான சாப்பாடு இல்லாதிருந்துங் கூட "பசி" தனது வலியை இழந்து இந்த மக்களிடம் தோற்றுப்போய்விட, பீதியும் பயமுமே இவர்களுக்கு உணவாகி, ஜீரணிக்கவும் மறுக்கிறது.

மூத்தவனுக்குக்கூட இந்த நிலைமைகள் ஓரளவு விளங்கியிருக்க வேண்டும். தாயின் கண்ணீரைக் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் உள்ளத்துச் சோகங்களை எல்லாம் படம் பிடித்தானோ என்னவோ "உப்பு பிஸ்கற்"றைக்கூட சாப்பிட மறுத்துத் தாயின் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் இருக்கின்ற அவனின் நிலை வேறு, இவனின் உள்ளத்தைக் குடைகிறது.

தாயின் மென்சிறகுக்குள் உறங்குகின்ற கைக் குழந்தை அவளின் உதிரத்தையே உறிஞ்சி ஏமாற்றத்தின் விளிம்பில் சப்புக் கொட்டவும் செய்கிறது.

முகத்தை முகம் பார்க்க முடியாத இருட்டு.

ஆங்காங்கே "கணுக் கணுக்" என்று சிமிட்டுகின்ற மெழுகுதிரிச் சுவாலைகளின் ஒளித்தடத்தில் "ஒண்டுக்கு"ப் போக எழுந்து செல்பவர்கள் மனித உடல்களில் தடுக்கி விழுகின்ற வேளைகளில் எழுகின்ற வசவுகளைக்கூட காதில் விழுத்திக் கொள்ளாத அளவுக்கு சுரணையற்றுப் போய் விட்டார்கள்.

"ஹெலி" வந்து வட்டமிடும் போதுதான் சர்வாங்கமும் விழித்துக் கொள்கின்றது.

பகலில் வட்டமிட்ட ஹெலியை நோக்கி வெள்ளைக் கொடியை ஆட்டியதும் ஒரு காலை வெளியே தொங்கப் போட்டப்படி விறைப்பாக அமர்ந்திருந்தவன் பதிலுக்கு வெள்ளைக் கொடியொன்றைக் காட்டியபோது நெஞ்சில் முகிழ்ந்த நம்பிக்கைகள் யாவுமே இந்த இருளின் அந்தகாரத்தில் சிதறுண்டு போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் வட்டமிடும் ஹெலியின் வாற்பக்கம் ஒளிர்கின்ற "மினுக் மினுக்" ஒளியிலேயே விழிகளும் நிலைக்குத்தி நிற்கின்றன.

விட்டு விட்டு முழங்குகின்ற ஷெல் அடிகளின் லயத்தைக் கூட இப்போது உள்வாங்க முடியாது இவன் நெஞ்சு தவிக்கிறது.

"இது என்ன வாணவேடிக்கை!"

தூரத்திலிருந்து வந்து விழுகின்ற ஒளிப்பந்துகள் தரையை அடைய முன்னரே கரியாகிப் போக, அதன் சூட்சுமம் விளங்காது பலரும் அச்சமுறுகிறார்கள்.

ஹெலி தொடர்ந்து வட்டமிட்டபடி "லாண்ட் மாஸ்ர"ரின் கட கட ஒலியை ஒத்த சத்தத்தைக் கிளப்பிக் கொண்டிருக்கிறது.

"பரா லைற் வெளிச்சத்திலை ஹெலியிலையிருந்து சுற்றிப் பார்க்கிறார்கள்".

தமக்குத் தெரிந்தவற்றை உடனே பீற்றிக் கொள்ளும் மனித சுபாவம் எங்கிருந்தோ ஒலிக்கிறது.

திடீரென்று முழங்கிய ஷெல் தம் தம் தலைகளிலேயே வீழ்ந்ததுவோ என ஒவ்வொருவரும் ஓலமிட, வெளியேயிருந்து சனத்திரள் ஆலயத்தின் உட்பிரகாரத்தை நோக்கி முண்டியடிக்கிறது.

காட்டாறு வெள்ளமென எற்றுண்டு வரும் மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துமுகமாக யாரோ சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் பிரதான வாயிற் கதவை இழுத்து மூடி விட்டனர்.

அருகிலிருந்த பக்கவாயிலில் மனித உடல்களெல்லாம் நெருக்குண்டு... ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் அல்லோல கல்லோலம்.

தேர் முட்டியடியில் ஷெல் வீழ்ந்து வெடித்து விட்டதென்ற செய்தி காட்டுத்தீபோல எங்கும் பரவுகிறது.

அரைகுறை நித்திரையிலிருந்தவர்களும் அரண்டு மிரண்டு சூழலின் நிலைமையை விளங்கிக் கொள்கிறார்கள்.

எங்கும் அவல ஓலங்கள்! பயத்தின் கூக்குரல்கள்!

அருகிலிருந்த துளசியையும் பிள்ளைகளையுங்கூட மனிதக் கூட்டம் ஊடறுத்து இவனுக்கும் அவர்களுக்கும் இடையே அரண் அமைத்து விடுகின்றது, பயங்கரமாக.

இவன் அவர்களுக்காகக் குரல் கொடுத்தான்.

எங்கும் இதனை ஒத்த அவலக்குரல்கள் எழுந்து ஒன்றையொன்று அமுக்கிவிட,

இந்த அமளியெல்லாம் ஒரு நிமிடம் நீடிக்குமுன்பே மிண்டும் ஒரு பேரிடி.

எங்கும் "ஐயோ" என்ற மரண ஓலங்கள்.

"எல்லோரும் வெளியே ஓடுங்கோ".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் யாருக்காகவோ ஓலமிட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் தம் உயிரே பெரிதென்று உயிரைக் கையில் பிடித்தபடி ஓடிக்கொண்டிருக்கையில், மக்கள் வெள்ளம் அடித்துக் கொண்டு சென்ற திசையில் இவனும் அள்ளுண்டான்.

வெளிவீதிக்கு வந்து சேர்ந்ததும் துளசிக்காகவும் பிள்ளைகளுக்காகவும் அலறி இருளையே துழாவுகையில், கூட்டம் கூட்டமாக வெளியே வந்து திக்குத்திசை தெரியாது ஓடிக்கொண்டிருக்கும் மக்களைக் கண்டு என்ன செய்வதென்றறியாது சற்று நேரம் திகைத்து நின்ற இவன் மீண்டும் உட்பிரகாரத்துக்கு விரைந்தான்.

கைக்குழந்தையையும் ஏந்தியவளாய் முத்தவனின் பெயரைச் சொல்லிக் கூவியவாறே காயம்பட்டு வீழ்ந்து கிடக்கும் உடல்களிடையே அவனைத் தேடிக் கொண்டிருக்கும் துளசியைக் கண்டு கலக்கமுற்ற இவன் பேசும் திறனையும் கேட்கும் திறனையும் இழந்த ஒரு மகனைப்பெற்ற தாயின் அவல நிலையைப் பூரணமாக உணர்ந்தான்.

அவளுடன் சேர்ந்து முத்தவனைத் தேடிக் கொண்டிருக்கையில் ஆலயத்தின் பின்பக்கமாக மீண்டும் ஒரு ஷெல் வீழ்ந்து வெடித்த சத்தம் கேட்கிறது.

ஆலயத்தினுள்ளோ அதன் வீதிகளிலோ இப்போது மனித நடமாட்டமே இல்லை.

முத்தவனையும் தேடிக் கண்டுப்பிடிக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளசியை மெல்ல அணைத்தவனாக வீட்டைச் சென்றடைகின்ற போது அயலிலுள்ளவர்களும் வீட்டுக்கு வந்து சேராதவர்களுக்காக அமளி துமளிப்பட்டு கொண்டிருக்கின்றனர்.

"மூத்தவனை எங்கே என்று தேடுவது"?

"எதற்கும் விடியட்டும்" என்று இவன் சொல்லும் சமாதானத்தையும் துளசி கேட்டால் தானே.

கண்ணீரில் பொழுது யுகமாகக் கழிகிறது.

நன்றாக விடிய முன்னரே, இராணுவத்தினர் முன்னேறிக் கொண்டிருப்பது குறித்து செய்திகளைக் கேட்டு அயலிலுள்ளவர்களும் ஊரவர்களும் மற்றோர் ஆலயத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில் "உந்த வீட்டு ஊமைப் பெடியனுமாம்" என்று அரைகுறையாகக் காதில் விழுந்த வார்த்தைகளைக் கேட்டு இவன் அதிர்ந்தான்.

"என்ன நடந்தாலும் நடக்கட்டும்" என்று தீர்மானித்து வீட்டிலுள்ள பதுங்கு குழியிலேயே தங்குவதென்று முடிவு செய்த சிறிது நேரத்திலேயே துப்பாக்கிகளின் வேட்டுச்சத்தம் சற்றுத் தொலைவில் கேட்கிறது.

கூவிக்கொண்டு வீட்டுக்கு மேலாகச் செல்லும் ஷெல்களின் ஓசைகேட்டு, ஆலயத்துக்குச் செல்லாமல் பதுங்கு குழியிலேயே தங்க முடிந்தது குறித்து சிறிது ஆறுதல் கொள்ளுகையில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவச் சிப்பாய்களின் சப்பாத்துக் காலடி ஓசையும் அவர்களின் உரையாடலும் வெகு அருகில் துல்லியமாகவே கேட்கின்றன.

வீட்டு முற்றத்தில் சிப்பாய்களின் நடமாட்டத்தை நன்றாக உணர முடிகிறது.

வீட்டின் பின்புறமுள்ள பதுங்குகுழியின் ஓர் அந்தத்திற்கு துளசியுடன் நெருக்கியடித்துக் கொண்டிருக்கும் இவனின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோடுகின்றது.

குழந்தையின் அழுகுரல் எழுந்து காட்டிக் கொடுத்து விடுமோ என்ற பயத்தில், தனது விம்மலையும் அடக்கியவளாய் குழந்தையின் வாயை இறுகப்பொத்திக் கொண்டிருக்கிறாள் துளசி.

பதுங்கு குழியை நெருங்கி வரும் காலடியோசைகளை இப்போது துல்லியமாகவே கேட்க முடிகிறது.

"டப்டப்... டப்டப்"

பதுங்கு குழியினுள்ளேயே நான்கு வேட்டுக்கள்

பகுங்கு குழியின் ஓர் அந்தத்தில் இருந்ததினால் தெய்வாதீனமாக உயிர்த்தப்ப முடிந்தது குறித்து நிம்மதி கொள்ள முடியவில்லை. அச்சத்தில் மூச்சு முட்டுகிறது.

சிப்பாய்களின் காலடியோசைகளும் பேச்சுக் குரல்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் மெல்ல மெல்லத் தேய்ந்து மறைந்த பின்புதான் சீரான சுவாசம் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுங்கு குழிக்கு வெளியே வந்து இவன் நிம்மதிப் பெருமூச்சு விடவும் செய்தான்.

பதுங்கு குழியிலிருந்து வெளியேறப் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கும் துளசியை ஒரு கை கொடுத்து தூக்கி விட்டவன், அவளின் அணைப்பிலிருந்து துவண்டு விழும் குழந்தையின் தலையைக் கண்டு அதிர்ந்தான்.

இவனில் ஏற்பட்ட விகாரத்தைக் கண்டு பயந்தவளாக, குழந்தையை உற்றுநோக்கி மூக்கருகே கையை பிடித்துப் பார்த்தவள் தலையில் அடித்துக் கொண்டு அலறினாள்.

"ஐயோ... ஐயோ..."

சூனிய வெளியையும் கிழித்துக் கொண்டு அந்த அலறல் நீண்ட நேரமாக எங்கும் எதிரொலித்தது.

(1988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலூன்

என் உள்ளம் குமுறிக்கொண்டிருக்கின்றது.

இவர்களுக்கு எப்படி விளங்க வைப்பது?

–மழலைகள் மனித சமுதாயத்தின் சிற்றுருக்கள் அல்லர் என்ற உளவியற் பரிபாஷையிலா?

தமது அபிலாஷைகளை எல்லாம் இந்தப் பிஞ்சுகளில் ஏற்றி, இவர்கள் எதனைச் சாதிக்க விரும்புகிறார்கள்? குழந்தைகளின் உலகமே வித்தியாசமானது என்பதை இவர்கள் அறிய மாட்டார்களா?

குழந்தைகளின் உலகத்தைப் பற்றியே தெரியாத வர்களுக்கு என் உள்ளக் குமுறல் எப்படி விளங்கப்போகிறது?

எத்தனைதரம் சொல்லியிருப்பேன், 'நீங்கள் நினைப்பதுபோல இது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியமில்லை' என்று.

இவர்களுக்கெல்லாம் இதனைப் பற்றிய அக்கறையே இல்லை. இவர்களுக்கு வேண்டியதெல்லாம் கௌரவமும் அந்தஸ்துந்தான். இந்தப் பிரதேசத்திலேயே சிறந்த சங்கம் தங்களுடையது தான் என்று காட்டிவிட வேண்டும்; மாதிரிக் கிராமஅபிவிருத்திச் சங்கம் என்ற முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இவர்களும் இவர்களின் சங்கமும் பட்டபாடு' என்று அனைத்தையும் துறந்துவிட்டு என்றோ ஓடியிருக்க வேண்டும். இப்பொழுதுங்கூட, எடுத்த காரியத்தை முடிக்க வேண்டுமே என்பதனால்தான் பல்லை இறுக்கிக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் இவர்களின் செய்கைகளை எல்லாம் பார்க்கும் போது இந்தக் கணமே ஓடிவிடலாமா என்றுதான் தோன்றுகிறது.

இந்த வேலையை விட்டுவிடவேண்டுமென்று இதுவரை எத்தனை தடவைகள் எண்ணியிருக்கின்றேன் என்பதை நினைத்துப் பார்க்கும்போது, எனது இயலாமை குறித்து எனக்கே என்மீது வெறுப்பாகவும் வருகிறது.

இவ்வாறு எண்ணுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னைச் செயலில் இறங்கவிடாது தடுத்து நிறுத்தி மீண்டும் இந்தக் கட்டுக்குள் கொண்டுவந்து விட்டுவிடுகின்ற எனது பிள்ளைகளின் அன்பையும் என் கணவரின் அன்புக் கட்டளையையும் நினைத்துப் பார்க்கிறேன்.

என் பிள்ளைகளுக்காக என் மனம் அழுது அரற்றிக் கொண்டிருப்பது இவர்களுக்கு எப்படித் தெரியப்போகிறது?

'ரீச்சர், ரீச்சர்' என்று மழலையில் கூவி, என் பின்னால் இழுபறிப்பட்டுத் திரிந்த பிள்ளைகளை எல்லாம் 'கொற கொற' என்று கைப்பிடியாக இழுத்துச் சென்று அவரவர் இல்லங்களில் அடைத்துவிட்ட 'மாதர் அபிவிருத்திச் சங்கத் தொண்டர்களின்' செய்கை கண்முன்னால் ஊசலாடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர்களுக்குள்ளும் போட்டியா? அவர்களுக்கு இல்லம் வேறா?

பாலர்களுக்கு வேண்டியதெல்லாம் அவரவர் செய்கைகள்தாம். தங்கள் செயல்களை தம் இஷ்டப்படி அவர்கள் தாமே செய்ய வேண்டும்.

அந்தச் செயல்களை ரீச்சர் பார்த்துப் பாராட்டிவிட்டால் போதும், அவ்வளவு தான்; குதூகலித்துக்கொண்டு பூச்சிகளாய்ப் பறப்பார்கள்.

இவற்றையெல்லாம் ஆறஅமர இருந்து சிந்திக்க இவர்களால் முடியுமா? இவர்களுக்கு, இந்தப் போட்டிகளை, விதிமுறை தவறாது நடாத்தி முடித்துவிட வேண்டும் என்ற தவிப்பு.

ஒவ்வொரு போட்டியொன்றை நடாத்துகின்ற ஏற்பாடுகளுடனும் கவனத்துடனும் இப்போட்டியை நடாத்தி முடித்து, அந்த நிர்வகிப்பைக்கண்டு பிரதம விருந்தினர்களாயும், சிறப்பு விருந்தினர்களாயும் வந்திருப்பவர்கள் பாராட்ட வேண்டுமே என்ற அங்கலாய்ப்புடன், இவர்கள் எல்லோரும் ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கிறார்கள்.

பிள்ளைகளுக்குத்தான் திண்டாட்டம். இது நாள்வரை அவர்கள் காணாத புதுமுகங்களைக் கண்டு மிரள்வதும் அழுவதுமாக இருக்கின்றனர்.

ஆரம்பத்தில் பிள்ளைகளுடன் ஆரம்பிப்பாளர்கள் திண்டாடிய வேளையிலும் என் சொல்லைக் கேட்ட பின்தான் பிள்ளைகள் எல்லோரும் வரிசையாகவும் ஒழுங்காகவும் வந்து நின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே எனக்குக் கிடைத்த ஒரு வெற்றிதான். மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம்போல என் சொல்லைக் கேட்டு பிள்ளைகள் எல்லோரும் ஒத்திசைந்த போது இங்கு நின்றவர்கள் எல்லோரும் மலைத்துத்தான் போய்விட்டார்கள்.

அதற்குப் பின்பாவது இவர்கள் என்னைச் சுயமாக இயங்க விட்டிருக்கலாம். ஆனால் இவர்கள் அதைத் தங்களுக்கேற்படக்கூடிய பெரிய தோல்வியாகக் கருதியிருக்க வேண்டும். அதனால் தான் என்ன வென்னவோ சொல்லி என்னை பின்தள்ளப் பார்த்தார்கள்.

"ரீச்சர், பெற்றார் எங்களைக் குறை சொல்லுவினம். நீங்கள் ஒன்றும் விளையாட்டுத் தொடங்கிற இடத்துக்கோ, முடியிற இடத்துக்கோ போக வேண்டாம். அடுத்தடுத்த விளையாட்டுகளுக்கு பிள்ளையளைத் தயார்ப்படுத்தி அனுப்பினால் போதும்..."

தலைவியின் நாசூக்கான வார்த்தைகள் நாராசமாய் என் காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக் கின்றன.

இவர்கள் தான் போகட்டும். இந்தப் பெற்றோர்களுமா இப்படி மாறிவிட்டார்கள்; இந்தப் பெற்றோர்களுக்குமா என்னை விளங்கிக்கொள்ள முடியவில்லை. இந்த விளையாட்டு விழாவுக்கென பிள்ளைகளுடன் நான் எவ்வளவு தூரம்பாடுபட்டுவந்தேன் என்பதையும் ஒவ்வொரு நாளும் கண்டுவந்தார்களே.

இந்த விளையாட்டு விழாவின் நோக்கமே மாறி விடக்கூடாது என்பதற்காக இப்பெற்றோர்களை அழைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு தூரம் இந்தவிழாபற்றி விளக்கியிருந்தேன். அப்படியிருந்தும் எப்படி இன்று இவர்களால் தங்களுக்குள் போட்டிபோட முடிகிறது தங்கள் தங்கள் பிள்ளைகளுக்காகவும் அவரவர் இல்லங்களுக்காகவும் இத்தனை கூப்பாடு போடுகின்ற இப்பெற்றோரை எண்ணும் போது எனக்கு மலைப்பாக இருக்கிறது.

பெற்றோரைக் குறைசொல்லியும் பயனில்லைத்தான். அவர்களை அழைத்து, விசேட கூட்டமும் நடத்தி, இந்த விளையாட்டு விழாவை பெரிய போட்டியாக நடாத்துவதற்கு அப்பெற்றோரின் ஒத்துழைப்பையும் கோரியிருந்த மாதர்சங்க நிருவாகந்தான் அவர்களை இவ்வளவு தூரம் மாற்றியிருக்கின்றது.

"நீங்கள் ஒருவரும் குறை சொல்லாத அளவுக்கு இந்த விளையாட்டுப் போட்டியை நடத்தி முடிக்கவேணும். அதனாலைதான் நாங்கள் இந்த ஊரிலையிருந்து ஒருத்தரையும் எடுக்காமல் பிற ஊர்களிலையிருந்து மத்தியஸ்தத்துக்கு ஆட்களை எடுத்திருக்கிறம்" என்று தலைவி சொன்ன போது அதன் உள்நோக்கத்தை அறியாதவர்களாக பெற்றோரும் தலையாட்டத்தான் செய்தார்கள்.

பெற்றோர்களுக்கு எங்கே தெரியப்போகிறது, இவை எல்லாமே தமது சங்கத்தைப் பிரபல்யப்படுத்த இவர்கள் எடுக்கின்ற முயற்சிதான் என்று.

இவர்களுக்கெல்லாம் கட்டுப்பட வேண்டும் என்று எனக்கு என்ன தலையெழுத்தா? அதனால்தான் இந்தப் போட்டி முடிந்த கையோடேயே என் வேலையையும் விட்டுவிடுவதாக எண்ணியிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முறை என் கணவரும் என் முடிவை ஆதரித்துத் தானாக வேண்டும். இன்றைய நிகழ்வுகள் எல்லாந்தான் நிதர்சனமாகத் தெரிகின்றனவே.

இந்த விழாவின் ஆயத்தங்களுக்கான விசேட கூட்டத்தில், 'இந்த விழாவைப் போட்டியாக்காதீர்கள்' என்ற என் கருத்தை, மாதர் அபிவிருத்திச் சங்க நிருவாகிகள் ஏற்றுக் கொள்ளாதபோதே எனக்குத் தெரிந்து விட்டது, இவர்களுடன் ஒத்துப்போக முடியா தென்று. அன்றைய கூட்டம் முடிந்து வீட்டுக்குச் சென்று அன்றைய கூட்ட நிகழ்வுகளை எல்லாம் என் கணவருக்கு எடுத்துக்கூறி, இந்த வேலையை விட்டுவிடப் போவதாக என் கணவரிடம் முன் அறிவித்தல் கொடுத்ததும் ஒரு வழிக்கு நல்லதுதான்.

என் கணவர்மீதுகூட எனக்கு இன்று கோபம் கோபமாகத்தான் வருகிறது. இவராவது எனக்கு அனுசரணையாக நாலு வார்த்தை சொல்லலாமே.

அதுதான் இல்லை. இங்கு நடக்கின்ற அநியாயத்தை எல்லாம் பார்த்தீர்களா என்று இரக்கத்துடன் அவரை நான் பார்க்கின்ற ஒவ்வொரு வேளையிலும் என்னைப் பரிவுடனாவது பார்க்கவேண்டுமே. மாறாக, ஒவ்வொரு வேளையிலும் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொள்ள வேண்டுமா?

சிரிப்பு, என்ன சிரிப்பு. இந்த நேரத்தில் என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது? என் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பதைக் கண்டும் என் முகவாட்டத்தைக் கண்டும் இவரால் எப்படி சிரிக்க முடிகிறது? குறுந் தாடியையும் வருடிக் கொண்டு, அது என்ன சிரிப்பு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நேரத்தில் மட்டுமா?

எனக்கும் இவருக்கும் உள்ள விருப்பத்திற்குக் குறுக்காக நின்ற என் பெற்றோரையும் உதறித் தள்ளிவிட்டு இவரிடம் ஓடிவந்து, இவரின் குடும்ப நிலையைக் கண்டு அவசரப்பட்டு விட்டோமே.. சிறிது காலம் பொறுத்திருக்கலாமே, என்று நான் செய்த தவறை உணர்ந்த வேளை.....

திருமணம் முடிக்காத இவரின் சகோதரிகளுக்கு மத்தியில் கும்மாளம் அடிக்க வந்து விட்டா ராசாத்தி என்று காதுபடவே அயலவர்கள் குத்தலாக கதைத்த வேளை.....

குடும்ப நிலைமையை அனுசரித்து எமக்குள்ளேயே கட்டுப்பாட்டை விதித்துக்கொண்டு நான்கு வருஷ தாம்பத்திய வாழ்வையும் நெருப்புப்பாறையைக் கடப்பது போல வாழ்ந்து வருகையில் "குழந்தை இல்லாத மலடியாக்கும்" என்று ஊரவர் பழிசுமத்திய வேளை..

இந்த ஊரின் மாதர் அபிவிருத்திச் சங்கம் நடாத்துகின்ற பாலர் பாடசாலையின் ஆசிரியையாகி, இவரின் செலவிலேயே பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சியையும் முடித்து, இப்பாடசாலைப் பிள்ளைகளுடன் அன்னையாகவும் தந்தையாகவும் தோழியாகவும் ஆசானாகவும் சேவகனாகவும் என்னைப் பிணைத்துக் கொண்ட போதும் "நிருவாகம்" என்ற கவசத்தைப் பூண்டு, மாதர் அபிவிருத்திச் சங்கம் என்னை அதிகாரஞ் செய்கின்ற வேளை...

இப்படி எத்தனை, எத்தனை. இந்த ஒவ்வொரு வேளையிலும் நான் வருந்தியதை உணர்ந்தபோதும் என்னைப் பார்த்து இவரால் எப்படிச் சிரிக்க முடிந்தது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பு என்பது, பரிவு என்று இவரின் அகராதியில் அர்த்தமாக இருக்கலாம். எந்த ஒன்றுக்கும் கலங்காத உறுதி இவரிடம் இருக்கலாம். ஆனால் நான்...

எங்களுக்கென்றொரு குழந்தையைப் பெற்றுக் கொண்டாலென்ன என்று நெஞ்சில் ஆசை முகிழ்கின்ற வேளை, "இந்தப் பாலர் பாடசாலைப் பிள்ளைகள் எல்லாமே உன் பிள்ளைகள் தானே?" என்று ஆதரவாகக் கூறி சகோதரிகளின் திருமணம் முடிகின்றவரை பொறுத்துக் கொள்ளச் சொல்கின்ற இவரின் சமார்த்தியம்.

பாலகர்களுக்குப் பாடம் போதிப்பதனால் பிள்ளைகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம் என்று சொல்லி, "குழந்தை உளவியல் பற்றிய போதனையையும் செய்து" எந்த எந்த நேரத்தில் எப்படிப் பிள்ளைகளுடன் நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் குழந்தைப் பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவது போல விளக்கமாகச் சொல்லித் தருகின்ற லாவகம்....

"விரலுக்குத் தகுந்த வீக்கம்" என்பது போல தன் வல்லமைக்குப் பொருத்தமான இடங்களில் பேசி முடித்துத் தம் சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் மணம் முடித்துக் கொடுத்து வருகின்ற உலகானுபவம்...

இவை எல்லாமே இவர் மீது என்னைப் பிரமை கொள்ளத்தான் செய்கின்றன. இவருக்காக... இவரின் ஒரு சொல்லுக்காக.... இவர் என் மீது காட்டுகின்ற பரிவுக்காக, எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ளலாந் தான். ஆனால் இந்த ஒரு விடயத்தில் மட்டும் இனியும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. நான் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவை இன்று இவரிடம் சொல்லத்தான் போகின்றேன்.. ஏன், இவரும் தான் இன்றைய நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டு வருகின்றாரே.

"ரீச்சர், ஆரம்பிக்கின்ற இடத்துக்கோ முடிவடைகின்ற இடத்துக்கோ போக வேண்டாம்" என்று தலைவி சொல்வது ஒருபுறம் இருக்கட்டும் ஆனால் முறுக்கு மீசைகளுடன் கூடிய இரு கிங்கரர்கள்தான் ஆரம்பிப்பாளராக அமைய வேண்டுமா?

அதுதான் போகட்டும். அழகு ராணிப் போட்டிக்கெனத் தம்மை அலங்கரித்துக் கொண்டவர்கள் போல வந்திருந்து, அலுங்காமல் நலுங்காமல் நளினம் காட்டுகின்ற இந்த நவநாகரிகப் பெண்கள்தான் மத்தியஸ்தம் வகிக்க வேண்டுமா?

மத்தியஸ்தம் சரியில்லை என்று கொக்கரித்து, குழந்தைகளின் விளையாட்டு என்பதையும் மறந்து, விளையாட்டு விதிமுறைகளில் நுணுக்கம் காட்டி, நடாத்தி முடிந்த விளையாட்டுக்களையும் திரும்ப நடாத்த வேண்டும் என்று குழப்பம் விளைவிக்கின்ற இந்தப் பெற்றோர்களைக் காணக் காண எனக்கு எரிச்சலாக வருகிறது.

பிள்ளைகளுக்குப் போட்டி முக்கியமல்ல; அவர்களுடைய பங்குபற்றல் தான் முக்கியம் என்று எடுத்துச் சொல்லி, பெற்றோர்கள் எல்லோரையும் முன் எச்சரிக்கை செய்து, இந்தப் பாலர் விளையாட்டு விழாவை ஒரு போட்டியாக மாற்றவிடாமல் நான் எடுத்துக் கொண்ட முன் எத்தனங்களையும் மீறி, இந்தப் பெற்றோர்கள் இப்படிக் குழப்பம் விளைவிக்கிறார்களேயென்றால், இவற்றுக்கு எல்லாம் சூத்திரதாரிகள் இந்த நிருவாகிகள்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு அழகுணர்ச்சியே இல்லையா?

விளையாட்டுக்கள் ஒவ்வொன்றும் அழகாவும் ஒழுங்காகவும் இருக்க எண்ணி, பிள்ளைகள் ஒவ்வொரு வரையும் தாராபோல் குறுநடை பயில விட்டு, யானைபோல் அசைந்தாடி நடக்கவிட்டு, முயல்போல் குதித்துக் குதித்து ஓடவிட்டு, பிள்ளைகளின் செய்கைகளிலெல்லாம் அழகு கூட்டி, கனகச்சிதமாகப் பயிற்சி அளித்து, பிள்ளைகளைத் தயார்படுத்தியிருந்தேனே. இந்த அழகையெல்லாம் எப்படி இவர்களால் சிதைக்க முடிந்தது...

இன்று தவளைப் பாய்ச்சலா வைத்தார்கள். அல்லது தாராநடை பயிலவா விட்டார்கள். அது தான் இல்லையே. பெற்றோர்களும் பார்வையாளர்களுமாக சேர்ந்து, ஒவ்வொரு விளையாட்டையும் ஓட்டப்போட்டியாகத்தானே முடித்தார்கள்.

தாராநடை பயின்ற பிள்ளைகளில் இருவர் ஒரே நேருக்கு மெதுமெதுவாக சீருடையில் அழகு நடை நடந்து வந்த போது, முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்டவர்கள் முடிவிடத்தை அடைந்து விட்டார்கள் தானேயென்று விளையாட்டை முடித்துக் கொண்டு, அந்த மழலைகள் இருவரையும் நடைபயின்று முடிக்க விடாது, இடையிலேயே தூக்கி அப்புறப்படுத்திய மாதர் சங்கத் தொண்டர்கள் கூட "நிருவாகத்தின்" பணிப்பின் பேரில் தானே இயங்கினார்கள்.

இவை எல்லாந்தான் போகட்டும், பலூன் உடைக்கும் விளையாட்டுக்கு என்றுமட்டும் என் சொந்தச் செலவில் எத்தனை பலூன்கள் வாங்கியிருப்பேன். இரண்டு பெட்டிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய பலூன்களை எடுத்துச் சென்று, பலூன் ஊதி உடைக்கப் பயிற்சி கொடுத்து, உடைத்த பின்பும் வீட்டுக்கு எடுத்துச் செல்ல ஒவ்வொரு பலூன் கொடுத்து ஒவ்வொரு பிள்ளையையும் கொண்டு பலூன் உடைப்பித்து, அவர்களின் திறமைக்காக அவர்களையே கைக்கொட்டி மகிழச் செய்து, விளையாட்டு விழாவிலும் எல்லாப் பிள்ளைகளும் பலூனை ஊதி உடைக்க வேண்டும் என்று சொல்லியிருந்தேனே. இவற்றை எல்லாம் பெற்றோர்களுந்தான் கண்டு வந்தார்களே. விளையாட்டுப் பழக்கத்தின் போதும் போதனை வேளைகளிலும் இந்த நிருவாகிகள் வந்து பார்த்திருந்தாலல்லவா அவர்களுக்கு இவை எல்லாம் விளங்கும்?

முதல் மூன்று பிள்ளைகள் பலூனை ஊதி உடைத்ததுமே "நேரம் போயிட்டுது, மற்ற பிள்ளையளை உடைக்காமலே பலூன்களைக் கொண்டுபோகச் சொல்லுங்கோ" என்று சொல்லி, தொண்டர்களை அனுப்பி, பலூன்களைப் பறித்துக் காற்றுப்போகச் செய்து, மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவி பிள்ளைகள் மீது தம் பரிவைக் காட்டியதைக் கண்டு என் உள்ளம் உடைந்தது, இவர்களுக்கு எப்படித் தெரியும்?

குழந்தை சுதாவை நினைத்துக் கொள்கின்ற போது எனக்குத் துக்கம் பீறிட்டுக்கொண்டு வருகின்றது.

பலயீனமான குழந்தை என்று மற்றையோர் கணிப்பிலுள்ள அந்தக் குழந்தைக்குக்கூட நம்பிக்கையூட்டி, கூடவே சேர்ந்து பலூன் ஊதி, அந்தக் குழந்தையைக் கொண்டே பலூனை ஊதி உடைக்கச் செய்து, அந்தக் குழந்தையிடம் பொங்கும் மகிழ்ச்சியில் நான் அனுபவித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷம் நினைவுக்கு வந்து என்னை என்னவோ செய்கிறது. காற்றுப்பறிந்த பலூனைப் பெற்றுக் கொண்டு, சுதா என்னைப் பார்த்த பார்வை இருக்கிறதே அப்பப்பா...

நேரம் போய்விட்டதே என்று இத்தனையையும் செய்து முடித்தவர்கள் பேச்சுப்பேசி ஏன் இப்படி நீட்டி முழக்க வேண்டும்.

பிள்ளைகளிற் பலருக்கு நித்திரை வந்திருக்க வேண்டும். கண்களில் சோர்வு தெரிகிறது. அது இவர் களுக்குத் தெரிந்தால் தானே? முதலில் பரிசளிப்பை முடித்து விட்டு பேசலாமே என்ற என் ஆலோசனையைக் கேட்டால் தானே? மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவியோடு விட்டாற் போதாதா? இந்த ஊரின் பல்வேறு நிறுவனங்களின் தலைவர்களையும் அல்லவா மேடைக்கு அழைத்திருக்கிறார்கள். அவர்களும் "நாங்கள் ஒன்றும் சளைத்தவர்களில்லை" என்று தம் பெருமைகளையெல்லாம் பீற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றரை மணித்தியாலமாகப் பேசிக்கொண்டிருந்த பேச்சுக்கள் எல்லாம் ஒருவாறு ஓய்ந்துவிட்டன. பிள்ளைகள் ஒவ்வொருவரும் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும்போது அவர்களின் மலர்ச்சியைக் காண நான் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

பிள்ளைகள் ஒருவருக்குமே ஏமாற்றமில்லாமல் முதலில் ஒவ்வொருவருக்கும் பெறுமதியான பரிசைக் கொடுத்து விட்டுப் பின்பு வெற்றியெடுத்தவர்களுக்கான பரிசுகளை கொடுக்கலாம் என்ற என் ஆலோசனையையாவது முன்னைய கூட்டத்தில் ஏற்றுக்கொண்டார்களே என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தியோடு, பிள்ளைகள் ஒவ்வொருவர் முகத்தையும் நன்கு பார்க்கக் கூடிய இடத்தில் நின்று கொள்கிறேன்.

என்ன இது? செயலாளர் ஏன் இப்படி ஏறுக்கு மாறாக நடந்து கொள்ள வேண்டும்.

வெற்றியெடுத்தவர்களின் பெயர்களை மட்டுமே செயலாளர் வாசித்துக் கொண்டிருக்க, என்னால் இனியும் பொறுக்க முடியாதெனத் தீர்மானித்தவளாய், அவ்விடத்திற்கு நெருங்கி, முதலில் பிள்ளைகள் எல்லோருக்கும் பரிசுகளை வழங்குமாறு சொல்கிறேன்.

"நேரம் போயிட்டுது. பரிசு கிடையாத பிள்ளையளுக்கு நாளைக்கு நேசரியிலை வைச்சுக் கொடுப்பம்" என்று தலைவி சொல்வதைக் கேட்டு என் நெஞ்சம் வெடித்து விடும் போல இருக்கிறது.

வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கொடுத்து முடிவடையும் தறுவாயில் "இனியாவது மற்ற பிள்ளைகளுக்கும் கொடுக்கலாம் தானே" என்று கெஞ்சலாகவே தலைவியிடம் கேட்கிறேன்.

"இல்லை, எங்கடை பிரதம விருந்தினருக்கு நேரம் போயிட்டுது" என்று தலைவி சொல்லிக் கொண்டிருக்கையில் பிரதம விருந்தினரே குறுக்கிடுகின்றார்.

"இல்லை நான் இருக்கிறன். மற்றைய பிள்ளைகளையும் கூப்பிடுங்கோ".

என் உள்ளம் குதூகலிக்கின்றது. ஒவ்வொரு பிள்ளையின் பெயரையும் கூப்பிடும் போது காத்திருந்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல, துள்ளல் நடையுடன் வந்து பவ்வியமாகத் தலைக்குனிந்து வணங்கி பரிசைப் பெற்றுக் கொள்ளும் காட்சி கண்களை நிறைக்கிறது. இறுதியாக சுதாவின் பெயர் வாசிக்கப்படுகிறது.

"சுதா....சுதா..."

சுதாவைக் காணவில்லை. அப்போதுதான் சுதாவைக் காணவில்லை என்று அறிந்து கொண்ட அவளின் தாயும், சுதாவின் பெயரைச் சொல்லி உரத்துக் கூப்பிடுகின்றாள். சுதாவின் பெயரை விளித்துப் பல குரல்கள் ஒரே நேரத்தில் ஒலிக்கின்றன.

எனக்குப் பரபரப்பாக இருக்கின்றது. "சுதா, சுதா" என்று கூவிக்கொண்டே ஓடுகிறேன். என் பின்னாலேயே என் கணவரும் ஓடிவருவது தெரிகிறது.

நன்கு இருட்டிவிட்டமையால் ஒன்றும் தெரியவில்லை. விளையாட்டுத் திடலில் இருந்து சற்றுத் தூரத்திலிருந்த பாலர் பாடசாலைக் கட்டிடத்தை நோக்கி இருவரும் ஓடுகிறோம். கட்டிடத்தின் முன்னால் உள்ள ஆலமரத்தின் கீழுள்ள வெளியில் யாரோ நிற்பது போலத் தெரிகிறது.

அருகில் நெருங்குகிறேன். என் கணவர் கூடவே வைத்திருந்த "டோர்ச் லைற்" வெளிச்சத்தை எங்கள் மீது பாய்ச்சுகிறார். என் மனம் அதிர்ந்தது.

வழமையாக ஆலமரத்தின் கீழே நிழல் விழும் சிறு நிலப்பரப்பில் கோடுகீறி விளையாட்டுப் பழக்கும் அதே இடத்தில் சுதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் பலூன் ஒன்றை வைத்து ஊதிக்கொண்டு மூச்சு இளைக்க இளைக்க எடுக்கும் முயற்சியைக் கண்டு என் இதயமே வெடித்துவிடும் போல் இருக்கிறது.

ஓடிச்சென்று சுதாவை தூக்க முயற்சிக்கிறேன். "வேண்டாம்" என என்னைத் தடுத்து நிறுத்துகிறார் என் கணவர்.

"சுதா இன்னும் ஊது" என்று இருவருமே உற்சாகமூட்டுகிறோம்.

பலூன் பெரிதாகி.... பெரிதாகி...

"படார்"

சுதாவைத் தூக்கிக் கொண்டே, பொத்துக் கொண்டு வரும் அழுகையை அடக்க மாட்டாதவளாய் விம்முகிறேன்.

என் முகத்தை நிமிர்த்தி, என் கண்ணீரைத் துடைத்து விடும் அவரின் முகத்தைப் பார்க்கிறேன். இப்போது அதில் சிரிப்பு இல்லை.

(1993)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரளயம்

"பிள்ளையாரே!"

உலை மூடியைக் கையில் எடுக்கும் போதே முத்துக் கிழவனின் நெஞ்சு ஓலமிட்டது.

தீன் உண்டு முடித்தானதும் உலை மூடியைக் கழுவி எடுத்து, சோற்றுப் பானைக்குள் நீரையும் ஊற்றி அதனை உலை மூடியால் மூடி வைத்து விட்டு படுக்கின்ற பாயைத் தட்டி விரிக்கின்றபோதும்...

"பிள்ளையாரே!"

இப்போது கொஞ்ச நாட்களாகவே இப்படித்தான்.

ஓரிடத்தில் ஓய்வாக உட்காரும் போதும், உண்ணும் உணவைக் கையில் எடுக்கின்ற போதும், படுக்கையைத் தட்டிவிரிக்கின்ற போதும்... என முத்துக் கிழவனின் நாளாந்த கடமைகள் ஒவ்வொன்றின் போதும் அவனை அறியாமலே இந்த ஓலம் உள்ளொலித்துக் கொண்டு தான் இருக்கின்றது.

இந்த ஓலத்தைப் பற்றுக் கோடாகப் பிடித்துக் கொண்டு தான், அவன் தனது நாளாந்த கடமைகளைக் கூடச் செய்து வருகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சஞ்சாரமற்று, சூனியப் பிரதேசமாகிவிட்ட இந்தக் கிராமத்தில் முத்துக் கிழவனுக்குப் பேச்சுத்துணைக்குக்கூட யார் இருக்கிறார்கள்?

அதனாலேதான் பிள்ளையாரையே துணைக்கழைத்து, வாய்திறந்தும் பல தடவைகளில் "பிள்ளையாரே" என்று அவன் புலம்பவும் செய்கிறான்.

முத்துக்கிழவனிடத்தில்தான் என்ன அசாத்திய நம்பிக்கை! தன் வேண்டுதலுக்கு தன்பிள்ளையார் செவிசாய்க்கத்தான் போகின்றார் என்ற தனது நம்பிக்கையில் சற்றும் தளர்ந்து போகாதவனாக அவர் கோயில் கொண்டிருக்கும் அத் திக்குநோக்கி அடிக்கடி கை எடுத்துக் கும்பிடவும் செய்தான்.

பாயை விரித்தானதும் படுக்கப்போகமுன் தன் குடிலுக்கு வெளியே வந்து கிழக்கு நோக்கிப் பார்வையை எறிகையில், அமாவாசை இருளின் அந்தகாரத்தில் தரவைவெளிகூடப் பூதாகரமாகத் தோன்ற... தன் நெற்றியில் கையை வைத்து இருளையே துழாவி, அந்த இருளையும் ஊடறுத்துக் கண்டுகொண்ட காட்சியில் உள்ளம் உருக... அவனை அறியாமலே அவனின் இரு கரமும் எழுந்து உச்சிக்குமேலே குவிகின்றன.

இன்று நேற்றல்ல, என்றோ இவனுக்குப் பழக்கமாகிப் போன வழக்கம் இது. படுக்கைக்குப் போகுமுன் குளத்தடிப்பிள்ளையாரை வணங்காமல் முத்துக்கிவனுக்கு நித்திரை வந்ததே இல்லை.

குளத்தடிப் பிள்ளையாரின் தூபிவிளக்கை ஒளி யேற்றக்கூட அங்கு ஒருவரும் இல்லையே என்று நினைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனம் வெதும்பினான். அவ்விளக்கின் ஒளியில் தூபியும் அதன் முடியும் இலங்கும் காட்சியைத் தன் மனக்கண்ணில் வரவழைத்துக் கொண்டு பிள்ளையாரை மானசீகமாகத் துதித்துத் தன்னுள் உருகவும் செய்தான்.

மானசீகமான இந்தத் தரிசனத்திலேயே உள்ளம் அமைதியுற, அந்த அமைதியுடனேயே முத்துக்கிழவன் மெல்ல நடந்து வந்து பாயில் சரிந்து கொண்டான்.

பகல் முழுவதும் ஓயாமல் வேலை செய்ததில் உடல் முழுவதும் ஒரே அசதி. ஆனாலும் உடலின் அசதி பாழும் மனத்திற்குத் தெரியவா போகின்றது. உடலின் அசதியையும் விஞ்சி அது விழித்துக் கொள்கிறது.

"இந்த நிலைமை எங்கே போய் முடியும்?"

அவனுக்கே தெரியாதது அது. ஒருவேளை குளத்தடிப் பிள்ளையாருக்குத் தெரிந்திருக்கக்கூடுமென்று அவன் நம்பினான்.

குளத்தடிப் பிள்ளையார் மீதான இந்த நம்பிக்கை என்றோ அவனுள் விதைக்கப்பட்ட ஒன்று.

முதுமை வந்தெய்தி உடல் தளர்ந்து நினைவுகள் மறந்துபோகின்ற நிலையிலும், குளத்தடிப்பிள்ளையார் மீதான "நம்பிக்கை வித்து" அவனுள் ஊன்றப்பட்ட காட்சி இன்றும் அவன் நினைவில் நிலைத்திருக்கிறது.

அந்தக் காட்சியை இன்றும் நினைவில் மீட்டுகின்ற போது, "பிள்ளையாரே, பிள்ளையாரே" என்ற ஓலம் சிறிது சிறிதாக வளர்ந்து, "ஐயோ புள்ளையாரே" என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலத்துடன் ஒன்றாகிக் கலந்து, அலை அலையாய்ப் பொங்கிப் பிரவகித்து அவனின் செவிப்பறைகள் இரண்டையும் தாக்கி மோதிக் கொண்டு தான் இருக்கிறது.

தானும் தன்போன்ற சிறுவர்களும், மண்வெட்டிகளும் கடப்பாரைகளும் தாங்கி நின்ற ஆடவர் பக்கமாகவும், "பிள்ளையாரே, ஐயோ புள்ளையாரே" என்று ஓலமிட்டுக் கொண்டிருந்த பெண்கள் பக்கமாகவும் மாறி மாறி ஓடிய காட்சி மங்கலான நிழற்படம் போல் இன்றும் அவன் நினைவில் விரிகின்றது.

அந்தச் சிறுவர்களுக்கு அந்த நேரத்தில் அந்த நிலைமையின் தார்ப்பரியம் அவ்வளவாக விளங்காது தான். ஆனால், சிறுவன் முத்துவுக்கு அதன் தார்ப்பரியத்தை அவனது அம்மா உணர்த்திய போது அவனுக்கு அது விளங்கவே செய்தது.

அதன் பின் இன்று வரை அந்தச் சம்பவத்தை எத்தனை பேருக்கு அவன் விளக்கமாக விபரித்திருக்கிறான்.

கதை கேட்டு நிற்கும் சிறுவர்களுக்கு பீடிகையுடன் கூடிய வீரதீரக்கதையாக, நாஸ்திகம் பேசுகின்ற இளைஞர் களுக்கு ஆண்டவனின் அற்புதத்தை உணர்த்தும் தெய்வீகக் கதையாக, ஊருக்குப் புதியவர்களுக்கு குளத்தடிப் பிள்ளையாரின் மகிமை கூறும் வரலாற்றுக் கதையாக என்றெல்லாம் அந்த ஒரே காட்சியையே வகைவகையாக விபரிப்பதென்பது முத்துக்கிழவனுக்குக் கைவந்த ஒரு கலை.

பேரக்குழந்தைகளையும் அயல்வீடுகளிலுள்ளவர்களின் பிள்ளைகளையும் கூட்டிவைத்துக் கொண்டு கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதென்றால் முத்துக்கிழவனுக்கு அளவில்லாத ஆனந்தம். கதை கேட்பதிலோ குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை. "தாத்தா, தாத்தா" என்று முத்துக் கிழவனைக் கட்டியணைப்பதும் முத்தமாரி பொழிவதுமாகத் தம் அன்பை யெல்லாம் கொட்டித் தீர்த்து விடுவார்கள். அந்த மகிழ்ச்சிப் பரவசத்தில் அமிழ்ந்து முத்துக்கிழவன் புதுத்தெம்பும் உற்சாகமும் பெற்றுவிடுவான்.

இந்தத் தெம்பும் உற்சாகமுந்தான் அவனை இயக்கிக் கொண்டிருந்தது என்றுகூடச் சொல்லலாம்.

குழந்தைகளை நினைத்துக் கொண்டபோது முத்துக் கிழவனின் கண்களில் நீர் முட்டியது. "அப்புறம் என்னாச்சி தாத்தா?" என்று நிவேதிக்குட்டி மழலையில் கேட்பது இன்னும் காதுகளில் ஒலிப்பதுபோன்ற உணர்வு. தன் உடலையே ஒருமுறை சிலிர்த்துக் கொண்டான்.

முத்துக் கிழவன் கதை சொல்லும் அழகே தனி அழகு தான். "குழந்தைகளின் உலகம்" பற்றிய தெளிந்த அறிவு நிரம்பப் பெற்றவன் போல, குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் முறையிலேயே கதைகளைச் சொல்வான். கூடியிருக்கும் குழந்தைகள் எல்லோரையும் சுற்றிவரப் பார்த்து விட்டு, யார் யாரெல்லாம் கதைகேட்க வரவில்லை என்று முதலிலேயே கணக்கெடுப்பான். "மீனுக்குட்டியும் பானுக்குட்டியும் இன்றைக்கு வரேல்லையோ... என்ன சோக்கான கதை.... பாவம், அதுகள்" என்று சொல்லும் போதே பிள்ளைகள் ஆர்வம் மேலிட, கதையைச் சொல்லுங்கோவன் தாத்தா என்று கெஞ்ச ஆரம்பிப் பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியென்றால் அவையளையும் யாராவதொருவர் போய்க் கூட்டிக் கொண்டு ஓடிவாருங்கோ" என்று கிழவன் சொல்லி முடிக்குமுன் ஒன்றுக்கு ஒன்பது பேராய் "வராதவர்களைக் கூட்டிவர என்று" ஓடுவார்கள்.

பிள்ளைகள் எல்லோருமே வந்துவிட்டார்கள் என்று உறுதியானதும், "ராஜா – ராணிக் கதை" சொல்லும் பாணியிலேதான் குளத்தடிப் பிள்ளை யாரின் கதையையும் ஆரம்பிப்பான்.

"முன்னொரு காலத்திலை இந்த இடமெல்லாம் ஒரே காடாய் இருந்தது. அந்தக் காட்டிலை முயல், குரங்கு, மான் என்று மனிசருக்குத் தீங்கு செய்யாத மிருகங்கள் வாழ்ந்தது... அவை மட்டுமில்லாமல் கரடி, புலி, சிங்கம், யானை என்றெல்லாம் பல வகையான மிருகங்களும் இருந்ததாம்" என்று சொல்ல ஆரம்பிக்கும் போதே கதை களைக்கட்டத் தொடங்கி விடும்.

காட்டு மிருகங்களின் பெயர்களைச் சொல்லும் போது ஒவ்வொரு சொல்லையும் அட்சரசுத்தமாக உச்சரித்து, அவ்வவற்றின் தன்மையைப் புலப்படுத்துமாற்போல் அம்மிருகங்களாக உருவகித்து, இடைஇடையே அம்மிருகங்களின் குரல்ஒலிகளை எழுப்பி, அடர்ந்த காட்டையும் அதில் வாசஞ் செய்யும் மிருகங்களையும் ஒன்றாகச் சேர்த்து, குழந்தைகள் ஒவ்வொருவர் நெஞ்சங்களிலும் அருமையான சித்திர மாகவேதீட்டிவிடுவான். "சிங்கம் என்ன செய்யும்?" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் கேட்டு விட்டு, சிங்கத்தைப்போல் கர்ச்சித்து, "ஆட்களைக் கண்டால் அப்படியே பாய்ஞ்சு பிடிச்சுத் தின்றுவிடும்" என்று பயந்து நடுங்கிச் சொல்லும்போது, நிர்மலன் உண்மையாகவே பயந்து கிறீச்சிட்டுவிடுவான். சில தைரியமான குழந்தைகள் "சபாஷ் தாத்தா" என்று சொல்லிக் கைதட்டித் தாத்தாவுக்கு உற்சாகமூட்டுவதோடு நிர்மலனைக் கேலியும் செய்வார்கள்.

நிர்மலன், இயற்கையிலேயே பயந்த சுபாவமுள்ளவன். தாத்தா கதை சொல்லச் சொல்ல, பயத்தில் தாத்தாவை நெருங்கி வந்து அமர்ந்து கொள்வான். தன் "மகள் வயிற்றுப் பேரன்" பயந்தாங்கொள்ளியாக இருப்பதில் தாத்தாவுக்குச் சிறிது வருத்தந்தான். ஆனாலும் கதைகள் சொல்லிச் சொல்லியே அவன் பயத்தைப் போக்கி விடலாம் என்ற நம்பிக்கை முத்துக்கிழவனுக்கு இருந்தது. உடனடியாகவே அந்தப் பயத்தைப் போக்கும்வகையில் அந்த நாட்டு ராசாவின் வீரதீரத்தைப் பற்றிச் சொல்லத் தொடங்கி விடுவான்.

"இந்தக் கரடி, சிங்கக்களுக்கெல்லாம் அந்த நாளிலை இந்தப் பிரதேசத்தை ஆட்சி செய்துவந்த ராசா பயப்பிடமாட்டார். தன் ஆட்சிப்பிரதேச எல்லைக்குள் இருந்த இந்தக் காட்டுக்கு அடிக்கடி வந்து கொடிய மிருகங்களை எல்லாம் வேட்டையாடிக் கொண்டு செல்வார். என்று அந்த அரசனின் வீரப்பிரதாபத்தைக் கூறும்போதே, "ராசாவைச் சிங்கம் ஒன்றும் செய்யாதா, தாத்தா?" என்று தயக்கத்துடன் நிர்மலன் கேட்பான்.

"ராசாவின் கையில் தான் வில்லும் அம்பும் இருக்குமே. குறிபார்த்து கரடி, சிங்கம் எல்லாவற்றையும் வீழ்த்திவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய உடைவாளால் குத்திக் கொன்றுவிடுவார்" என்று சொல்லும்போது, நிர்மலன் உட்பட பிள்ளைகள் யாவரும் புது உற்சாகம் பெறுவர். இந்த உற்சாகம் பிள்ளைகளிடம் எழுந்ததுமே குளத்தடிப்பிள்ளையாரின் மகிமையைப்பற்றி விஸ்தாரமாகவே முத்துக் கிழவன் விபரிக்கத் தொடங்குவான்.

"அடிக்கடி வேட்டைக்கு வந்துபோன ராசா இந்தக் காட்டை அழிச்சு, அதுக்குப் பக்கத்திலை ஒரு பெரிய குளத்தையும் வெட்டி, இந்தக் காடு இருந்த தாழ்ந்த நிலப்பகுதியிலை விவசாயம் செய்யலாம் என்று தீர்மானிச்சார். தன்னுடைய சனங்களைக்கொண்டு, இந்தக் காட்டின் ஒரு பகுதியை அழிச்சு பயிர்செய்யக்கூடிய விவசாய நிலமாக்கினார். பக்கத்திலை, ஒரு பெரிய குளத்தை வெட்டுவிச்சு அந்தக் குளத்துக்கு ஒரு பெரிய அணையையும் கட்டுவிச்சார்."

குழந்தைகள் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப் பார்கள். "அந்தக் குளம் எதென்று சொல்லுங்கோ பார்ப்பம்?" என்று கிழவன் கேட்கும் போது, "தெரியும் தெரியும்... குளத்தடிப்பிள்ளையாருக்குப் பக்கத்திலை இருக்கிற குளம் தான்" என்று எல்லோரும் ஒரே குரலில் கத்துவார்கள். முத்துக்கிழவனும் அவர்களுடன் சேர்ந்து குதூகலித்து, மீதிக்கதையையும் தொடருவான்.

"இந்தக் குளம் வெட்டப்பட்டபிறகு, இந்த இடத்தி லையும் சனங்கள் குடியிருக்க வந்தினம். இந்த நிலத்துக்கு அந்தக் குளத்திலையிருந்து தண்ணி பாய்ச்சிப் பயிர் செய்து சந்தோசமா வாழ்ந்தினம். இது ஒரு எல்லைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமமாய் இருந்ததாலை பையப் பைய பக்கத்துப் பிரதேசத்தைச் சேர்ந்த சனங்கள் சிலபேரும் இங்கை வந்து குடியேறிப் பயிர் செய்து ஒற்றுமையா வாழ்ந்து வந்தினம்.... இதெல்லாம் இப்பிடி இருந்துவரேக்கை நான் உங்களைப்போலை சின்னப்பிள்ளையாய் இருந்த ஒருநாள்....."

முத்துக்கிழவன் சற்று நேரம் முன்னாலுள்ள வெளியை வெறித்து நோக்கிவிட்டு மீண்டும் தொடர்வான்.

"இந்தக் குளத்திலை தண்ணி நிரம்பி வழிஞ்சுது. எந்த நேரத்திலையும் அணைக்கட்டு உடைப்பெடுத்துப் போடுமோ என்று சனங்கள் எல்லாம் பயந்தினம்... எங்கடை கிராமத்தையும் மீதியாயுள்ள காட்டுப்பகுதியையும் ஒரே நீளத்துக்கு குளத்திலையிருந்து பிரிச்சு அணைக்கட்டு இருந்தது. கிராமத்தையும் காட்டையும் பிரிக்கிற எல்லையிலை அணைக்கட்டுக்கு ஓரமாய் இருந்த ஒரு அரச மரத்துக்குக் கீழை ஒரு கல்லுப்பிள்ளையாரும் இருந்தார். பிள்ளையாருக்கு வடக்குப் பக்கமாய் இருந்த அணைக் கடடின்ரை ஒரு பகுதியிலை நிலம் வெடிச்சு நீர் கசிஞ்சுது. அந்த இடத்திலை அணை உடைப்பெடுத்து தெண்டால் குளத்து வெள்ளம் முழுக்க எங்கடை கிராமத்துக்குள்ளை வந்து எங்கடை வீடுகளையும் பயிர்களையும் அழிச்சு சனங்களையும் அள்ளிக்கொண்டு போயிடும். ஒருவருக்கும் முதல்லை என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை...."

முத்துக் கிழவன் கதை சொல்வதைச் சற்று நிறுத்திச் சுற்றுமுற்றும் பார்ப்பான். பிள்ளைகள் மலங்க விழித்தப்படி உறைந்துபோயிருப்பார்கள். விட்ட இடத்திலிருந்து முத்துக்கிழவன் தொடருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சனங்கள் எல்லாம் குஞ்சு குருமானுகளையும் இழுத்துக் கொண்டு ஓடி வந்து அரசமரத்தடியிலை குவிஞ்சிட்டினம். அரச மரத்துக்குத் தெற்காலை, காட்டெல்லைப் பக்கமா அணையை வெட்டிவிட்டால் வெள்ளம் எல்லாம் காட்டுக்குள்ளை போயிடும் என்று சில ஆம்பிளையள் சொல்லிச்சினம்... அந்த இடத்திலை அணை மிகப் பெரிசாய் இருந்ததாலை அதைச் சிலர் மறுத்தினம். காட்டுப்பக்கமா இன்னுஞ் சற்றுத் தள்ளியிருந்த இடத்திலை அணைக்கட்டுக் கொஞ்சம் அகலம் குறைஞ்சிருந்ததாலை மண்வெட்டியளும் கடப்பாரையளும் கொண்டு அந்த இடத்திலை வெட்ட ஆரம்பிச்சினம்... ஒரு நாள் முழுக்க வெட்டியும் அணைக்கட்டின்ரை அகலத்திலை நூறிலொரு பாகத்தையும் வெட்டி முடிக்கேல்லை.... அணை சிறிசாக உடைப்பெடுத்துக் கொண்டிருந்த இடத்திலை நீர்க்கசிவு மெல்ல மெல்லக் கூடிக்கொண்டு வர ஆரம்பிச்சுது. சனங்கள் எல்லாம் பிரளயம் தான் வரப்போகுதோ என்று பயந்திட்டினம்."

"பிரளயம் என்றால் என்ன தாத்தா?" என்று கேட்டுச் சில குழந்தைகள் இடைமறிக்கும் போது, குழந்தைகளுக்கு விளங்குகிற முறையில் முத்துக்கிழவன் ஒரு சொல் ஆராய்ச்சியே நிகழ்த்திக் காட்டுவான். "உலகத்திலை கொடுமையள் எல்லாம் நிறையிறபோது இயற்கையே சீற்றம் கொண்டு உலகத்தை அழிக்கிறதுக்கு பெரிய வெள்ளமாத்திரண்டு வரும். இதைத் தான் பிரளயம் என்று சொல்லுறது" என்று சொல்லி முடிக்கும் போது, "விளங்குது தாத்தா, கதையைச் சொல்லுங்கோ" என்று ஆர்வ மேலீட்டால் குழந்தைகள் கேட்பர். கதை தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆம்பிளையளுக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. தங்கடை முயற்சியிலை ஒரு பிரயோசனமும் இல்லை எண்டு கதைக்கத் தொடங்கிச்சினம். பொம்பிளையளுக்கு கொஞ்ச நஞ்சமிருந்த நம்பிக்கையும் போயிட்டுது. தங்களுக்கினி தெய்வந்தான் துணை என்று சொல்லிப் பெருங்குரல் எடுத்து அழத்தொடங்கீட்டினம்... அப்பதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது...."

குழந்தைகள் எல்லோரும் வைத்த கண்வாங்காமல் முத்துக்கிழவனையே பார்த்துக்கொண்டிருப்பர். எல்லோருடைய நெஞ்சங்களிலும், அப்படி என்ன அற்புதம் நிகழ்ந்திருக்கும், என்று அறியும் ஆவல் நிறைந்திருக்கும். ஆனாலும், முத்துக்கிழவனின் கண்களில் சுரக்கும் நீர்க்கசிவைக் கண்டபின் எதனையுமே கேளாமல் தாத்தா சொல்லும் வரை பொறுத்திருப்பர். முத்துக்கிழவன் அந்த அற்புதக் காட்சியை மானசீகமாக நினைவில் மீட்டி மெய்சிலிர்த்து, சிறிதுநேர மௌனத்தின் பின் அதே உணர்ச்சிப் பிரவாகத்துடன் சொல்வான்.

"எந்த இடத்திலை அணை அகலமாய் இருந்துதெண்டு முன்னை நினைச்சினமோ அந்த இடத்திலை, அரசமரத்தடிக்குப் பக்கத்திலை, இருந்த அணைப்பகுதி திடீரென்று உடைப்பெடுத்துக் கொண்டு வெள்ளம் முழுவதும் காட்டுக்குள்ளை பாய ஆரம்பிச்சுது... எல்லாரும் விறைச்சுப்போயிட்டினம். பிள்ளையாற்றை கருணைதான் இதென்று எல்லாரும் நம்பிச்சினம். காலகதியிலை எல்லாருஞ் சேர்ந்து அரசமரத்தடியிலை பிள்ளையாருக்கு ஒரு கோயிலும் கட்டிச்சினம்... அந்த கோயிலைத்தான் நாங்கள் இப்ப குளத்தடிப் பிள்ளையாரென்று சொல்லுறது...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்துக்கிழவனுக்கு மண்டையில் வலித்தது. நினைவுச்சுமையின் அழுத்தத்தில், நெஞ்சை என்னவோ செய்தது. கதை கேட்கக் குழந்தைகளும் இல்லாமல் தன் வாயும் வயிறும் இப்படி ஓய்ந்து போயிருக்கிறதே என்று நினைத்து தன்னுள்ளேயே மறுகினான்.

குழந்தைகள் எல்லாம் அந்த மண்ணைவிட்டு பிரிய மனமில்லாமல், அலங்க மலங்க விழித்தபடி தாத்தாவையே பார்த்துப் பார்த்துப் பிரிந்து சென்ற காட்சி கண்முன் தோன்றி அவனுக்கு மயக்கத்தைத் தந்தது.

"தாத்தா, தாத்தா... நீங்களும் எங்களோடை வந்திடுங்கோ தாத்தா" என்று பேரக்குழந்தைகள் எல்லாம் கெஞ்சிநின்றமையைக்கூட தன்னால் எப்படி உதாசீனம் செய்ய முடிந்தது என்று நினைத்துப் பார்க்கின்ற போது அவனுக்கே அது மலைப்பாகவும் இருக்கிறது. தனது முடிவு பைத்தியக்காரத்தனமானதோ எனவும் அவன் எண்ணத்தலைப்பட்டான். "ஏன் இந்த நிலைமை?" என்று எண்ணிப்பார்க்கின்ற போது ஐம்பது வருட காலச்சக்கரம் அவன் மனதுள் சுழன்றது.

தனது நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கேள்விப்பட்டமை..... நாட்டின் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான வாக்குரிமை கிடைத்தமை... அரசியலில் இனப்பூசல் வளர்ந்தமை... ஒன்றாக வாழ்ந்த அக்கிராமங்களிடையே நச்சு விதைகளை விதைத்து இனரீதியாக அக்கிராமம் இரு பிரதேசங்களாகத் துண்டாடப்படுவதற்கு சிலர் வழி வகுத்தமை.. தனது இனத்தின் சொந்த மண்ணைக்கூடச் சிறிது சிறிதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளர்கள் ஆக்கிரமிக்க முற்பட்டமை.... ஆட்சி யாளர்களின் போக்குகளை உணர்ந்தும் உணராதவர் போல், தன் இனத்து அரசியல்வாதிகள் காலத்துக்குக் காலம் பிணக்குகளை மறந்து ஆட்சியாளர்களுடன் சமரசமாகிப் போனமை... காணாமற் போன இளைஞர் யாவரும் ஆட்சியாளருக்கு அச்சுறுத்தலாக அமைந்தமை..... தேடுதல் என்ற பேரில் அக்கிராமத்தில் அக்கிரமங்கள் விளைவித்தமை ... ஈற்றில், அக்கிராமத்தில் இனியும் இருக்க முடியாதெனத் தீர்மானித்தவர்களாய் கிராம மக்கள் அனைவருமே மூட்டைமுடிச்சுகளுடன் அகதிகளாக வெவ்வேறு பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து போனமை...

முத்துக் கிழவனுக்கு அரசியல் ஞானம் அவ்வளவாக இல்லைத்தான். ஆனாலும் அவனுக்கு அனுபவம் கற்றுத்தந்த பாடம் ஏராளம்.

"நீ தனியா இங்கையிருந்து என்ன செய்யப் போறாயனை... அவங்கள் வந்தாங்களெண்டால் அடிச்சுக் கொன்று போடுவாங்களெல்லே" என்று முத்துக்கிழவனின் இரத்த உறவுகள் எல்லாம் வற்புறுத்திய போதிலும் கூட, தன்னுடைய முடிவில் அவன் உறுதியாகவே இருந்தான்.

இப்போது நினைத்துப் பார்க்கும்போது கூட அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி தமது சொந்த மண்ணைத் துறந்து அகதிகளாக வெளியேறிய தன் இனத்து மக்கள் மீது அவனுக்கு வெறுப்பாகவும் வந்தது. இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கின்ற தன் உயிரைக்கூட தன் மண்ணிலேயே விட்டுவிட வேண்டும் என்ற ஓர்மம் முத்துக்கிழவனுள் சுடராகிக் கனன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த நிலைமை எங்கே போய் முடியும்."

எவ்வளவு நேரம் உறங்கியிருப்பானோ தெரியாது. வாகனங்களின் இரைச்சல் ஒலியில் முத்துக்கிழவன் நிலைக்குலைந்து எழுந்தான். கனரகவாகனங்களிலிருந்தும், பஸ்வண்டிகளிலிருந்தும் ஆயுதபாணிகளாய் வந்து இறங்குகின்ற குண்டர்களையும் காடையர்களையும் தட்டி இடுக்கினூடாகக் கண்டு, அலமந்து போனான். "அடுத்து என்ன நிகழுமோ?" என்ற தவிப்பு அவனை ஆட்டிப் படைத்தது.

அந்தக் குண்டர்களும், காடையர்களும் அக்கிராமத்து வீடுகளையெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டு ஆர்ப்பரித்தவாறே தெருக்களில் "உலா" வந்த காட்சி அவனைக் பயம் கொள்ள வைத்தது. முத்துக் கிழவனின் உறைவிடம் அக்கிராமத்தின் ஒரு தொங்கலில் அமைந்திருந்ததில், அவனின் குடிலைப்பற்றி அவர்கள் அவ்வளவு அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை.

முத்துக்கிழவனுக்குத் தன் குடிலுக்குள்ளேயே முடங்கிக் கிடப்பது சிறைவாசம் போல இருந்தது. நேரம் ஆக, ஆக கிழவனான தன்னை அப்படி என்ன செய்து விடப்போகிறார்கள் என்று நினைத்தவனாய் காட்டுப் பக்கமாக காலைக்கடனைக் கழிக்கச் சென்று வந்தான்.

அவன் திரும்பி வரும் போது தான் அவனை அவர்கள் கண்டிருக்க வேண்டும். அவனை நோக்கி ஒரு கூட்டம் இரைந்து கொண்டே வந்தது. முத்துக்கிழவன் தன் குடிலை நெருங்கமுன், "மே இன்னவா ஹொறா" என்று சொல்லிக் கொண்டு ஒருவன் தன் முஷ்டியால் முத்துக்கிழவனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் ஒரு குத்துவிட்டான். அதனைத் தொடர்ந்து, சூழ நின்றவர்கள் எல்லோரும் தடிகளாலும் பொல்லுகளாலும் முத்துகிழவனைப் பதம் பார்க்கத் தொடங்கினர். முத்துக்கிழவன் மெல்ல மெல்ல மயங்கிச் சாய்ந்தான்.

முத்துக்கிழவனுக்கு நினைவு திரும்பியபோது தன் உடலை ஒரு முறை அசைக்க முயன்றான். உடலைச் சங்கிலிகொண்டு பிணைத்திருப்பது போல உணர்ந்தான். மண்டை "விண் விண்" என்று வலித்தது. கண்களைத் திறக்கவே முடியவில்லை.

தனக்கு என்ன நடந்தது என்று நினைத்துப் பார்க்க முயன்றான். தடியும் பொல்லும் கொண்டு அந்தக் காடையர்கள் தன்னைத் தாக்கியமை மெல்ல மெல்ல அவன் நினைவுக்கு வந்ததது. உடனேயே மயக்கம் வருவது போலவும் இருந்தது.

தன் உடலெல்லாம் குளிர்வதை உணர்ந்தவன், பகீரதப் பிரயத்தனத்துடன் கண்ணை விழித்துப் பார்த்தான். மாலையாகி இருந்தது. பெருமழை பெய்து ஓய்ந்திருக்க வேண்டும். நிலம் எல்லாம் ஒரே சேறும், சகதியுமாக இருந்தது. வெள்ள அலை இரைந்து கொண்டே வந்து அணைக்கட்டை மோதும் ஒலி அவன் காதுகளைக் குடைந்தது. சுற்று முற்றும் பார்த்தபோதுதான், அணைக்கட்டின் மேல் படுத்திருப்பது தெரிய வந்தது. அவர்கள் தன்னை அடித்து முறித்துவிட்டு அங்கே கொண்டு வந்து போட்டிருக்க வேண்டும் என்று உணர்ந்தான்.

இவ்வளவு நேரமாக இந்தச் சகதியில்தானா கிடந்தேன் என்று தன்னையே கேட்டுக் கொண்டவன், "பிள்ளையாரே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அரற்றிக் கொண்டு எழுற்று நிற்க முயன்றான். கால்மூட்டுக்களில் வலித்தது. காலைத் தூக்கி வைப்பது சிரமமாக இருந்தது. பிள்ளையாரைக் கையெடுத்துக் கும்பிட் விரும்பியவனாய் சிரசின் மேல் இரு கைகளைக் குவித்து, தெற்குப்புறமாக நோக்கினான்.

உடனடியாகவே, "ஐயோ" என்ற அலறல் அவனின் அடிவயிற்றிலிருந்து கிளம்பி அந்தச் சூனிய வெளியில் எதிரொலித்தது. முத்துக்கிழவனால் அவன் கண்களையே நம்ப முடியவில்லை. குளத்தடிப்பிள்ளையார் கோயிலின் தூபி முழுவதும் இருந்த இடமே தெரியாத அளவுக்கு கட்டிடங்கள் உடைக்கப்பட்டு, பாழடைந்த கட்டிடமாகக் கோயில் காட்சி தந்தது.

முத்துகிழவன் வெவெலத்துக் போனான். தன் இரத்த உறவுகள் பிரிந்துபோன வேளையிலுங்கூட அவன் இவ்வளவு தூரம் கதிகலங்கவேயில்லை.

பிள்ளையார் சிலையையும் உடைத்திருப்பார்களோ என்ற ஐயம் அவனுள் எழுந்தது. அதனையாவது காப்பாற்றி எடுத்துச் செல்ல வேண்டும் என்ற வேகம் அவனுள் பிறந்தது.

இருள் கவியத் தொடங்கியது. நன்றாக இருட்டுவதற்கு முன் பிள்ளையார் சிலையைத் தேடி எடுத்து விட வேண்டும் என்று விரும்பியவனாய், கால்களை எட்ட வைத்து நடக்க முயன்றான். தலையைச் சுழற்றிக் கொண்டு வந்தது. "பிள்ளையாரே" என்ற முனகலோடு தன் உடலைச் சமநிலைப்படுத்தி முன்னேறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழெட்டு அடிகள் தான் எடுத்து வைத்திருப்பான். கால் இடறி நிலைகுலைந்து வீழந்தான். காலில் ஏதோ நச நசத்தது. கையால் தடவிப்பார்த்துக் கொண்டான். இரத்தம் கையோடு ஒட்டிக்கொண்டு பிசுபிசுத்தது. கூரான ஏதோ ஒன்று காலைக்கிழித்திருக்க வேண்டும். தன் வேட்டியின் ஓர் ஓரத்தைக் கிழித்துக் காலில் கட்டுப் போட்டுக் கொண்டான். காலில் வலிக்கத் தொடங்கியது. சற்று ஆற வேண்டும் போல இருந்தது.

இந்த ஆசுவாசமெல்லாம் சொற்பவேளை தான். மேலும் இருட்டிக் கொண்டு வருவதை உணர்ந்து, கிராமத்துப் பக்கமாக பார்வையை எறிந்த போது பல இடங்களிலும் வெளிச்சங்கள் மின்னுவதைக் கண்டான். கறையான் புற்றெடுத்த கதையான தன் கிராமத்தின் நிலைகண்டு அவன் நெட்டுயிர்த்தான். குளக்கட்டோரமாக அலை வந்து மோதி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

அக்கிராமத்தை விட்டுவிட்டு அகதிகளாகி வெளியேறிச் சென்ற தன் கிராமத்து மக்களின் நெடுமூச் செல்லாம், இந்நேரம் அனலாகிக் கனன்று பிரளயாக் கினியாய் மூண்டு வந்து சூழாதோ என்று அவன் அங்கலாய் த்தான்.

இந்த அங்கலாய்ப்பு அடங்குமுன், கிராமத்துப் பக்கமிருந்து சில ஒளிக்கீற்றுக்கள் அணைக்கட்டுப்பக்கமாய் தன்னை நோக்கி நகர்ந்து வருவதைக் கண்டு, அப்போதைய சூழலின் ஆபத்தை உணர்ந்தான்.

மேற்கொண்டு எதனையும் சிந்திக் விரும்பாதவனாக அவன் விரைந்து எழுந்தான். குளத்தடிப் பிள்ளையாரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி ஓடத்தொடங்கினான். கெந்திக் கெந்தி ஓடுகையில் அவன் உடல் தள்ளாடியது.

குளத்தடிப்பிள்ளையார் கோயிலை நெருங்கியிருப்பான். அசதியும் பசியும் உடல் நோவும் சேர்ந்து, அவனின் தலை சுற்றியது. கீழே வீழ்ந்து விட முன் ஓட்டத்தை நிறுத்தி மெதுவாகத் தரையில் அமர்ந்து கொள்ள எண்ணி, கைகளைத் தரையில் ஊன்றிய போது, கல்லுப்போல் எதுவோ கைகளில் தட்டுப்பட்டது.

தட்டுப்பட்டபொருளைத் தன் இருகைகளாலும் தடவிப்பார்த்தான். அதன் பரிமாணங்களைக் கணக்கிட்ட போது அவனுக்குச் சர்வாங்கமும் நடுங்கியது. தலை உலாஞ்சியது. தன் இரு கைகளாலும் அதனை இழுத் தெடுத்துத் தன் நெஞ்சோடு இறுக அணைத்தவனாக முத்துக்கிழவன் நிலத்தில் சரிந்தான்.

(1994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்மை

"மியாவ்"

கனவு கண்டு நான் விழித்திருக்க வேண்டும்.

கேட்ட குரல் பெட்டையுடையதா கடுவனுடையதா என்ற ஆராய்ச்சில் மனம் இறங்குகிறது.

"கடுவனின் குரலாகத்தான் இருக்கவேண்டும் பெட்டை தான் இறந்து போயிற்றே"

அறிவு வெளிப்பட்டுத் தன் இருப்பை வெளிப் படுத்தியது.

"இல்லை இறந்து போன பெட்டைத்தான் கனவிலும் தோன்றிப் பயம் காட்டுகிறது போலும்".

அந்தராத்மா விழித்துக் கொள்கிறது.

சரிதான்! இனி அறிவுக்கும் அந்தராத்மாவுக்கும் இடையேயான பட்டிமன்றத்தில் வெற்றி எப்பாகத்திலாயினும் இழப்பு எனக்குத்தான்.

நித்திரையாவது, இனிக் கொள்வதாவது.

என்ன கனவு கண்டேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூனைக்கனவா?

எப்போதுமே இப்படித்தான்.

கனவு கண்டு கொண்டிருக்கும் வேளையில் அருமையான கதை ஒன்றுக்குக் கரு கிடைத்தது போலிருக்கும், கண்விழித்துப் பார்த்தால் எதுவுமே நினைவுக்கு வராது.

ஒரு முறை எழும்பி முற்றத்தில் சற்று நேரம் நடந்து வந்தால் என்ன.

இவள் விழித்துக் கொள்வாளோ?

என்ன பெண் இவள்? எப்படி இவளால் நிம்மதியாக நித்திரை கொள்ள முடிகிறது? இவளின் விருப்பம்போல அமைந்து விட்டதனால் தான் இப்படியாக நித்திரைகொள்ள முடிகிறதோ, என்னவோ?

அப்படியானால் இவளின் நிம்மதிக்கு இனிப் பங்கமில்லைத் தான். ஆனால் என் நிம்மதி?

பெண் இவள் குத்துக்கல் கணக்காய் எதற்கும் அசைந்து கொடுக்காமல் இருக்கும்போது, ஆண் நான் மட்டும் ஏன் மனம் அலைக்கழிந்து என் நிம்மதியைக் கெடுத்துக் கொள்ள வேண்டும்?

இவளைப் பார்க்கப்பார்க்க எனக்குப் பொறாமையாகக் கூட இருக்கிறது.

ஒருக்களித்துப் படுத்திருக்கும் இவளை எழுப்பி, "எப்படி உன்னால் இப்படி நித்திரை கொள்ளமுடிகிறது." என்று கேட்க வேண்டும் போல் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுக் குஞ்சியும் நிம்மதியாகத்தான் நித்திரை கொள்வானோ?

அவனுக்கென்ன குறை, படுபாதகப்பயல்.

இவளையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு பொன்னுக் குஞ்சி செய்த செய்கையை நினைக்கும் போது இப்போதும் ஆத்திரம் ஆத்திரமாகத்தான் வருகிறது.

இப்படி, எப்படி இவள் மாறினாள்?

இவளுக்கு வெளுத்ததெல்லாம் பால்தான்.

பொன்னுக்குஞ்சி சரியாகத்தான் இவளை அறிந்து வைத்திருக்கின்றான்.

இல்லாவிட்டால் எப்படி இவளிடம் இவ்வளவு தூரம் வக்கிரத்தை வளர்த்திருப்பான்?

"பூனை வீட்டிலை அழுறது நல்லதுக்கில்லை."

இப்படிச் சொல்லித்தான் பொன்னுக்குஞ்சி இவளைத் தன் திட்டத்தின் பக்கம் இழுக்க முயற்சி செய்தான்.

பொன்னுக்குஞ்சி ஒன்று சொல்லி விட்டால் போதும் இவளுக்கு அது வேதமந்திரம்.

இது குறித்து எத்தனையோ தடவைகளில் இவளுடன் முரண்டு பிடித்துக் கொண்டமை ஞாபகத்துக்கு வருகிறது.

நான் ஒன்றைச் சொல்லிக் கேட்காதவள், அதையே பொன்னுக்குஞ்சி சொல்லும்போது ஏற்றுக் கொள்வதென்றால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காதாம், மனி கட்டின மாடு சொன்னாத்தான் கேட்குமாம், அப்படித் தானே?"

பொன்னுக்குஞ்சி மீதான என் கோபத்தை வெளிப் படுத்தி உரக்கக்கத்தினாலுங்கூட என் கோபத்தையும் உள்ளக் குமைச்சலையும் இவள் பொருட்படுத்தினால் தானே.

"உங்களுக்கென்னப்பா பொன்னுக்குஞ்சியோடை போட்டி? இந்த ஊருக்கே மணிகட்டின மாடு பொன்னுக்குஞ்சி தானே"

பொன்னுக்குஞ்சிக்குச் சார்பாக ஒரு வாதம்; கூடவே ஒரு வெகுளித்தனமான சிரிப்பு?

என் கோபம் காற்றாய்ப் பறக்கும்.

பொன்னுக் குஞ்சி இந்த ஊருக்கே ஒரு மணிகட்டி யமாடு.

உண்மைதான். இந்த ஊரைப் பொறுத்தவரை பொன்னுக்குஞ்சியின் வார்த்தைகள்தான் எடுபடும்.

அவனுக்கு மட்டும் ஏன் இந்தச் செல்வாக்கு?

பொன்னுக் குஞ்சிக்கு இந்த உலக விவகாரங்கள் எல்லாமே அத்துப்படி. ஊராரின் கணிப்பு இது.

ஆனால் பொன்னுக் குஞ்சியைப் பற்றி என்னைக் கேட்க வேண்டுமே.

"வெறும் நடிப்புச்சுதேசி."

எல்லாமே வெறும் "வாய்ச்சவடால்தான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்புக்காத்துக்குப் படித்திருந்தால் கொடிகட்டிப் பறந்திருப்பான்."

வெறும் வாயையே மெல்பவனுக்குச் சிறிது அவல் கிடைத்தால் கேட்வா வேண்டும்?

உள்ளூர்ச் செய்திமுதல் உலக விவகாரம் வரை ஒன்றுக்குப் பத்தாக்கி ஒன்றை விளம்பரம் செய்வதில் பொன்னுக்குஞ்சி வெகு சமர்த்தன்.

இந்த ஊரையே கைக்குள் போடத்தெரிந்த பொன்னுக்குஞ்சிக்கு இவள் எம் மாத்திரம்?

அவனின் வாய் ஜாலத்திற்கு இவள் அடிபணியத்தானே வேண்டும்.

கல்யாணமான புதிதிலேயே தடுத்திருக்க வேண்டும்.

பொன்னுக்குஞ்சியை நன்கு அறிந்திருந்தும் வயதுக்கு மதிப்புக்கொடுக்க வேண்டுமே என்று அங்கீகரித்ததால் வந்த வினை.

உறவையெல்லாம் உதறி எறிந்து விட்டு என் பின்னே ஓடி வந்தவளுக்கு, புதிய சூழலில் பக்கத்து வீட்டிலாவது ஒரு பேச்சுத்துணை கிடைக்கட்டுமே என்று எண்ணியதால் வந்த கேடு.

பொன்னுக்குஞ்சி இவளை நன்றாகத்தான் வசப்படுத்திக் கொண்டான்.

"நான் தும்மிப்போட்டு படலையைத் திறக்கேக்கை தான் பார்த்தன், தம்பி வெளிகிட்டுப் போகுது. போற காரியஞ் சரிவராதெண்டு எனக்கு அப்பவே தெரியும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் போன காரியம் சரிவரவில்லை என்பதை இவளிடமே கேட்டுத் தெரிந்து கொண்டு, அதற்கான காரண – காரியத் தொடர்பை பொன்னுக்குஞ்சி கண்டு பிடித்துச் சொல்வதில் இவளுக்கு அசாத்திய நம்பிக்கை.

"திருவிழாச் சமயத்தில் வெளியே புறப்பட்டு விளையாடச் செல்வது ஞாயமா?"

என்ன உளறுகிறாள் இவள்?

ஒரே வரியையே திரும்பத் திரும்பச் சொல்லி நெட்டுருப் பண்ணல், கைவிரல்களை மடித்து மடித்து கணக்குப் பார்த்தல்.....

அவசரமான காரியம் என்று புறப்பட்டாலும் கூட சிறிது தாமதிக்கச் செய்தல்.....

"இவளின் செய்கைகள் எல்லாமே எனக்குப் புரியாத புதிராகத் தோன்ற, இவளுக்கு என்ன நேர்ந்து விட்டது" என்று மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்கையில்.....

"பொன்னுக்குஞ்சி சொல்லித்தந்த இராகு காலம் கணிக்கிற சூத்திரமப்பா இது".

இவளை, அறைய வேண்டும் போல் இருக்கும்.

"ஊரே ஒத்துக்கொள்ளுது உங்களுக்கு மட்டும் ஏனப்பா பொன்னுக்குஞ்சியைப் பிடிக்குதில்லை."

இவள் அடிக்கடி என்னைக் கேட்கும் கேள்வி இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளுக்கு எதையென்று சொல்வது.

இந்த மண்ணின் சூழ்நிலைக்கு ஒவ்வாத வதந்தி பரப்பும் பேய்.

வாழ்வியலுக்குப் பொருந்தாத மூடநம்பிக்கைகளின் உறைவிடம்.

சுயநலத்திற்காக எதையும் செய்யத்தயங்காத ஜீவ காருண்யமற்ற மிருகம்.

ஒன்றுக்குப்பின் முரணாகப் பேசும் "தகிடுதத்தி".

எதைச் சொன்னால் இவள் ஒப்புக் கொள்வாள்?

ஒப்புக்கொள்வாளானால் நேற்றைய ஜீவ காருண்யமற்ற செயலுக்கு இவளே கருவியாகி இருப்பாளா?

இப்போது பூனைக்குட்டிகள் எல்லாம் என்ன செய்யும்?

இறந்திருக்குமோ?

இவளுக்கு ஏன் இப்படிப் புத்தி பேதலித்துப் போயிற்று?

பொன்னுக்குஞ்சியின் திட்டமிட்டசதி இவளுக்கு எப்படி விளங்கும்?

எழுபது வயதில் சீரான நித்திரை வரவில்லை என்றால் பூனையின் முனகல் தானா காரணமாக வேண்டும்?

இவளின் சிறுபிள்ளைத் தனம் பொன்னுக்குஞ்சிக்குச் சாதகமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பூனை அழுறது வீட்டுக்கு நல்லதுக்கில்லை. அதாலை பூனை, கீனை வீட்டிலை வளர்க்கக் கூடாது, கலைச்சுப்போடவேணும்."

பொன்னுக்குஞ்சி வில், இவள் அம்பு.

இவளின் மீத உணவும் கிடைக்காமற்போனால் பூனைகள் என்ன செய்யும்?

வளவு முழுவதும் வளைய வளைய வந்தவற்றைக் காணாமல் எனக்கே ஒரு மாதிரி.

பொன்னுக்குஞ்சி நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

பொன்னுக்குஞ்சியின் நிம்மதியைக்கண்டு என் நெஞ்சுக்கே பொறுக்கவில்லை.

இவனின் நிம்மதியில் இடி விழ!

நெஞ்சம் சபித்தது.

இடிதான் வீழ்ந்தது! பேரிடி!!

மூன்று நாட்களின் முன் இரவில் கேட்ட "மியாவ் மியாவ்" ஒலிக்கு தூக்கம் கலைந்து முதலில் எழுந்தவன் பொன்னுக்குஞ்சிதான்.

"பிள்ளை, பிள்ளை" என்று மதிலோரம் நின்று இவளை எழுப்பினான்.

"பிள்ளை! பூனை, குட்டியும் போட்டிருக்கு போலையிருக்கு, ஒருக்கால் பாரம்மா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுக்குஞ்சியின் கலக்கத்தில், என் தூக்கம் முற்றாகக் கலைந்தது.

எமகாதகப் பயல்!

பூனை குட்டித்தாச்சியானமையை அறிந்துதான் கலைக்கத்திட்டம் போட்டிருக்கிறான்.

"ஆறு குட்டியள் போட்டிருக்கு, குஞ்சி."

இவளின் குரல் பொன்னுக்குஞ்சிக்கு நாராசமாக ஒலித்திருக்க வேண்டும். ஆறு குட்டிகளும் வளர்ந்து கொட்டமடிக்கப் போவதை எண்ணிப்பார்த்திருக்க வேண்டும்.

"பிள்ளை எப்பாடுபட்டெண்டாலும் பூனையையும் குட்டியளையும் நாளைக்குச் சந்தையடியிலை கொண்டு போய் விட்டிட்டு வந்திடு.. குட்டியள் வளர்ந்துதெண்டால் பிறகு கலைக்கேலாது"

"குட்டியளைப் பிடிக்கலாம். தாய்ப்பூனையை எப்பிடிப் பிடிக்கிறது குஞ்சி?"

அதற்கும் பொன்னுக்குஞ்சியே வழி சொன்னான்.

"தடம் ஒண்டு ஈர்க்கிலை நான் போட்டுத்தாறன் பிள்ளை. குட்டியளைத் தேடித் தாய் வாற பாதையிலை உள்ள வளையிலை அதைக் கட்டிவிடு. சுலபமாப் பிடிச்சுப் போடலாம்."

இவளுக்கு எங்கே அத்தடத்தின் தாற்பரியம் விளங்கப்போகின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவு தடத்திற் கழுத்துச் சிக்கி தாய்ப்பூனை இறந்த போதாவது இவளின் உள்ளுணர்வு விழித்துக்கொண்டதே என்று எனக்கு நிம்மதி.

குட்டிகளைத் தடவி எடுத்து, "நெஸ்பிறே"யும் கரைத்து "போச்சி"யில் விட்டு ஊட்டிய அழகைக் கண்டபோது என் நெஞ்சில் சுளீரென்றது.

பொன்னுக்குஞ்சிக்கு நடந்ததொன்றும் தெரியாது. எங்கே போய்த் தொலைந்தான். மாலையில் வீடு திரும்பிய பொன்னுக்குஞ்சிக்கு இவள் பூனைக்குட்டிகளுடன் கொஞ்சிக் கொண்டிருப்பதைக் கண்டு பேரதிர்ச்சி ஏற்பட்டிருக்கும்.

"நல்லதுக்குக் காலமில்லைப் பிள்ளை. உன்னுடைய நன்மைக்காகத்தான் பூனையையும் குட்டியளையும் சந்தையடியிலைவிடச் சொன்னனான்."

"தடத்திலை மாட்டுப்பட்டுத் தாய்ப்பூனை செத்துப்போச்சுக் குஞ்சி. குட்டியளைப் பார்க்கப் பாவமாயிருக்கு"

இவளுக்கு கண்ணில் நீர் துளிர்த்தது.

அதற்கும் பொன்னுக் குஞ்சியே சமாதானம் சொன்னான்.

"எங்கடை சனங்களின்ரை உயிருக்கே இண்டைக்கு உத்தரவாதமில்லைப் பிள்ளை, பூனை செத்ததுக்கெல்லாம் கவலைப்படேலுமே. நீ குட்டியளோடை கொஞ்சிறாய், பூனை மயிர் சாப்பாட்டுக்கை விழுந்தால் ஈழை வியாதி வந்திடும் பிள்ளை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளின் மௌனத்தை அவன் தனக்குச் சாதக மாக்கினான்.

"நீ என்ன யோசிக்கிறாய் என்று எனக்குத் தெரியுது பிள்ளை... பெண் சுபாவம் எனக்குத் தெரியாதே. நீ ஒன்டுக்கும் கவலைப்படாதை... படைச்சவன் குட்டியளைப் பார்த்துக்கொள்வான்தானே. காலையிலையே குட்டியளைக் கொண்டு போய் விட்டிட்டு வந்துடு பிள்ளை."

பொன்னுக்குஞ்சி கரைத்தால் கல் என்ன; இரும்பே கரையும்.

இன்று காலையில் பொன்னுக்குஞ்சியே குட்டிகள் ஆறையும் பிடித்துப் பையில் போட்டுக் கொடுத்து இவளை அனுப்பி வைத்தான்.

பொன்னுக் குஞ்சியின் முன்னால் இவள் பெட்டிப் பாம்பு தானே.

பாவம்! இந்நேரம் குட்டிகள் இறந்திருக்கும்.

ஆண் எனக்கிருக்கின்ற காருண்யத்தில் ஒரு சிறிதேனும் இவளிடம் இருக்க வேண்டுமே!

இவளால் எப்படி அமைதியாக உறங்கமுடிகிறது?

"மீயாவ், மீயாவ், மீயாவ்"

குட்டிகளின் மெல்லிய அனுங்கல் ஒலி.

மனப்பிரமையோ? இல்லை குட்டிகளின் மெல்லிய அனுங்கல் ஒலி மீண்டும் மீண்டும் துல்லியமாகக் கேட்கிறதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானால் இது எப்படி, இது எப்படி?

இவளை எழுப்பிக் கேட்க வேண்டும்.

நினைப்பைச் செயற்படுத்த விழைகையில் இவள் அசைந்ததற்கான அசூயை. மெல்ல எழுந்தவள் என்னையே பார்க்கிறாள்.

கைகளாற் கண்களை மறைத்து இவளையே நோட்டமிட்ட கண்களை நேருக்கு நேர் சந்திக்க இவளுக்கு வாய்ப்பில்லைத் தான்.

இவள் பூனை ஆனாள்.

இவள் ஏன் பதுங்கிப் பதுங்கிச் செல்ல வேண்டும்?

எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இவள் அறியாமலே இவளைப் பின்தொடர்ந்து சென்று இவளின் செய்கையை அவதானிக்க வேண்டுமென்று என் உள் மனம் விழைகிறது.

இவள் ஏற்கெனவே திறந்து வைத்த கதவு வழியூடாகச் செல்லும்போது சத்தம் எழும்ப இடமேயில்லை.

நானும் பூனை ஆகிறேன்.

என்ன இது?

இவள் என்ன செய்கிறாள்?

"என்ன செய்கிறாய் இங்கை?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாகத் கேட்கிறேன்.

ஆனாலும், புட்டிப்பால் ஊட்டிக்கொண்டிருந்த இவள் அதிர்ந்தாள்.

"சத்தம் போடாதேங்கோ அப்பா, பொன்னுக்குஞ்சி எழும்பீடும். பொன்னுக்குஞ்சியைப் பேய்க்காட்டிப்போட்டு காலையிலேயே குட்டியளைத் திருப்பிக் கொண்டந்திட்டன். ஓடியாடித் திரியிற வரையிலாவது பொன்னுக்குஞ்சிக்குத் தெரியாமல் வளர்த்து விட்டிடோணும்... பசி எண்டாத்தான் இந்த அனுக்கம். பசி தீர்ந்து தெண்டா பேசாமல் படுத்துக் கிடந்திடும். பொன்னுக்குஞ்சிக்கும் தெரியவராது.

இவள் முடிக்கவில்லை.

"டேய், பொன்னுக்குஞ்சி! நீ தோற்றாயடா!"

(1995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்க்கெடுத்துரைப்பேன்

வயிரவிக் கிழவனுக்கு கண்களுக்குள் நீர் முட்டிக் கொண்டு வந்து நின்றது. தன்னைக் கடைக்காரர் ஏசியதற்காகக்கூட அவர் வருந்தவில்லை. தன்னுடைய "பேரக் குஞ்சு"க்கு உப்புச் சோடாவென்றாலும் வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்பதை நினைக்கையிற்தான் அவருக்கு வேதனையாக இருந்தது.

மடியில் சொருகியிருந்த கொட்டைப்பெட்டியை எடுத்து அதிலிருந்த காசை எண்ணிப் பார்த்தபோது "வள்ளிசாக" இருபதைந்து ரூபா இருப்பது தெரிந்தது.

"சே, வசுவுக்குப் பதினைஞ்சு ரூபாவை வைச்சுக் கொண்டு மிச்சத்துக்குப் பழச்சோடா ஒண்டு வாங்கியிருக்கலாம். ஒரு பத்து ரூபா அடியிலை மடிஞ்சு கிடந்துட்டுது. அதுதான் முன்னமே தெரியேல்லை."

மனம் அங்கலாய்க்க அருகிலிருந்த பேரக்குஞ்சைப் பார்த்துப் பெருமூச்செறிகிறார்.

"சை, குஞ்சு சோடாவுக்கு எவ்வளவு ஆசைப்பட்டுது... எல்லாம் அந்தக் கடைக்கார நாயாலை தான். பேராசை பிடிச்ச பிசாசு... அது அவசரப்படுத்தின திலைதான் காசைக் கூடி சரியாக எண்ணிப் பாக்கேல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று முன்னர் நடந்தவற்றையே மீண்டும் மீண்டும் மனக்கண்ணில் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்து, வயிரவிக் கிழவனின் நெஞ்சம் ஏங்குகிறது.

"தம்பி, கொழும்புப் பழச்சோடா ஒண்டு தா மோனை... எவ்வளவு காசு மோனை?..."

"எது அப்பு பார்லியே, அது ஏழரை ரூபா"

கிழவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது போலிருந்தது.

"என்னது ஏழரை ரூபாவோ? ஒரு பழச்சோடாவோ?"

சென்ற கிழமை ஆஸ்பத்திரிக்கு வந்தபோது நாலே முக்கால் ரூபாவுக்குப் பழச்சோடா வாங்கியது ஞாபகத்துக்கு வரவே, கிழவன் அவசரமாகக் கேட்டார்.

"ஏன் மோனை, பழச்சோடா நாலே முக்கால் ரூபா தானே?"

"ஏனப்பு, கொழும்பிலை சோடாக் கம்பனீலை குண்டு வெடிச்சதொண்டும் உனக்குத் தெரியாதே? அதுக்குப்பிறகு இங்காலை கொழுமபுச் சோடா வாறேல்லை. அதுதான் இப்ப எல்லாரும் ஏழரைக்கு விக்கிறம், என்ன, சோடா உடைக்கிறதோ"

"பொறு மோனை, காசு கிடக்கோண்டு பாப்பம்."

கொட்டைப் பெட்டியைத் திறந்து அதனுள் இருக்கும் காசைக் கணக்குப் பார்த்தவாறே வயிரவிக் கிழவன் கேட்டார். "ஏன் மோனை, உப்புச்சோடா என்ன விலை?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பிளேன்சோடாவே? அஞ்சரை ரூபா, அப்பு உனக்கு என்ன சோடா வேணுமெண்டு கெதியாச் சொல்லு"

"ஏன் மோனை, உப்புச் சோடாவும் இஞ்சாலை வாறேல்லையே... இஞ்சாலை வராத கொழும்புச் சோடாவை என்னென்டு மோனை நீங்கள் விக்கிறியள்?"

கடைக்காரனுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "அப்பு என்ன சோதினைக்கே வந்தனி... அவற்றை நக்கல் கதையைப் பார். உந்த எழியதுகளை எல்லாம் கூப்பிடாதை எண்டு சொன்னால் நீ கேக்கிறேல்லை"

கடையில் விற்பனைக்கு நின்ற பையனை கடைக்காரன் திட்டித் தீர்த்த போது, வயிரவிக் கிழவனுக்கும் ரோஷம் கெம்பி எழும்பியது. பேரப் பையனைக் கையில் பிடித்தவாறே விரைந்து வந்து விட்டார்.

மினிவான் குலுக்கலுடன் நின்றபோது வயிரவிக் கிழவன் தன் நினைவுகளிலிருந்து மீண்டார்.

கொண்டக்டர் சத்தமிட்டான். "அப்பு, எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறாய்? கடுமையான யோசினை யாகக் கிடக்கு... காலுக்கை கிடக்கிற கூடையை நல்லாச் சீற்றுக்குக் கீழை தள்ளிவிடு. ஆக்கள் கால் வைக்கேலாமல் கிடக்கு"

"அப்பு, கோட்டையை இப்ப தான் பிடிக்கப் போட்டினம், நீயும் பிடிக்கப் போறியே?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவனுக்கு முன்னாலுள்ள சீற்றிலிருந்த இளைஞன் கேலி தொனிக்கக் கேட்டதைத் தொடர்ந்து பேரப்பையனுக்குப் பக்கத்திலிருந்த பெண் கலகலவெனச் சிரித்தாள்.

அப்போதுதான் வயிரவிக் கிழவன் அந்த இளைஞனையும், பெண்ணையும் நன்கு நோட்டமிட்டார். நல்ல வாட்டசாட்டமான இளைஞன் தான். லோங்சும், ரீ சேட்டும் கண்களில் அணிந்திருந்த கறுப்புக் கண்ணாடியுமாக மிகவும் ஆடம்பரமாக இருந்தான். அவனுக்குப் போட்டியாக அப்பெண்ணும் "ரீ சேட்" அணிந்திருந்தாள். அவளின் ரீசேட்டின் முன்புறத்தில் அச்சடித்த ஆங்கில எழுத்துக்கள். முழங்காலுக்குச் சற்று மேலே ஏறியிருந்த சட்டைக்குக் கீழாகத் தெரியும் கால்களில் செல்வந்தத்தின் மினுமினுப்பு.

மினிவானுக்குள் இருவர் ஏறினர்.

"உந்தச் சின்னப் பெடியனைத் தூக்கி மடியிலை வைச்சுக் கொண்டு தள்ளி இரு அப்பு. இன்னொராள் இருக்கலாம்."

"அது சுகமில்லாத பொடிமோனை, அப்பிடி இருக்கட்டுக்கன்".

"சுகமில்லாத பெடியானைத் தானனை மடியிலை தூக்கி வைச்சிருக்கோணும். சின்னப் பெடியன் தானே... தம்பி எழும்பு".

கொண்டக்டர் சொன்னதைக் கேட்ட உடனேயே பையன் எழுந்து, பேரனின் மடியிலிருக்கக் கூச்சப்பட்டுக் கொண்டு நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரடாப்பா, நல்லா வெக்கப்படுகிறாய்.. நீ சின்னாள் தானே" முன்னாலிருந்த இனைஞன்தான் வற்புறுத்தினான்.

"மடலை இரு குஞ்சு, நீ நிக்கமாட்டாய்... நிக்கவும் கூடாதடி" வயிரவிக் கிழவன் பேரனின் கையைப் பிடித்திழுத்துத் தனது மடியில் இருந்ததினார். மடியிலமர்ந்த "பேரக்குஞ்சின்" தலையைத் தடவிக் கோதியும் விட்டார்.

"கவனம் குஞ்சு, போட்டிடுவாய்... என்னட்டைத் தா வைச்சிருக்கிறன்."

பேரப்பையனின் கையிலிருந்த படச்சுருளைத் தான் வாங்கி வைத்துக் கொண்டார். முன்பு பையன் இருந்த இடத்தில் ஒருவரும், முன் சீற்றில் மற்றவரும் என வானுக்குள் ஏறிய இருவரும், நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்தனர். இளைஞன் அமர்ந்திருந்த சீற்றில் நாலுபேர் இருந்தனால் இளைஞன் சற்று முன்னுக்கு நகர்ந்து கொண்டான். வானின் குலுக்கலில் இளைஞனின் கால்கள் அந்தப் பெண்ணின் மினுமினுப்பான கால்களோடு உரசிக் கொண்டி ருந்தன.

அந்தப் பெண் மிகுந்த நளினத்தோடு கேட்டாள். என்னப்பா நீர் சொல்லுறீர்? 'எக்ஸாம்' போஸ்ற்போண் பண்ணுவினம் என்று. எனக்கென்றால் பயமாயிருக்கு. 'நோட்ஸ்' ஒன்றுமே இன்னும் விரிச்சுப் பார்க்கேல்லை."

"நாங்களும்தான் ஒன்றும் படிக்கேல்லை. அதாலைதான் சொல்லுறன், கட்டாயம் சோதினையைப் பின் போடுவின மென்று. நீங்க சோதினையை சீரியஸா எடுக்கப்பட்டாது. நீர் ஒன்றுக்கும் பயப்படாதையும். டீன் ஒத்துக் கொள்ளாட்டில் 'ஸ்ரைக்' செய்யிறதாத் தீர்மானிக் சிருக்கிறம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்பத்தான் உயிர் வந்துதப்பா..... நாடகமும், ஸ்ருடன்ற் கவுன்சில் எலெக்ஷனும் என்று படிக்க நேரமிருந்தால் தானே. இனித்தான் படிக்க வேணும். அப்பு உதென்ன கையிலை, "எக்ஸ்றேயா?" பார்க்கிறதுக்கு கொன்வகேஷன் சேர்ட்டிபிகற் மாதிரிக் கிடக்கு என்னப்பா?"

"அது இந்தக் குழந்தையின்ரை நெஞ்சுப் படம் பிள்ளை. குழந்தைக்குச் சுகமில்லை. அதுதான் படம் பிடிச்சுக் கொண்டு வாறம்"

"எங்கே, பார்ப்பம் அப்பு"

இளைஞன், கிழவனின் கையிலிருந்த "எக்ஸ்றே" படத்தை வாங்கி அதைச் சுருளாக்கிச் சுற்றிப் போட்டிருந்த "றப்பர்பாண்ட்" டை உருவி எடுத்துவிட்டுப் படத்தை விரித்துப் பார்த்தான். மிகவும் உன்னிப்பாக மேலும் கீழுமாகத் திருப்பித் திருப்பி பார்த்தபோது, சென்ற கிழமை கிளினிக்கில் வந்து விசாரித்துக் கொண்டி ருந்தவர்களைப் போல, அந்த இளைஞனும் டாக்குத்தருக்குப் படிக்கிற பொடியனாக இருப்பானோ என்ற சந்தேகம் வயிரவிக் கிழவனுக்கு எழுந்தது. மெதுவாகக் கேட்டார். "ஏதும் தெரியுதே மோனை?"

"ஏன் ஆளுக்கு என்ன சுகமில்லை?"

"நெஞ்சுக்குத்து மோனை"

"எவ்வளவு காலமா இருக்கு?"

இளைஞனின் கேள்விகளின் தொனியிலேயே கிழவனுக்கு அவன் 'டாக்குத்தருக்குப்' படிக்கின்ற பொடியன் தான் என்ற நம்பிக்கை பிறந்துவிட்டது. விஸ்தாரமாகவே சொல்ல ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேப்பனைத் தின்னிப் பொடி மோனை. என்னோடை வந்து ரெண்டுவரியந்தானாகுது. உந்தப் பொடீன்ரை தேப்பன் அவன்தான் என்ரை மோன் எனக்குத் தெரியாமல் கூட வேலை செய்த பெட்டையை கொழும்பில கட்டினவன். அவை எங்கடை சபை சந்திக்கில்லாத ஆக்கள் எண்ணிறதாலை நானும் கொஞ்சம் இறுக்கமா இருந்திட்டன். உந்த ஆடிக் கலவரத்திலை என்ரை பொடியனை வெட்டிப் போட்டாங்கள். அண்டைக்குத் தொடங்கித்தான் இந்த நெஞ்சுக் குத்தெண்டு மருமேள்ப்பெட்டை சொல்லுறா"

விம்மத் தொடங்கிய கிழவனை இடைமறித்து அப்பெண் கேட்டாள்: "இந்தப் பெடியனுக்கும் அவங்கள் உதைஞ்சவங்களே?"

"நான் ஏதோ கண்டனானே பிள்ளை. என்ரை வயிராக்கியத்தாலைதான் என்ரை மோனைப் பறி குடுத்திட்டன். என்ரை பேரக் குஞ்சும் நோயும் நொடி யுமாக் கிடக்கு. தாய்க்காரியும் விசர்பிடிச்சமாதிரி இருக்கிறா"

"ஆஸ்பத்திரீலை என்ன சொன்னவை?"

"இஞ்சை பெரியாசுப்பத்திரிக்குப் போன கிழமைதான் கொண்டுவந்து காட்டினனாங்கள். படம் எடுக்கோணும் எண்டு சொன்னவை. முந்தியெடுத்தபடம் மந்திகையிலை கிடக்கெண்டு சொன்னதுக்கு அதை எடுத்துத் தரச் சொல்லி துண்டு தந்தவை. மந்திகையிலை தந்த நம்பர்த் துண்டைத் துலைச்சப் போட்டனெண்டு மந்திகையிலை படத்தைத் தரமாட்டம் எண்டிட்டினம். அவ்வளவு படத்துக் குள்ளையும் இதை எப்படித் தேடி எடுக்கிறதெண்டு ஏசி அனுப்பிப்போட்டினம். அதுதான் இங்கை வந்து படம் எடுத்தனாங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்ப உந்தப் படத்தைப் பார்த்து டொக்டர் ஏதும் சொல்லியிருப்பார்தானே?"

"உது இன்னும் பாக்கேல்லலைப் பிள்ளை. உங்கை ஆசுப்பத்திரி மிசின் பிழைச்சுப் போச்சென்டினம். வெளியிலை படம் எடுத்துத் தரச் சொன்னவை. அதுதான் உது. அறுவத்தைஞ்சு ரூவா கட்டி வெளியிலை எடுத்த படம். ஆமிக்காறர் ஆசுப்பத்திரிக்குக் குண்டடிச்சதிலையிருந்து இஞ்சை டாக்குத்தர்மார் வேலை செய்யிறேலையாம், கிளினிக்கும் இல்லையாம். அதுதான் ஒண்டுமாத் தெரியேலைப் பிள்ளை ...."

"ஏன் அப்பு, மந்திகையில் டாக்குத்தர் ஏதுஞ் சொல்லியிருப்பார்தானே?"

"அந்த டாக்குத்தரை நம்பித்தான் பிள்ளை இழுபட விட்டிட்டம். அவர் லீவைப் போட்டுட்டு ஒருத்தருக்குஞ் சொல்லாமல் கொள்ளாமல் வெளிநாட்டுக்கு ஓடிப் போட்டாராம்"

"அப்பு, சும்மா டாக்குத்தர் மாரைக் குறை சொல்லாதை.... நீங்கள் கிளினிக்குக்கும் ஒழுங்காப் போயிருக்க மாட்டியள், பிறகு ஆரையும் குறை சொல்லுறது. வேறை டாக்குத்தர் அங்கை வந்திருப்பார்தானே?"

"இன்னும் ஒருத்தரும் வரேல்லை மோனை. கிளினிக்குக்கும் ஒழுங்காப் போய் வந்தனாங்கள். இஞ்சை வந்தால் இஞ்சையும் இப்படியாக் கிடக்கு. அதுதான் மோனை படத்திலை ஏதும் தெரியுதோ எண்டு பார் மோனை"

"அப்பு படத்திலை ஒன்றும் வாடிவாத் தெரியேல்லை. 'என்லாச்' பண்ணிப் பார்த்துத்தான் சொல்ல வேணும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரவிக் கிழவனுக்கு மனம் சோர்ந்து போய் விட்டது. அந்தப் பெண் 'களுக்' என்று சிரித்தாள்.

"உம்மில டொக்ரற்றை 'கட்' இருக்குத்தானப்பா. உமக்கு 'ஆர். எஸ் அடிக்கிறதுக்கு இன்றைக்கு வேறை யாரும் கிடைக்கேல்லையா. கிழவன் பாவம் நல்லா நம்பீட்டுது."

"சும்மா நக்கல் அடியாதையும். 'மெடிக்கல் ஸ்ருடன்ற்சும்' உப்பிடித்தானே படிப்பு முடிக்க முன்னம் தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று 'பார்ட்ஸ்' அடிக்கிறவை. நானும் சும்மா 'ஆர். எஸ்' அடிச்சுப் பார்த்தனான்"

கம்பஸில் மற்றையோரை நம்பவைக்குமாற் போலச் சொல்லிக் கொள்கின்ற பொய்மைக்கான 'ஆர். எஸ்' என்ற வார்த்தைப் பிரயோகத்தின் அர்த்தத்தை உள்வாங்கிக் கொண்டவர்களாய் அவர்கள் இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். கிழவனுக்கு ஒரே வெப்பிசாரமாகப் போய்விட்டது. குமுறிக் கொண்டு வரும் கொந்தளிப்பை அடக்கமாட்டாதவராய் எரிச்சலுடன் வெளியே பார்த்தார். தூரத்தில் சரசாலைச் சந்தி தெரிந்தது.

"ஏன் இது பருத்துறை போகேல்லையே ....." கொண்டக்டரைப்பார்த்து படபடப்புடன் கிழவன் கேட்டார்.

"அப்பு ..... தோட்டந்துலையிலையே.... ஏறேக் குள் ளையே சொண்ணனாணெல்லெ, வல்லையிலை ஹெலிகொப்ரராலை சுடூறான், புத்தூரடியாலை சுத்திப் போப்போறமெண்டு..... சரி, சரி பருத்துறைக்குத்தான் காசை எடு கெதியா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவன் மடியில் முன்னமே எடுத்து வைத்திருந்த பதினைந்து ரூபாவை அவனிடம் கொடுக்கிறார்.

"இதென்னப்பு பதினைஞ்சு ரூபா..... புத்தூர டியாலை சுத்திப் போறதென்டு சொல்லி இருபது ரூபா தரோணுமென்டு ஏற முன்னமே சொன்னனானெல்லே. உனக்கும் பொடிய னுக்குஞ் சேத்து நாப்பது ரூபா தா."

"நாப்பது ரூவாவோ? மடம் கட்டப் போறீரோ.... காலமை வரேக்கை ரெண்டு பேருக்கும் பதினைஞ்சு ரூவாத்தானே கொடுத்தனான். கொள்ளையடிக் கிறேண்டாலும் ஒரு அளவுகணக்கில்லையே?"

"என்ன கனக்கக் கதைக்கிறாய்..... இதுக்குள்ளை வாற ஆக்கள் ஒருத்தரும் ஒண்டும் பறையேல்லை, நீதான் ஏதோ கனக்கப் போட்டடிக்கிறாய்."

வயிரவிக் கிழவன் தனக்கு ஆதரவு தேடி சுற்று முற்றும் பார்க்கிறார். கச்சேரியில் வேலை செய்கிற காற்சட்டைகாரரும், மற்றையோரும் மௌனமாயிருக் கின்றனர். குரலைச்சற்று இறக்கி கிழவன் மெதுவாகக் கேட்கிறார்.

"அப்பிடியெண்டாலும் முப்பது ரூபாத்தானே வரும், எப்பிடி நாப்பது ரூவா?"

"ஏன் பெடியனுக்கு அரைரிக்கற்றே! இன்னும் பால் குடிக்கிறவரே... ஆளின்ரை வளத்திக்கு. நீதான் மடக்கை வைச்சுப் பொத்தப் பாக்கிறாய்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசாலை கழியமுன் கிழவனுக்கு அருகிலிருந்தவர் ஓரிடத்தில் இறங்கினார். அவர் இறங்கியதும் இறங்காததுமாக சற்றும் தாமதியாமல் அந்த இளைஞன் எழுந்து அந்தப் பெண்ணுக்கும் கிழவனுக்கும் இடையில் அமர்ந்தான். அப்போது எதிரே வந்த "ட்ரக்" இந்த வானைக் கடந்து செல்லும்போது சற்றுத் தாமதிக்கையில் வானுக்குள் இருந்த அனைவரும் எட்டிப்பார்த்தனர்.

குடல் வெளியே தள்ள குற்றுயிரும் குறை உயிருமாக இருக்கும் ஓர் இளைஞனை இரு இளைஞர்கள் தாங்கிப் பிடித்திருக்க அவர்களைச் சூழ துப்பாக்கிகளை ஏந்தியவர்களாய், இன்னும் நாலைந்து இளைஞர்கள். கண்கள் சோகத்தைச் சுமந்து கொண்டிருக்கின்றன.

"தொண்டமானாற்றில் "சென்றி"யிலை நின்ற பெடியனாம், ஹெலி அடிச்சதாம்."

வானுக்குள் இருந்தவர்கள் "பறைய" ஆரம்பிக்கின்றனர். வயிரவிக் கிழவன் வாய்விட்டு அரற்றாத குறை.

"அப்பு காசைத் தாவன்".

"தம்பி இருபத்தைஞ்சு ரூவாத்தான் மோனை சத்தியமாக் கிடக்கு இந்தா இதைப் பிடி, என்னட்டை வேறை காசில்லை".

கிழவனுக்கு அருகிலிருக்கும் அந்த இளைஞன் ரகசியமாகக் கேட்பதுபோல பாவனை செய்தவாறே கிழவனின் மடியிலிருந்த பையனிடம் மெதுவாகக் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, எத்தனையாம் வகுப்புப் படிக்கிறீர்?"

"ஏழாம் ஆண்டு"

"அப்பிடிச் சொல்லப்படாது மூண்டாம் வகுப்பெண்டு சொல்லோணும். இல்லாட்டி முழு ரிக்கற் எடுத்துப் போடுவினம், விளங்குதே"

இளைஞனின் வார்த்தைகளைக் கேட்டு அந்தப் பெண் சிரிப்பை அடக்கப் பிரயத்தனஞ் செய்து கொண்டிருப்பதையும், அவனின் புத்திமதியைக் கேட்டு அப்பாவித்தனமாகத் தன் பேரன் தலையசப்பதையும் காண பிட்டத்தில் அதுவரை வலித்துக் கொண்டிருந்த வலியையும் மீறி, வயிரவிக் கிழவனின் நெஞ்சு வலித்தது.

"அப்பு உண்மையிலை வேற காசில்லையோ? இருபத்தைஞ்சு ரூபாக்கு உங்களை இடைவழியிலை தான் இறக்கி விடோணும், பாவமாக்கிடக்கு".

கொண்டக்டரை இடைமறித்து இளைஞன் மெதுவாகச் சொன்னான்.

"மடீக்குள்ள சிலநேரம் மறைச்சு வைச்சுக் கொண்டு இருப்பார், மடியை உதறிக் காட்டச் சொல்லும்".

சர்வாங்கமும் பதற வயிரவிக் கிழவன் சன்னதம் கொண்டார்.

"என்னடா.... இல்லாத காசை என்னடா... என்னம் பொண்டுக்குள்ளாலை எடுத்துத் தாறதே ... அவரும் அவற்றை கிரந்தக் கதையும்.... இவர் தானுமொராளெண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயம் பறைய வந்திட்டார். நானும் பார்த்துப் பார்த்துக் கொண்டு தான் வாறன். அவற்றை சொட்டையும் கிரந்தமும்! இவரொருத்தர் என்னை இடைவழியில் இறக்கி விடப்போறாராம்.... எரியிற வீட்டிலை பிடுங்கிறதுதான் தாயமென்டு, நீங்களெல்லாம் தவிச்சமுயல் அடிக்கிறாக்களடா... இந்தாடா உன்ரை காசு, நிறுத்துங்கோடா வானை."

அந்த வார்த்தைகள் கணீரென்று அவ்விடமெல்லாம் நெருப்பின் வெம்மையோடு பரவின. எதிர்க்குரல் எதுவுமே கேட்காமல் எங்கும் மௌனம். மனதை நெருடி உறுத்தி வாயை அடைத்து விட்ட மௌனம்.

கிழவரின் குரலில் தொனித்த உறுதியான கட்டளை அப்படியே பலித்தது.

வயிரவிக் கிழவன் தீராத தனது வெறுப்பை மேலும் வெளிப்படுத்துகிறாற்போல காறித்துப்பினார். அந்தத் துப்பல் தமது முகத்தில் விழுந்தாற் போல கூனிப்போயினர் அவர்கள்.

(1988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமை தாராயோ

இன்று உன்னைக் காணும்போது என்னுள் பற்றிக் கொண்டு வருகிறது. மூளாத்தீபோல என்னுள்ளேயே கனன்று கொண்டிருந்த உன்னைப்பற்றிய என் நினைப்புக ளெல்லாம் பெருநெருப்பாய் மூண்டு, தீக்கங்குகளாய் என்னுள் அனல் வீசிக் கொண்டிருக்கின்றன.

இன்றும் உனக்கு அதே கதிதானா?

என் உள்ளம் நம்ப மறுக்கிறது.

இன்று உனக்குச் சகல கிருத்தியங்களும் செய்யப்படும் என்று நம்பித்தானே அந்த அழகை எல்லாம் காண ஓடி வந்தேன். ஆனால்..... இங்கு நடப்பவற்றைக் காணும் போது என் நெஞ்சு படும்பாட்டை என்னவென்று சொல்வேன்.

என்றும்போல இன்றும் உன்முன் நின்று, உன் திருவுருவை என்னுள் வரித்துக் கொண்டு, உன் சர்வ வல்லமையுள் தோய்ந்து என்னையே மறந்தவனாய் இந்தப் பூவுலகின் எல்லை வெளிகளை எல்லாம் கடந்து, அதற்கும் அப்பால் அதற்கும் அப்பால் எனச் செல்ல விழைகின்ற என் முயற்சியில் இன்று ஆரம்பத்திலேயே தோற்றுப்போய் அநாதரவாய் நிற்கின்றேன்.

எல்லாமே உன்னால் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று என் மனம் உன்னில் ஒரு நிலைப்பட மறுத்து உனக்காக இரங்குவதை எப்படி வெளியே சொல்லு வேன்?

"பொல்லுக்கிழவா!"

என் அம்மா உன்னைப் பெயர் சொல்லி இறைஞ்சுவது இன்னமும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

இன்று உனக்கு அணிவித்திருக்கும் பட்டுப் பீதாம்பரத்தைக் காணும்போது உன் ஆஜானுபாகுவான ஆகிருதியே என் கற்பனையில் விரிகிறது.

இந்த உத்தரீயத்துடன் நீ நடந்து செல்லும் அழகை என் மனத்திரையில் காண்கின்றேன்.

பொல்லும் கையுமாய் இந்த உத்தரீயத்துடன் உலாவரும்போது உன் கம்பீரமான நடையின் வேகத்திற்கு நான் மனக்கணக்குப் போடுகிறேன்.

நீ தெய்வமா அல்லது அவதார புருஷனா?

அண்ணன்மார் என்ற பெயர் மருவி உனக்கு அண்ணமார் என்ற பெயர் ஏற்பட்டதாகச் சொல்லிய ஆராய்ச்சி முடிபை அப்படியே ஏற்றுக்கொள்ள என் மனது மறுத்த வேளையிற்தான் உன் மூலத்தைக் கண்டறியவேண்டும் என்று என் மனம் விழைந்தது.

சிறுதெய்வம் என்று உன்னை ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டமைக்காக மனம் புழுங்கி, யார் யாரோ எல்லாம் தம் ஆராய்ச்சி முடிபுகளாகக் குறிப்பிட்டவற்றை எல்லாம் வைத்துக்கொண்டு உன் மூலத்தைக் கண்டறிய நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள்..... அப்பப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மூலத்தைக் கண்டறியவேண்டும் என்ற என் முயற்சியில் ஒளிப்பொட்டுத்தெறித்ததுபோல் என் நினைவில் பிரதிபலித்த என் அம்மாவின் இறைஞ்சுதல். என் முயற்சியின் ஆரம்பத்துக்கான சிறு நம்பிக்கை இழையானது.

"பொல்லுக்கிழவா!"

அந்நாளிலே, மூக்குறிஞ்சிக்கொண்டு திரிந்த பருவத்தில் என் அம்மாவின் சேலைத்தலைப்பைப் பிடித்துக் கொண்டு உன்னை வேடிக்கை பார்க்கையில் உன்னை என் அம்மா இப்படித்தானே பெயர் சொல்லி அழைத்து வணங்கினாள் என்பது திடீரென்று ஞாபகத்துக்கு வந்தபோது..... என் அம்மாவின் நினைவுகளை மீட்டு உன்னைப்பற்றி அறிந்துகொள்ள நான் மேற்கொண்ட எத்தனங்கள் ....! அம்மா என்ன செய்வாள், பாவம்!

நினைவுகள் எல்லாம் மங்கி மறைந்து போன முதுமை நிலையில் எதுவுமே அவளது நினைவுக்கு வர மறுக்கின்றன. நான்தான் விடுவதாயில்லை.

"அண்ணமாரைப் பொல்லுக்கிழவன் என்றெல்லே சொல்லிக் கும்பிடுறநீ .... அது ஏனணை?"

தொலைவை வெறித்து நோக்கியவளாய் அம்மா மௌனமானாள். அவள் உதிர்க்கப்போகும் வார்த்தைகளைக் கேட்க என் காதுகளைக் கூர்மையாக்கிக் கொள்கிறேன்.

"ஆச்சி அப்படித்தான் சொல்லிக் கும்பிடுறவ. மேனை.."

வரலாற்று ஆராய்ச்சி என்றாலே இப்படித்தான் என்பதை உணர்ந்தவனாக என் முயற்சியில் தொடர்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கு பொல்லுக்கிழவனைப் பற்றி ஏதும் தெரியு மேனை?"

அம்மா ஞாபகப்படுத்த முயன்று தோற்றுப்போய்ச் சொல்கிறாள்; "எனக்கு ஞாபகமில்லை மேனை..... முந்தி ஆச்சி ஏதோ படிக்கிறவ....."

பத்ததி வரிகளிலிருந்து பொல்லுக்கிழவனைப் பற்றி ஏதாவது அறியலாமா என்ற என் முயற்சியும் கைகூடாத போதிலும், அம்மாவைப் பேசச் செய்யக்கிடைத்த சந் தர்ப்பத்தை நழுவவிட்டுவிடாமல், மேலும் உற்சாகப்படுத்தி அம்மாவின் நினைவைப் பின்னோக்கி இழுத்துச் செல்ல முயற்சிக்கிறேன். அதன் பேறாக, அம்மா விட்டு விட்டுச் சொன்ன விபரங்கள்தான் பொல்லுக்கிழவனின் மூலத்துக்கான அடி ஆதாரங்கள்.

"வல்லிக்கிழவன் பொல்லுக்கிழவனா வந்து ஆடிப்பாக்க வேணும் மேனை. எங்கடை உடம்பெல்லாஞ் சிலிர்த்துப் போகும்"

அம்மா சொன்னவற்றை எல்லாம் கோர்வைப்படுத்தி மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன்.

வேள்வி ஆரம்பிக்கச் சற்றுமுன்னரே சூலத்தின் முன்னால் வல்லிக்கிழவன் மௌனமாக இருக்கத் தொடங்கிவிடுவாராம். சனங்களின் ஆரவாரம் அடங்கி, எல்லோரும் வல்லிக்கிழவனையே பார்த்துக் கொண்டிருக்க, அண்ணமார் சூலத்தை வெறித்து நோக்கியவாறே வல்லிக்கிழவன் மெல்லத் தலையை முன்னும் பின்னும் அசைத்து, படிப்படியாக உடம்பையும் அசைக்கத் தொடங்கு வாராம். வல்லிக்கிழவனின் அங்க அசைவுகளெல்லாம் மெல்ல மெல்லச் சனங்களை அண்ணமார் மீது பயபக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளச்செய்யுமாம். தலை அசைப்பின் வேகத்தை மெல்ல அதிகரித்து, உடம்பை முறிப்பதுபோல நெளித்து வளைத்து, உச்சக்கட்டத்தில் எழுந்து நின்று வல்லிக் கிழவன் உருவந்து ஆடத் தொடங்கிவிடுவாராம். சற்று நேரத்தில், சூலத்தோடு சாத்தி வைத்திருக்கும் நீண்ட பொல்லொன்றை ஓடிச்சென்று பாய்ந்து எடுத்து, அதனைச் சிலம்பம் சுழற்றுவது போலச் சுழற்றிக்கொண்டே கோயிலிலிருந்து நான்கு திசைகளிலும் சற்றுத்தூரத்துக்கு ஆடிக்கொண்டே சென்று எதிரிகளையும் விலங்கினங்களையும் விரட்டுவது போலப் பாவனை செய்து திரும்பி வருவாராம். வல்லிக் கிழவனின் ஆட்டத்தை ஒத்த ஆட்டத்தை வேறு ஆட்கள் ஆடியதையும், சின்னப் பருவத்தில் ஆச்சியுடன் கூட இருந்து அம்மா பார்த்திருக்கிறாவாம்.

அந்த ஆட்டத்தைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லையே என்று அங்கலாய்த்து என்மீதே பச்சாதாபப் படத்தான் என்னால் முடிகிறது.

ஒருவேளை, அந்த ஆட்டம் இன்றும் தொடர்ந்து, ஆடப்பட்டு வந்திருந்தால் பொல்லுக்கிழவன் பற்றிய செய்திகளும் கடத்தப்பட்டு வந்திருக்கும். இந்த தொடர்ச்சி ஏன் விடுபட்டுப்போனது?

இக்கேள்வி என்னுள் ஓங்கி ஒலிக்கின்றபோதே என் தந்தைவழி உறவினர் மீது வெறுப்பாகவும் வருகிறது.

"நூற்றுக் கணக்கான ஆடுகளையும் கோழிகளையும் வெட்டி வேள்வி செய்கிற அண்ணமார் கோயிற்பக்கமே போகாமல் இருந்த நாங்கள்தான், பகீரதப் பிரயத்தனஞ் செய்து வேள்வியை நிறுத்தி அண்ணமார் பொங்கலாக் கினம். இன்றைக்கிருக்கிற பால கணபதி விக்கிர கத்தைக்கூட என்னுடைய சின்னண்ணன், சிவகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத்தியார்தான் உபகரித்தவர். வதிரி அண்ணமாரிலை சூரன் ஆசாரியார் வேள்வியை நிறுத்திய கையோடை, கவிஞர் அத்தான், சின்னண்ணை எல்லோரும் சேர்ந்து செய்த முயற்சி யாலைதான் இன்றைக்கு இந்தக்கோயில் ஆலடிப்பிள்ளை யாராய் விளங்குது...."

சோதிடம் சொல்லும்போதே கதையோடு கதையாக கோயில் வரலாற்றையும் ஐயா சொல்லும்போது எனக்கு எரிச்சல் எரிச்சலாக வரும்.

ஒரு சமயம், ஐயாவின் உறவினர் எல்லோரையும் சாடி, உன்னைப் புறந்தள்ளியமைக்காக என் ஐயாவிடம் நியாயம் கேட்டபோதுதான் உனக்கு ஏற்பட்ட நிலைமையையும் என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது.

ஆலடிப் பிள்ளையார் கோயிலுக்கென பரிபாலன சபை ஒன்று அமைத்து, ஆலயத்தை விருத்தி செய்து வந்தவேளையில்,கால ஓட்டத்தில், ஆகம விதிப்படி கோயில் மண்டபங்களையும் கட்டடங்களையும் அமைத்து சுற்று மதிலும் கட்டி, உட்பிரகாரத்தில் பரிவார மூர்த்தங்களையும் பிரதிட்டை செய்து, மகா கும்பாபிஷேகமும் செய்த வேளையில்தான் உனக்கு இந்த நிலை ஏற்பட்டதாம்.

வாத்தியார்-சின்னண்ணை எவ்வளவோ சொல்லியும் அவரின் வாதம் எடுபடவில்லையாம். நீ எல்லைக்காவல் தெய்வம் என்பதால் சுற்றுப் பிரகாரத்துக்கு வெளியிலேயே இருக்க வேண்டும் என்று சொல்லிச் சமாளித்துக் கொண்டார்களாம்.

இன்று முப்பது வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்து மஹா கும்பாபிஷேகம் நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. பிரசித்தம் பெற்ற ஆலயங்களைச் சேர்ந்த பிரபல்யமான குருக்கள் சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டு, அவர்களின் மேற்பார்வையில் மஹாகும் பாபிஷேகத்துக்குரிய சகல கிரியைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதிகாலையிலேயே தைலாப்பியாங்கம் முடிந்து, யாக பூஜை, ஹோமம், மஹா பூரணாகுதி, தீபாராதனை என்று மஹா கும்பாபிஷேகத்துக்கு முன்னர் நடைபெற வேண்டிய அநேக கிரியைகள் நடைபெற்று முடிந்துவிட்டன.

இறுதியாக, தூபி அபிஷேகமும் முடிந்து, மூலவருக்கான மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பிரதம குருக்களே முன்நின்று சகல கிரியைகளையும் செய்து கொண்டிருக்கிறார்.

மூலவருக்கான அபிஷேகம் முடித்து, பரிவார மூர்த்தங்கள் ஒவ்வொன்றுக்குமான அபிஷேகத்தையும் குருக்கள் நேர்த்தியாகச் செய்துகொண்டு வருகிறார். இந்த ஆலயத்தில் நித்திய பூஜை செய்யும் "சைவம்" பிரதம குருக்களுக்கு 'எடுபிடியாக' அவர் இட்ட கட்டளைகள் சகலவற்றையும் சிரத்தையோடு செய்து வருகிறார்.

நான் உனக்கான அபிஷேகத்தையும், வேத பாராயணத்தையும் எதிர் பார்த்துக் காத்திருக்கிறேன். பிரதம குருக்களின் சுருதி சுத்தமான, கார்வையான ஒலியின் மந்திர உச்சாடனத்தில் உன் உள்ளம் இன்று குளிரப்போகின்றதே என்று என் உள்ளம் உவகை கொள்கின்றது.

பிரதம குருக்களோ, அவருடன் கூடவந்த ஏனைய குருக்கள்மாரோ வெளியே வருவதாகக் காணோம்.

சற்று நேரத்தில், ஆலயத்திற்கு நித்திய பூஜை செய்கின்ற 'சைவம்' உன்னை நோக்கி வந்து, உனக்கான அபிஷேக தீபாராதனையை முடித்துக்கொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர உச்சாடனத்தில் தெளிவேதுமின்றி, வழமை யான முணுமுணுப்பு.

எனக்கு ஆத்திரமாக வருகிறது. அடக்கிக்கொண்டு சைவத்திடமே கேட்கின்றேன்!

"ஐயா, ஏன் அண்ணமாருக்கு மட்டும் அபிஷேகம் செய்ய குருக்கள்மார் வரேல்லை?"

சைவம் தயங்குகிறார். வழிபடவந்தவர்கள் யாவரும் அண்ணமாரை வணங்கித் தூரச் சென்றபின் என் காதருகே குனிகிறார்.

"என்னைச் சொன்னதென்று சொல்லிப்போடா தேங்கோ... கோயில் நிருவாகியளும் குருக்கள்மாரும் கூடிக்கதைச்சவை. வேள்வி செய்த தெய்வத்துக்கு குருக்கள்மார் பூஜை செய்கிற வழக்கம் இங்கையில்லை என்று நிருவாகியள்தான் சொன்னவை...."

என் மேனி நடுக்குறுகின்றது.

தெய்வத்திற்குமா ஓரவஞ்சனை?

'சிறுதெய்வம்' என்ற குறியீடு இதைக் குறிக்கத்தானா?

இவற்றையெல்லாம் வகுப்பவர்கள் யார்?

இந்த ஆலயத்திலே கடந்த சில வருடங்களாக நடைபெற்று வருகின்ற நடைமுறைகளை எல்லாம் ஒருமுறை நினைத்துப் பார்க்கின்றேன்.

இந்த ஆலயத்தின் பரிபாலனத்தைத் தொடர்ந்தும் தம் கைகளுக்குள்ளேயே வைத்திருக்க வேண்டுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் தீட்டி, இந்த ஊர் மக்களின் பொதுச் சொத்தாக விளங்கும் இந்த ஆலயத்தில் புதிய புதிய நடைமுறை களையும் புதிய புதிய வழிபாட்டு முறைகளையும் ஆரம் பித்து வைத்து, தங்களையும் தங்களைச் சார்ந்தோரையும் ஞானவான்களாகவும் ஏனையோரை அறிவீனர்களாகவும் காட்டிக்கொள்ள விழையும் இக்கூட்டத்தினரின் போக்கை நிதரிசனமாகவே காணும்போது என் நெஞ்சம் தகிக்கிறது.

இன்றைய நடைமுறையே தெரியாதவர்களாக, தெய்வங்களிலும் பேதம் கற்பித்துக் கொள்ளும் இவர்கள் என்ன மனிதர்கள்?

பொல்லுக்கிழவா!

ரிஷிமூலம், நதிமூலம் என்பதுபோல உன் மூலத்தையும் என் சிற்றறிவைக் கொண்டு கண்டுபிடித்துவிடலாம் என்று பலவாறு முயன்றும் தோற்றுப்போய் உன் சர்வவல்லமையுள் தோய்ந்து உன்னிடமே நான் சரணடைந்திருக்கும்போது, உன் நிலைமைக்காக நான் எப்படி வருந்தாமல் இருக்க முடியும்?

உன் சர்வ வல்லமையே இவ்வளவு தானா?

இல்லை, காலம் காலமாக அச்சத்திலும் அறியாமை யிலும் வாழ்ந்த மக்கள் கூட்டத்தினரின் இடர் களைந்து, அறிவூட்டி ஆக்கமளித்தவன் நீ.

கொள்ளையரிடமிருந்தும் விலங்கினங்களிடமிருந்தும் அவர்களின் சுதந்திரத்தை மீட்டெடுத்து அவர்களின் சுதந்திர வாழ்வுக்கு வழிசமைத்தவன் நீ.

இதை நன்குணர்ந்ததனால்தான் உன்னையும் உன்னையொத்த அந்த மாவீரர்களையும் காலம் காலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மக்கள் எல்லோரும் 'அண்ணன்மார்களே' என்று தெய்வங்களாகவே போற்றி வந்திருக்கிறார்கள்.

அந்த மக்கள்தான் உண்மையிலேயே ஞானவான்கள்.

இந்த உண்மையை இன்றைய நடைமுறையிலிருந்தேனும் ஊகித்தறிந்து கொள்ள முடியாதவர்கள் தான் அறிவீனர்.... ஞான சூனியங்கள். இவர்கள் ஞானாசிரியர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ள முயல்கின்றமையே இவர்களின் மதியீனத்தைத்தான் காட்டுகிறது.

இந்த ஞான சூனியங்கள் சமுதாயத்தையே சீரழித்து விடுவார்களோ என்றுதான் அச்சமாக இருக்கிறது.

பொல்லுக்கிழவா! நியாயம் தெரிந்தவர்களும் கூட, 'தெய்வத்தின் பழி நமக்கேன்' என்று இன்னமுமா மௌனம் சாதிக்க வேண்டும்?

எம் மௌனம் உடைய வேண்டும். அதற்கு நீ அருள் செய்ய வேண்டும். இந்த மண்ணின் பொய்மைகளை எல்லாம் தகர்த்தெறியும் வல்லமையை நீ எமக்கு ஊட்ட வேண்டும்.

வேத மந்திர உச்சாடனம் செய்து இறைவனை விக்கிரகத்தில் எழுந்தருளுமாறு வேண்டிக்கொள்வது போல உன்னை நான் ஆவாகனம் செய்கிறேன்.

பொல்லுக்கிழவா....!

எம்முள் வருக!

எம்மில் உருக்கொள்க!!

உன் பேரில் சந்நதம் கொள்க!!! (1994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள், கணங்கள்..... நமது வாழ்க்கைகள்

காலை எட்டு மணி,

சுருவத்தின் அருகில் வந்திறங்கியபோது 'அப்பாடா' என்றிருந்தது. இவ்வளவு நேரமும் நெஞ்சை நிறைத்திருந்த பயம் மறைந்து மனம் சற்று ஆறுதலடைந்தது. சொல்லி வைத்தாற்போல வீதியின் எதிர்ப்புறமிருந்த செமினரி வாசலில் இரு கைகளிலும் செவ்வரத்தம் பூக்களை ஏந்திய வனாய் சிரித்த முகத்துடன் பங்கிறாற்றியஸ்.

"குட் மோணிங் சேர்"

"குட் மோணிங்"

சுருவத்தினருகே சென்று மரியாளின் திருப்பாதங் களில் செம்மலர்களை அர்ச்சித்துத் தோத்தரித்து நிற்கும் பங்கிறாற்றியசுடன், கூடவே என் மனமும் மரியாளை இறைஞ்சுகிறது. தூரத்தில் நின்று என் பார்வையாலேயே அன்னையின் காலடிகளைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கின்றபோது, நெஞ்சமும் 'ஆவே மரியா' என்று மரியாளை வாழ்த்தி ஆராதிக்கிறது.

இதுவரை என்னுள் இருந்த படபடப்பும் நெஞ்சத் துடிப்பும் அடங்கி எவ்வாறு என் மனம் அமைதியானது என்றெண்ணி வியக்கின்றபோதே, அந்த மரியாளின் அருள் பொங்கும் விழிகளில் என் பார்வை நிலைக்குத்தி நின்று, அந்த விழிகளின் விகசிப்பில் மனம் குளிர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கி ன்றது.

இன்று நேற்றல்ல, நான்கு வருடங்களாக இதே நடை முறைதான். இந்த நான்கு வருடங்களிலும், விடுமுறை தவிர்ந்த எல்லா நாட்களிலுமே நான் கல்லூரிக்குள் காலடி வைத்ததும் இந்த மரியாளின் தரிசனத்துடன்தான்.

இம்மரியாளின் முன்னால் நின்று அவளையே உற்றுப்பார்க்கின்றபோது, அவளின் அருள் நிறைந்த விழிகளும் சாந்தம் தவழும் வதனமும் பொழிகின்ற கருணைமழையில்நனைந்து உள்ளம் கசியும். நெஞ்சில் உருவகித்துக்கொண்ட லோகமாதாவின் திருச்சொரூபத் துக்கு ஓர் உருவத்திருமேனி கிடைத்தாற் போன்று உள்ளம் நெகிழ்ந்து, தனது திருப்பார்வை ஒன்றினாலேயே அண்ட சராசரம் அனைத்தையும் பேணிக்காக்கும் புவனலோஜனி இப்படித்தான் இருப்பாள், இப்படியே இருப்பாள் என்று மனம் ஆனந்தக் கூத்தாடும்.

கல்லூரி மணி அடிக்கும் ஓசை கேட்டு பங்கிறாற்றியஸ் தனது தோத்திரத்தை முடித்துக்கொண்டு திரும்பினான்.

பங்கிறாற்றியசைக் காண எனக்கு ஆசையாக இருக் கிறது. இச்சிறுவயதிலேயே தனது வாழ்வில் ஒரு நெறி முறையை ஏற்படுத்திக்கொண்ட இவனை நினைத்து ஆச்சரியமாகவும் இருக்கிறது. மூன்று வருடங்களாக, அதுவும் சொல்லி வைத்தாற்போல இதே நேரத்தில் செல்வரத்தம் பூவும் கையுமாக இவனைக் கண்டு கொண்டுதான் வருகிறேன்.

அண்மையிலேதான் இவனது பெற்றோர்கள் 'பயங்கர வாதிகள்' என்ற பெயரோடு மண்ணாரில் இறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார்கள். இன்று இவனோர் அனாதை. ஆனாலும் இந்த மரியாளுடன் கொண்டிருக்கும் இந்நேய உறவு இருக்கும்வரை இவன் என்றுமே உளமாய்ச்சலுக்கு ஆளாகப் போவதில்லை என்றுஎன் மனம் தீர்மானித்துக் கொள்கிறது.

பங்கிறாற்றியசுடன் அருகாக நடந்து, சுருவத்தைக் கடந்து அச்சந்தி வளைவில் திரும்பி தேவாலய வீதியில் காலடி வைக்கின்றபோது பங்கிறாற்றியஸ் மெதுவாக அலறினான்.

"ஸேர், அங்கை பாருங்கோ"

கனரக வாகனங்களில் நீண்டிருக்கும் துப்பாக்கிகள் வீதி நீளத்துக்குக் குறிபார்த்திருக்க ஆயுதங்களை ஏந்திப் பிடித்தபடி ஆயர் விடுதி முன்னால் 'அவர்கள்'.....

அந்த வீதி ஏன் இவ்வளவு தூரம் அமைதியாக இருந்த தென்பதும் இப்போதுதான் உறைக்கிறது.

சுருவத்துக்கு எதிர்ப்பக்கமாக இருக்கின்ற சென்ற் சாள்ஸ் பாடசாலைகூட இன்று அடங்கிக் கிடக்கிறது. மற்றைய நாட்களெனின், இந்நேரத்துக்கு இவ்வீதி நெடுக அப்பாடசாலை மாணவர்கள் 'லெப்ற் றைற்' அடித்துக் கொண்டிருப்பார்கள். 'அவர்களின்' வருகையாற்தான் இன்று இந்த அமைதியும் அடக்கமும்.

பங்கிறாற்றியசின் கை அவனின் தோளில் தொங்கும் புத்தகப்பையை இறுகப்பற்றுகிறது. எனக்கும்கூட மீண்டும் பயமாக இருக்கிறது. எப்படியும் இப்போது அடையாள அட்டையைக் கேட்கத்தான் போகிறர்கள், நான் மாட்டுப் படத்தான் போகிறேன் என்று நெஞ்சு அடித்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சில மீற்றர் தூரம் கடந்தபின்தான் கல்லூரிக்கும் தேவாலயத்துக்குமான பொது வாசலின் முன்னால் உபஅதிபர் யேசுநேசன் அடிகள் நிற்பது தெரிகிறது. வேதப்புத்தகத்தைப் படித்தபடி நின்றுகொண்டிருக்கும் அடிகளாரைக் கண்டபின் சற்றுத் தெம்பாகவும் இருக்கிறது.

அருகில் நெருங்க... நெருங்க... 'அவர்கள்' நின்றுகொண்டிருக்கும் 'உசார்நிலை' அச்சத்தைத் தருகிறது. எமது தயக்கத்தையும் அச்சத்தையும் விளங்கிக் கொண்டவராய் தனது பார்வையாலேயே தென்பூட்டி எம்மை வருமாறு அடிகளார் அழைக்கிறார். சுற்றிலும் ஆயுதங்களைத் தரித்தவர்களாய் நிற்கும் 'அளர்களுக்கு' மத்தியில் வேதப்புத்தகத்தைப் பற்றியவாறு நின்று கல்லூரிக்கு வருபவர்களையும் கண்காணித்துக் கொண்டிருக்கும் அடிகளாரின் மனோவலிமையைக் காண வியப்பாக இருக்கிறது.

'அவர்களைச்' சட்டை செய்யாதவர்கள்போல நெஞ்சில் பயத்தை மறைத்துக்கொண்டு கடந்து கல்லூரிக்குள் நுழைகின்றபோதுதான் நெஞ்சிலிருந்த பயம் முழுவதும் நீங்கி உண்மையாகவே மனம் ஆசுவாசம் கொள்கிறது.

கையெழுத்துப் போடுவதற்காக ஆசிரியர் கூடத்தினுள் பிரவேசிக்கின்றபோது பேச்சை இடை நிறுத்தி அங்குநின்ற ஆசிரியர்கள் அனைவருமே என்பக்கம் திரும்புகின்றனர்.

"என்ன மாஸ்ரர் இன்னும் நிக்கிறாங்கள் தானே, உங்களை ஒண்டும் கேக்கேல்லையா?"

லோறன்ஸ் மாஸ்ரர் வழமையான தனது அட்டகாசச் சிரிப்புடன் வினாவுகிறர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை ஸேர், பாதர் யேசுநேசன் வாசல்லை நிக்கிறார்... ஏன் ஸேர் என்ன விசேஷம்?"

"பிஷொப் ஹவுஸில் ஏதோ மகாநாடாம். 'அவங்கடை பெரியவனும்' வாறான் போலை. அதுதான் நேரத் தோடையே வந்திட்டாங்கள்... அதுசரி, உங்கடை பக்கம் விசேஷம் ஒண்டுமில்லையா மாஸ்ரர்?"

'விசேஷமாக ஒன்றுமில்லை ஸேர்' என்று கூறிக்கொள் ளும்போதே தலை சற்று வலிப்பது போலவும் இருக்கிறது.

பாடவேளையின் ஆரம்பமணி ஒலிக்கும்போது 'பிறேயர்' முடிந்து மாணவர்கள் வகுப்புகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். எனது வகுப்புக்குள் பிர வேசிக்கும்போது வகுப்பிலும் இதே கதைதான். ஆயர்விடுதியின் முன்னால் 'அவர்கள்' நிற்பதைக் குறிப்பிட்டு மாணவர்கள் எனக்குப் புதினம் சொல்லும் போது "அவர்களை"க் கடந்துதான் கல்லூரிக்கு வந்ததாகக் கூறுகிறேன்.

மனம் சோர்வாக இருப்பதனாலோ என்னவோ பாடங் களையும் அக்கறையோடு கற்பிக்க முடியாதிருக்கிறது. என்னில் தெரிந்த மாற்றத்தை அவதானித்த ஒரு சில மாணவர் 'ஏன் ஸேர் ஒரு மாதிரியா இருக்கிறீங்கள்' என்று விசாரிக்கவும் செய்கின்றனர். 'நேற்றிரவு அதிகம் நித்திரை கொள்ளவில்லை' என்று கூறிச் சமாளித்துக் கொள்கிறேன்.

மூன்றாம் பாடவேளை எனக்குப் பாடமில்லாதிருப்பது ஆறுதலாக இருக்கிறது. நூலகத்திற்குச் சென்று சற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வாக இருக்கலாமே என எண்ணி நூல்நிலையம் அமைந் திருக்கும் மத்திய பிரிவுப் பகுதிக்கு விரைகிறேன்.

உயர்பிரிவுப் பகுதியையும் மத்திய பிரிவுப் பகுதியையும் பிரிக்கின்ற அந்தப் பின்புற வீதியைக் கடக்கின்ற போதும் பயம் சற்று எட்டிப் பார்க்கத்தான் செய்கிறது. இதே வீதி யில்தான் இருநாட்களுக்கு முன்னரும் இருவர் சூடுபட்டு இறந்தனர்.

இந்நேரம் 'அவர்கள்' முகாமுக்குத் திரும்பியிருக்கக் கூடும். இதுவரை திரும்பாதிருந்து இந்நேரத்தில் முகாமுக்குத் திரும்புவார்களேயானால் என்ன ஆகும் என்று எண்ணும் போது நெஞ்சு பதைபதைக்கிறது.

நூல் நிலையத்திற்குச் செல்லும் படிகளில் ஏறி நூல் நிலையத்தின் முன் விறாந்தையில் காலடி வைக்கின்ற போதே மேல் மாடி வெளியினூடாக சவக்காலைச் சிலுவைகளுக்கும் அப்பால் தெரியும் பாதையில் பார்வையை எறிகிறேன்.

நெஞ்சு ஒருமுறை 'திக்' என்றது.

கவச வாகனங்கள் நிரையாகப் பின்னால்வர முன்னாலே அணிவகுத்து 'அவர்கள்' வந்து கொண்டிருக் கிறார்கள். இப்போதுதான் ஒருவேளை 'அவர்களின்' உயர் அதிகாரி புறப்பட்டு வந்துகொண்டிருக்க வேண்டும்.

நூல்நிலையத்திற்குள் நுழைந்து சஞ்சிகை ஒன்றைப் புரட்டுகிறேன். மனம் அதில் லயிக்க மறுத்து அலைந்து கொண்டிருக்கிறது. இவ்வளவு தூரம் இன்று என்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவரத்திற்குள்ளாக்கிய அடையாள அட்டையையும் அதனை எடுக்க மறந்த என் மறதிக் குணத்தையும் நினைத்து என்மீதே எனக்குச் சினமாகவும் வருகிறது.

தினம் காலையில் உடுப்பு அணியும் போதே சட்டைப்பையினுள் அடையாள அட்டையையும் எடுத்து வைத்து ஒருமுறைக்கு இருமுறை அது இருக்கிறதா என்று தொட்டுப் பார்த்துத் திருப்தியடைவது கூட வழக்கமாகி விட்டிருந்தது. இன்று மட்டும் எப்படி அது மறந்து போனது!

மறதியைக் குறித்து மீள்பரிசீலனையில் மனம் இறங்குகின்ற போதுதான் காலையில் சுமதி என் தோள்மீது சத்தி எடுத்ததும் சத்தியில் சட்டை நனைந்து அதனை மாற்றியதும் ஞாபகத்துக்கு வருகிறது. சுமதியைப் பற்றிய நினைவு வந்ததுமே மனம் சகலதையும் மறந்து அவளைச் சுற்றியே வட்டமிடுகின்றது.

சுமதி இந்நேரம் எப்படியிருப்பாள்?.... இன்னமும் இடைவிடாது இருமிக்கொண்டேதான் இருப்பாளோ!

பாவம் குழந்தை, எவ்வளவு தூரம் துடித்துப் போய் விட்டது.

பகிடிபகிடியாக இருமல் ஆரம்பித்து இரண்டு கிழமைகள் கடந்து விட்டன. சாதாரண இருமல்தானே என நினைத்து பனங்கற்கண்டை உமியக் கொடுத்து, விளைவு கர்ப்பூரத்தை உருக்கி நெஞ்சுப் பள்ளத்தில் தொட்டுத்தொட்டு வைத்ததில் மூன்று நான்கு நாட்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் குக்கலாக இருக்குமோ என்றெண்ணி புங்கங்காயும் புலித்தோலும் கோத்துக் கழுத்தில்கட்டி அதிமதுர வேரைப்பிழிந்து அதன் சாறைத் துணியில் நனைத்து உமியச் செய்ததில் நாலைந்து நாட்களும் கழிந்து போயின. நாட்கள் கழிந்து இருமல் அதிகரித்ததே தவிர குறைந்த பாடாயில்லை.

நேரத்தோடயே மருத்துவரிடம் காட்டியிருந்தால் குழந்தை இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக்காது. நான் சொல்லி கேட்டால் தானே.

"டும் ... டும் ... டும் ...."

திடீரென்று வெடித்த குண்டுகளின் சத்தத்தில் யன்னல்கள் அதிர்ந்தன.

என்னவாக இருக்கும் .....?

....

"முகாமுக்குக் கிட்ட உள்ள வீடுகளைக் குண்டு வைத்துத் தகர்க்கிறாங்களாம் ஸேர்...."

நூலகர்தான் கூறுகிறார்.

இந்த நிலைமையில் யார்தான் புதுவீடு கட்டப்போகி றார்கள்?

மச்சானும் நல்ல மேசன்தான். பாவம், வேலைவெட்டி இல்லாமல் அவர்களின் வாயும் வயிறுமே அரையும் குறை யும்தான். இந்த நிலைமையிலும் நோயும் பிணியு மென்றால்..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் எல்லோரையும்விட மச்சான்தான் பிள்ளையின் வருத்தத்தால் நன்றாக அரண்டு போய்விட்டார். தொடர்ந்து மூன்று நான்கு நாட்களாக நித்திரையும் இல்லை. நேற்று காரையும் பிடித்துவிட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்த போது தனது இயலாமை குறித்துக் குன்றித்தான் போய் விட்டார்.

ஆஸ்பத்திரியிலும் மருந்துக்குத் தட்டுப்பாடு. முக்கிய மான ஊசிமருந்தொன்று வெளிக்கடையில் எடுத்துத் தரும்படி சீட்டெழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஊசி போட்டால்தான் விரைவில் சுகம் வருமாம். பருத்தித் துறையில் ஒரு கடையிலுமே அந்த மருந்து இல்லை. யாழ்ப்பாணத்தில்தான் வாங்கவேண்டும்.

காற்சட்டைப்பையில் கைவிட்டுப் பார்த்துக் கொள் கிறேன். மருந்துச் சீட்டு பத்திரமாக இருக்கிறது. பாடசாலை முடிந்து வீட்டுக்குப் போகும்போது மறக்காமல் மருந்தை வாங்கிச் செல்லவேண்டும் என்று நினைத்துக் கொள்ளும் போதே ஊசிபோட்ட பின்பாவது குழந்தைக்குச் சுகம்வர வேண்டும் என்றும் மனம் அங்கலாய்க்கிறது.

பாடம் முடிந்த மணி ஒலித்ததுகூடத்தெரியாமல் நினைவுகளில் மூழ்கியிருக்கும் என்னை அந்நினைவு களிலிருந்து நூலகர்தான் மீட்கிறார். நினைவுகளின் 'இரை மீட்பு' உள்ளத்துக்கு மட்டுமன்றி உடலுக்கும் தென்புதர என் நடையின் விரைவிலும் அது தெரிகிறது.

இடைவேளை நேரத்தின்போதான சந்திப்பில் 'அவர் கள்' தங்கள் முகாமுக்குத் திரும்பிப் போய்விட்டதாக ஆசிரியர்கள் கதைத்துக் கொள்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து வாங்கவேண்டுமென்ற நினைவு ஒன்றே எஞ்சி நின்று, இடைவேளையைத் தொடர்ந்து வந்த பாடங்கள் எல்லாமே எப்படியோ கழிகின்றன.

கடைசிப்பாடம் முடிவதற்கான மணி அடிக்கும்வரை பொறுத்திருக்காது வகுப்பைவிட்டு வெளியேறுகிறபோது மணியும் ஒலிக்கிறது. மாணவர்கள் எல்லோரும் நிரை நிரையாக கல்லூரி அலுவலக முன்பாக உள்ள வெளியில் பிரார்த்தனைக்காக மரியாள் சிலைமுன் கூடுகின்றனர்.

கல்லூரிப் பின்புற வீதியில் இறங்கிக் 'கல்லூரிவீதி' யில் நடந்து கொண்டிருக்கும்போது மாணவர்களின் பிரார்த்தனை துல்லியமாகக் கேட்கிறது.

"அருள் நிறைந்த மரியாயே வாழ்க!

கர்த்தர் உம்முடனேயே

பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவரும் நீரே

உம்முடைய திருவயிற்றின் கனியாகிய யேசுவும்

ஆசீர்வதிக்கப்பட்டவரே.

அர்ச்சேஷ்ட மரியாயே, சர்வேஸ்வரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக,

இப்பொழுதும் எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக் கொள்ளும்.

ஆமென்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் பிரார்த்தனையை உள்ளொலித்தவாறே ஆமென் கூறி முடித்து ஒருசில அடிகள் எடுத்து வைப்பதற்குள்ளாக கல்லூரி முன்புற வாசலால் வெளியேறி என்னையும் கடந்து ஒரு சில மாணவர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றனர். 'பாடசாலை பஸ்'ஸில் 'சீற்' பிடிக்கவேண்டும் என்ற அவதி அவர்களுக்கு.

மெயின் றோட்டில் காலடி வைப்பதற்கு ஒரு சில மீற்றர் தூரம்தான் இருக்கையில் அந்த மாணவர்கள் திரும்பி ஓடி வருகிறார்கள்.

"ஸேர் ஸேர் ஓடுங்கோ, ஆமெட் கார் வரூது"

என்ன செய்வதென்றறியாது மனம் பதறுகிறது. அருகிலுள்ள ஞானம் மாஸ்ரர் வீட்டுக்கு ஓடுவோமா என்று தீர்மானிப்பதற்குள்ளாகவே ஓடிவந்து கொண்டிருந்த ஒருவன் மீண்டும் அழைக்கிறான்.

"ஸேர் வாங்கோ அது டேவிட் றோட்டாலை திரும்பீட்டுது"

இப்போது கொஞ்ச நாட்களாக 'அவர்களின்' போக்கில் ஏற்பட்ட மாற்றத்தால் தினம்தினம் இதே அதிர்வுதான்.

மெயின் றோட்டில் ஏறி மினிபஸ் ஏதும் வருகின்றதா என்று பார்க்கின்றபோது, என்னருகே சைக்கிள் ஒன்று வந்து நிற்க .....

ஓ, பங்கிறாற்றியஸ்!

"கோட் பிளெஸ் யூ ஸேர், வாங்கோ ஸேர் உங்களை ரவுணிலை விட்டிட்டு வாறன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஏறிவந்த சைக்கிளையே தனது நண்பனிடம் கேட்டு வாங்கி, பங்கிறாற்றியஸ் என்னிடம் விடுக்கும் அழைப்பை மறுக்க முடியாதவனாய் சைக்கிளின் முன் 'பார்' இல் ஏறி அமர்கிறேன்.

'கோயில்வீதி'யில் சென்று, ஆஸ்பத்திரி வீதிக்குத் திரும்பி ஆஸ்பத்திரிச் சந்தியை அண்மிக்கின்ற போது.....

புழுதி கிளப்பியவாறு மினிவான்களும், கார்களும் மோட்டார்ச் சைக்கிள்களும் பறந்துவர மக்கள் செய்வதறியாது நாலாபக்கமும் சிதறி ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

"கோட்டையிலிருந்து வெளிக்கிட்டுட்டானாம்..... ரவுணைத்தான் சுற்றி வளைக்கப்போறானாம்...."

– பலர் நாம் கேளாமலே சொல்லிக்கொண்டு ஓடுகிறார்கள்.

சைக்கிளைப் பலாலி றோட்டில் திருப்பி பங்கிறாற்றியஸ் விரைவாக உழக்கிக் கொண்டிருக்கிறான். ஆரியகுளச் சந்தியடியில் நிற்கும் மினிபஸ் ஒன்று புறப்பட்டுச் செல்லத் தயாரகிறது.

"நெல்லியடி பருத்தித்துறை போறாக்கள் கெதியா ஓடிவந்் தேறுங்கோ"

"தாங் யூ வெரிமச் பங்கிறாற்றியஸ், ஸ்ரான்லி றோட்டாலை கெதியாப் போய்ச்சேரும்.... கவனம், கவனம்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கிறாற்றியஸை அனுப்பிவிட்டு மினிபஸ்ஸை நோக்கி ஓடுகிறேன். மினிபஸ்ஸில் சரியாகக் காலூன்ற முன்னரே அது புறப்படுகிறது. பருத்தித்துறை வீதியில் விரைந்து ஆனைப்பந்தியை அடையுமுன்னரே 'டப்டுப்' என்ற ஷெல் அடியின் ஒலி மிக அருகாகக் கேட்கிறது. ஆரியகுளத் தடிப் பக்கமாகத்தான் விழுந்து வெடித்திருக்கவேண்டும். தொடர்ந்தும் ஷெல் அடிகள்.

"ஆ, பங்கிறாற்றியஸ்!"

–மனம் அலறுகிறது.

கோப்பாய்ச் சந்தியைச் சென்றடைகின்றபோது ஹெலி கொப்ரர் ஒன்று வடக்காகப் பறந்து போகிறது. சந்தியைக் கடந்து பூதர்மடவளைவில் மினிபஸ் திரும்பும்போது வடக்காகச் சற்றுத் தொலைவில் மற்றுமொரு ஹெலிகொப்ரர் வட்டமிடுவதும் தெரிகிறது:

பிரயாணக் காசுக்காக மினிபஸ் – பொடியன் கைநீட்டும்போது காற்சட்டைப்பையினுள் கைவிட்டுக் காசை எடுக்கையில்.... காசோடு சேர்ந்து வந்த மருந்துச் சீட்டைக் கண்டு மனம் அதிர்கிறது.

இப்போது என்ன செய்வது.....? இதிலேயே இறங்கி சற்று நேரம் பொறுத்து ரவுணுக்குத் திரும்பிப்போய் மருந்து வாங்கி வருவோமா என்று எண்ணுகின்றபோது அடையாள அட்டையை எடுத்துவர மறந்ததால் காலையில் அடைந்த கலவரமும் நினைவுக்கு வந்து உறுத்துகிறது.

அடையாள அட்டை வைத்திருந்தவர்களிலும் கூட எத்தனை தடவைகளில் இளவயதினரைக் கைது செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போய்விட்டார்கள். என்னிடம் அடையாள அட்டையும் இல்லாத இந்த நிலைமையில், சொல்லத் தேவையில்லை.

நீர்வேலிக் கந்தசாமி கோயிலை அணுகும்போது மேலும் ஓர் அதிர்ச்சி.

"புத்தூருக்கும் நீர்வேலிச் சந்திக்குமிடையிலை சோதினை செய்யிறாங்கள்..... அடையாள அட்டை வைச்சிருக்கிறாக்களை ஒண்டுஞ் செய்யாங்கள் பயப்பிடாமல் போங்கோ"

–எதிரில் வந்த வாகனமொன்று செய்தி கூறிச் செல்கிறது.

எனக்கு யோசனையாக இருக்கிறது. அப்படி 'அவர்கள்' விசாரிக்கின்றபோது அடையாள அட்டையை எடுத்துவர மறந்தமையைக் கூறி ஆசிரியர் என்பதற்கான அத்தாட்சிக்குக் கல்லூரி டயறியைக் காட்டுவோமா என்றெண்ணுகின்றபோதே டயறியின் முகப்பில் ஆங்கிலத்தில் அச்சடித்திருக்கும் 'சர்வதேச இளைஞர் ஆண்டு 1985' என்ற வாசகமும் அதற்குக் கீழாகப் போட்டிருக்கும் பெரிய கேள்வி அடையாளமும் நினைவில் வந்து நெஞ்சை நெருடுகிறது.

அதுதான் போகட்டும். கொஞ்ச நாட்களுக்கு முன்னர் தான் எங்கள் கல்லூரி அதிபர் யாழ்ப்பாணத்து மாணவர்களின் நிலைமைகள் பற்றி பரிசளிப்புத்தின அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். ஆங்கில, தமிழ்த் தினசரிகள் அனைத்துமே அவ்வறிக்கையைப் பிரசுரித்து, எங்களுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியும் அரசின் 'கவனத்தில்' உள்ள இந்த நிலைமையில்.....

பஸ்ஸினுள்ள சில இளைஞர்களுக்கும், மற்றவர்களுக்கும் பயணத்தைத் தொடரப் பயமாக இருக்கிறது. எங்களுடைய வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து, 'கந்தசாமி கோயிலின்' அருகாகச் செல்லும் கிளை வீதியில் வாகனத்தைத் திருப்பிச் சற்றுத்தூரம் சென்று வாழைத்தோட்டமொன்றின் அருகே பஸ்ஸை நிறுத்துகிறான் றைவர்.

ஹெலிகொப்ரர் வட்டமிட்டுக்கொண்டே தொடர்ந்தும் உறுமிக்கொண்டிருக்கிறது. நேரம் யுகமாகக் கழிகிறது.

நன்றாக இருள் சூழ்ந்துவிட்டது. ஹெலியின் ஓசை அடங்கிவிட்டது. வீதியில் வாகனங்களின் இரைச்சல் ஒலியும் கேட்கத் தொடங்குகிறது.

வந்த பாதையிலே பஸ்ஸைத் திருப்பி கந்தசாமி கோயிலை மீண்டும் கடக்கின்றபோது 'அப்பனே முருகா' என்று நடுத்தர வயதுடைய பெண்ணொருத்தி கையெடுத்துக் கும்பிடுகிறாள்.

பங்கிறாற்றியஸின் நினைவு ஊடறுத்துக் கொண்டு வந்து கரைகிறது.

நேரம் போய்விட்டதே என்று, என்றுமில்லாத வேகத்துடன் விரையும் மினிபஸ் மாலிசந்தியடியில் என்னை இறக்கி விட்டுச் செல்கிறது. சந்தி வளவொன்றில் நிறுத்தியிருந்த எனது சைக்கிளை எடுத்துக் கொண்டு நெஞ்சில் வேதனையைச் சுமந்தவண்ணம் வீட்டுக்கு விரைகிறேன். இப்போது குழந்தைக்கு எப்படியிருக்கும் என்று மனம் அடித்துக்கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை அண்மிக்கின்றபோது படலைக்கு வெளியே மைத்துனர் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருப்பது தெரிகிறது.

குழந்தைக்கு என்னென்றாலும்.... ?

– நெஞ்சு அதிர்கிறது. படலையை நெருங்கியதும் நெருங்காததுமாக துடித்துக்கொண்டே சைக்கிளிலிருந்து இறங்குகிறேன்.

"என்ன இதிலை நிக்கிறியள், பிள்ளைக்கு என்ன இப்ப...?"

– மச்சானிடம் அவசர அவசர அவசரமாகக் கேட்கிறேன்.

"நாங்கள் உன்னைப் பார்த்துக்கொண்டுதான் நிக்கிறம். ஐடென்ரிற்றிக் காட்டையும் விட்டிட்டுப் போயிட்டாய்.. ரவுணிலையும் புத்தூரடியிலும் கன பேரைப் பிடிச்சுக்கொண்டு போயிட்டாங்கள் என்று கேள்விப்பட்டு....."

மச்சான் பேசி முடிக்கும்வரை காத்திருக்கப் பொறுமையிழந்து மீண்டும் கேட்கிறேன்.

"பிள்ளைக்கு இப்ப எப்பிடி?"

"பிள்ளைக்குப் பெரிசா ஒண்டுமில்லை, உனக்கொண்டும் நடக்கேல்லைத்தானே ...."

மச்சானின் வார்த்தைகள் ஆறுதலைத்தர, உடுப்பைக் கூட மாற்றாமல் வாசலிற் போட்டிருந்த ஈச்சாரில் 'அப்பாடா' என்று சாய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கணம் தான்!

மறுகணமே, பங்கிறாற்றியஸின் நினைவு ஊடறுத்து வந்து நெஞ்சை அழுத்துகிறது.

எதிர்வீட்டு மணிக்கூடு எட்டுத்தரம் அடித்து ஓய்கிறது.

(1986)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN - 955 - 21 - 1015 - 7

Rs. 190/-

45661 Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org